உ

கணபதிதுணை

# பஞ்சதசப்பிரகரணம்.

இஃது

**சங்கராசாரியசுவாமிகண்**

மரபினெழுந்தருளிய

**வித்தியாரண்யசுவாமிகள்**

வடமொழியினாற்செய்து

தென்மொழியினால்வியாக்ஞானஞ்செய்திருந்ததற்கு

சமிவனச்சேத்திரமாகிய

கோயிலூரென்னுஞ்சிவஸ்தலத்தின்கண்ணெழுந்தருளிய

நித்த சுத்த புத்த முத்த சத்தியபரமானந்தாத்துவித

சொரூபராகிய

**முத்துராமலிங்கசுவாமிகளது**

மாணாக்கராகிய

கண்டநல்லூர்

**நாகலிங்கசுவாமிகளாற்**

பாடலாகவருளிச்செய்து

தொண்டமானென்னும் புதுக்கோட்டை

**சொக்கலிங்கக்கவிராசரால்**

பார்வை யிடப் பட்டு

திருநெல்வேலி

முத்தமிழாகர அச்சுக்கூடத்தில்

தச்சநல்லூர்

முத்தழகப்ப பிள்ளை யவர்களால்

பதிப்பிக்கப்பட்டது.

சூசயருஞ சுக்கிலஹூ

உ

சிவமயம்

# பஞ்சதசப்பிரகரணம்.

## பாயிரம்.

### விநாயகர் துதி

ஆரணம்பரவுந்தேவரின்முதலாமருள்பரசிவவுருவான *
வாரணமுகனைச்சிவன்சிவையுதவவந்துலகத்துறுமடியார் *
பூரணஞானமடைந்திடத்தடையாய்ப்பொருந்தியவிக்கினமகற்றுங் *
காரணமானகணேசநின்பதத்தைக்கருதிடவருள்புரிந்திடுவாய். (க)

### நடேசர் துதி

அற்புதமானசபைதனிற்புலிபாம்பாதியமுனிவர்கள்வணங்கப் *
பொற்புறுநடனம்புரிந்தருள்செய்யும்பூரணநடேசனென்றோதுந் *
தற்பரவடிவேகற்பனையுருவாய்ச்சகத்தெனக்குறைத்திடவருள்வாய் *
சிற்பரானந்தசிதம்பரமூர்த்திதில்லையம்பதியில்வாழ்தேவே. (உ)

### சரசுவதி துதி

வேதமாதியதாஞ்சாத்திரமனைத்தும்விரித்தவையரன்முதலானோர் *
கோதிலாவாக்கிலிருந்துபல்லுயிர்க்குங்கூறலாலுலகமாதாவா *
மோதிடச்சகலவுயிர்கள்வாக்கினுநீயுறுவதாற்பூரணியாகு *
மாதியேவெண்டாமரையினிலுறையுமம்மையேயெனக்கருள்புரிவாய். (ங)

## செல்வவிநாயகர்துதி.

வேறு.

உலகமெலாந்திருக்குருவாய்க்கண்டநல்லூரொளிருமடியார்மடத்திலோது
ஞானப், பலனுதவுஞ்செல்வவிநாயகனேமேலோர் பரவும்வித்தி யாரண்யர்
பாதம்போற்றி, யிலகுமவரோழைகளுக்கெளிதாய்த்தோன்றவிசைத்தபதினை
ந்துபிரகரணந்தன்னைக், கலனமறவடியேனுங்கவியாய்ச்செய்யக் கருதினதா
லவ்வண்ணங்கடாட்சிப்பாயே. (ச)

## குருவணக்கம்.

வேறு.

கோதிலாக்கழனிப்பதிதனிலடியர்குழாத்தொடுங்குருவடிவாக
நீதியாயெழுந்தமுத்துராமேசனிகராறுதிருவடிதொழுது
போதமாம்வித்தியாரண்யவீசன்புகல்பஞ்சதசப்பிரகரண
மோதுதலத்துவிதமதாலதனையொப்பறும்விருத்தமாயுரைப்பாம். (ரு)

## அவையடக்கம்.

உலகதின்மேலாம்வியாசமாமுனிவரோதியவேதமாதிகளை
நிலவியபெரியோர்தங்கள்பாடைகளானிகழ்த்தினரவர்கள்போலியானுங்
குலவியஞானமடைந்திடவிந்நூல்கூறுவன்றமிழ்க்கவியதனு
லிலகிதிற்பஞ்சவிலக்கணக்குறைகளிருப்பினுமிகழ்ந்திடார்பெரியோர். (சா)

## கவியினளவுகூறுகின்றது.

சித்திரதீபிகைநூற்றுப்பதினேழுகவியாந் திர்ப்திதீபக்கவியுமவ்வணமேயா
கு, மொத்துறுநாற்பத்தொன்றுகூடத்ததீப முணக்குமைம்பத்தொன்பது
வாந்தியானதீபந்தான், புத்தியுறுநாடகதீபிகைபதினெட்டதன்மேற் புகறத்
வவிவேகமதின்கவியிருபத்தெட்டா, மெத்துபஞ்சபூதமதின்விவேகமுப்பா
னென்றுவிளங்குபஞ்சகோசமெனும்விவேகமுமீரேழாம். (எ)

துவிதவிவேகத்தினதுகவிமுப்பானென்ருஞ் சொல்லுகின்ற மகாவாக்யவி
வேகமுமாருகுஞ், சவியுறும்யோகானந்தநான்குடனேயாறு சாற்றுமான்மா
னந்தமூன்றுடனுறைந்து, கவியாரேருடையெட்டுமத்துவிதானந்தங்கழறுக
விபதினென்ரும்வித்தையானந்தங், குவிவிடயசுகம்பதினேழ்பாயிரமெட்டு
டனேகூடியதுகவியாறுநூறுபதினென்றே. (அ)

பாயிரமுற்றிற்று.

முத்துராமலிங்கசுவாமிகள் திருவடிவாழ்க.

# முதலாவதுசித்திரபடதீபவிலக்கண

## முதாத்தவத்தியாயம்.

இலங்கியவனேகமானவிலக்கணவிலாசம்பெற்ற
புலமின்மாமாயாமோகம்பொசித்திடரூழிலாயென்றுங்
குலவியசங்கராசாரியகுருமூர்த்திதங்கள்
சலசமாமலரின்பாதந்தனைநிதந்தொழுதல்செய்வாம். (௧)

உலகின்மிசைவித்தியாரணியமூர்த்தியுயிர்கடனைரக்ஷிக்குநிமித்தமாக், விலகுமெலாவேதாந்தத் தருத்தமியாவு மிருதயத்திற் சேகரஞ்செய்தவையெல்லாமு, நிலமதனிலதிகரிக்கமாட்டாதோர்க்கு நிகழுமவைபடித்தாலுமதினர்த்தங்க, ளிலகிடவேதெளிந்தறியமாட்டாதோர்க்குமெளிதாகவேதாந்தத்துண்மையாகும். (௨)

பொருள்களைக்கண்டனுபவித்துமோக்ஷப்பேற்றைப்பொருந்தவெலாவேதாந்தமுதாத்தவாறே, யருளதனாற்றன்மனதிலிருக்குமான்ம வனுபவத்தைப்பஞ்சதசவத்தியாயத்தா, லிருளறவேவெளிபண்ணவேண்டுமென்றேயிலகுமதின்முதலத்தியாயந்தன்னா, லருளுமத்தியாரோபவபவாதங்களானவிருளாயத்தைத்தழுவிக்கொண்டே. (௩)

பரமான்மாவிடமதனிலாரோபிக்கப் பட்டசெகலெக்ஷணஞ்சித்திரமல்லாதுதிரமாகவுண்மையலவென்னுந்தன்மை சித்ரபடதிட்டாந்தமதனாற்சொல்லின், வரமானபடமதனிற்சித்திராரோபம்வருவதுபோற்பரமான்மாவானதன்னி, லரிதானசெகசீவபரமாஞ்சித்ரமாரோபப்பட்டதெனவறியவேண்டும்.()

எழிலுள்ளசித்ரபடந்தானேதானாயிருக்கிலவைவெளுத்தபடங்கஞ்சிபூசின்வழுவில்பசைப்படங்கரியாற்சித்திரங்கள் வரைந்தபடம்லாஞ்சனமாம்வன்னம்பூசின், பழியிலிரஞ்சிதபடமாமதுவேபோலப்பரமானவான்மாவுக்குபாதிநான்கு, மழிவிலவத்தைகளுன்குமெவ்வாறென்னிலான்மாவோருபாதியையுமடைந்திடாமல். (௫)

தானாகவிருக்கையினிற்சித்தாமாயைதனையடையிலவ்வியாகிருதனாகு
மீனமுறுஞ்சமட்டியதாஞ்சூக்கபூதமெழுகின்றசரீரங்களோடுங்கூடி
னூனமறுபொன்கெற்பன்சமட்டிதூலவுடலோடும்பூதங்களோடுங்கூடி
னாதவிராட்புருடனென்றுபேராமறிவாயோர்பரமான்மாவானதானே. (௬)

சித்ரபடமாகிலந்தப்படத்தைப்பற்றித்திகழ்கின்றசித்திரங்களேதாமென்னி
லுத்தமமாம்பிரமாதிதம்பமீறாயுத்தமமத்திமமதன்மமாகத்தோன்றுங்,கொத்
தானபிராணிகளுமலைகளாறுகோபுரங்கண்முதலானசெடங்கள்யாவுஞ், சத்
தானசுபாவசைதன்னியத்திற்சார்கின்றமாயையதாம்வன்னத்தாலே. (௭)

புரிவதுவாஞ்சித்திரங்களெனவேயோர்வாய் புகலுமிதேசித்திரமாமெனிற்
சித்தாயும், விரிவுபெறுசடமாயுமிருவகுப்பாய் மேவுவதேனெனிற்படத்தி
லாரோபித்த, சரீரங்கட்காபாசப்பிடவைதன்னைத்தரிப்பதுபோற்சைதன்யசி
த்திரத்திற், றெரிவுறவேபிராணனுளதேகங்கட்குச்சிதாபாசாள்கற்பிக்கப்ப
ட்டதாகும். (௮)

திகழுமவர்தாமுமேசுபாவமானதிருக்குருவமல்லவெனத்தெரிவாயானா
லிகழிலாமலையாறுகோபுராதிக்கென்னத்தாற்சிதாபாசாளில்லையென்னிற்[ல
றுகளிலாச்சித்திரத்தின்மலையாதிக்குத் தூசாதிதேவையிலாச்சுபாவம்போ
நிகழ்வானசிருட்டியகப்பட்டதானநிலமாதிக்காபாசாடேவையில்லை. (௯)

செறிவானபிராணிகண்மாத்திரத்திற்றேன்றுஞ் சிதாபாசாள்கற்பனைக்குப்
பலனேதென்னிற், பொறியானநால்வகையாஞ்சரீரம்பெற்றுப்புகல்சனனம
ரணசமுசாரந்தன்னை, வெறியாகப்பாவித்தல்பலமதோர்வாய்மேவுசமுசார
ங்கள்சீவர்க்கானாற், பிறிவானவாதியர்லௌகீகர்தாமும்பேசுவதேனான்மாவு
க்கெனவேயென்னில். (௰)

ஆபாசப்பிடவையதன்வன்னந்தன்னை யதிட்டானப்பிடவையதன்வன்னமாக
வாபாசர்சொல்வதுபோற்சிதாபாசன்று னடைந்தசமுசாரத்தையதிட்டான
த்தி, லாபாசமாயேற்றுகின்றதற்கேயஞ்ஞானமேதுவெனவறிவாயானா, லா
பாசரஞ்ஞானசொரூபமேதிங்கதைநீக்கவுபாயமேதருள்வாயென்னில். ()

தன்னிடத்திற்கற்பனையாஞ்சீவனுற்றசமுசாரமவனையுந்தன்சுபாவமாக,வுன்
னுகின்றமயக்கமதேயஞ்ஞானந்தா னொருபோதுஞ்சமுசாரமடையவில்லை,
யன்னசமுசாரிசமுசாரம்பொய்யென்றறிகின்றவிவேகமதேயஞ்ஞானத்தை
ப், பின்னமுறத்தள்ளுகின்றவுபாயமோர்வாய்பிறங்குமந்தவிவேகமெதுசெ
ய்தாற்கூடும். (௰௨)

சீவசெகமான்மாவைக்குருமுன்பாகத்திடமுறவேவிசாரித்தாலதுவுண்டோ
ர்வாய், பாவமுறுமோட்சமதாமவத்தைதன்னிற்பலமாகமிஞ்சுவதாமான்மா
வொன்றைத், தீவரமாய்விசாரிக்கவேண்டுமென்றித்திகழ்வந்திபுத்திரன்போ
ற்றேன்றுகின்ற, சீவசெகவிசாரத்தாற்பலனேதென்னிற்றிகழ்கின்றபரமா
ன்மாவிடத்திலென்றும். (௰௩)

ஒருவிசாரமுமில்லைவிசாரமெல்லா மோதுசீவன்செகத்திற்சூக்மமாக, மரு
வியதைவிசாரிக்கிலவ்விரண்டும்வாதிக்கப்பட்டவுடன்பரமான்மாவே, வெரு
ளறத்தானாய்மிஞ்சுமென்னவோர்வாய்விசாரித்தஞானிகளுக்கவ்விரண்டு,
மருவலறவாதித்தால் விவகாரந்தான் மறுபடியுந்தோன்றுவதேனென்னிற்
சொல்வாம். (௰௪)

சுழுத்தியினிற்சீவசெகமிலாதுபோயுஞ்சொல்கின்றமுத்தியிலையாதலாலே,
வழுத்துமவைதோன்றாதுவாதையல்ல மருவியவவ்விருவகையுமித்தையெ
ன்னு, மழுத்தமுறுநிச்சயமேவாதையாகு மறிவாயவ்விருவகையுந் தோன்
றுமாயின், விழுத்தகுநற்பரமான்மாமாத்திரந்தான் மிஞ்சுவதெப்படியெ
ன்னிற்பரமான்மாவே. (௰௫)

அழிவற்றவுண்மையதாம்பொருளென்கின்ற வானவொருநிச்சயமேமிஞ்சுகி
ன்ற, திழிவுற்றசெகத்துமறைகின்றதல்ல விலாதிருங்காற்சீவன்முத்திகூடா
தோர்வாய்,விழுமையுறவிருவகையுமெந்தமட்டும்விசாரிக்கவேண்டுமெனின்
விசாரத்தாலே, செழுமையுறவருஞானம்பரோட்சமோடுதிகழுமபரோட்ச
மெனவிரண்டாமன்றே. (௰௬)

மேலுரைத்தவபரோட்சஞானம்வந்தால் விசாரமுடிவாமறியிவ்விருஞானத்
துக், கோலமிடுமிலக்கணமேதென்னிற்பிரம மொன்றேயுண்டெனவறிதல்
பரோட்சஞானந், தூலமிலப்பிரமமேநாமென்கின்றதுணிவபரோட்சஞ்ஞா
னமறிவாயிந்தக், கோலமுளவபரோட்சஞானந்தன்னைக்கொடுக்கின்றவிசா
ரமேதென்னிற்சொல்வாம். (௰௭)

திகழுகடாகாசமகாகாசம்பாண்டசெலமதினாகாசஞ்செல்லாகாசம்போ, லி
கழ்விலாக்கூடத்தர்பிரமஞ்சீவனீசனையும்பகுத்தறிதல்விசாரமோர்வாய், பு
கலுகடாகாசமகாகாசங்கண்டோம் பொருந்துகடசெலமேகசெலத்திற்றோ
ன்றி, நிகழுமாகாசவிலக்கணமேதென்னினிகழ்த்துகடசெலமதனிற்றிட்ட
மாக. (௰௮)

மேகமுடனுடுக்களொடு தோன்றும்வான மேவுசெலாகாசமகாகாயத்தின்கண், மேகசெலமதினனுமானத்தாற்கண்ட மேவுபதிவிம்பஞ்செல்வானமோர்வாய், தாகமுறுகூடத்தர்முதலாநான்கு சைதன்யந்தனைப்பகுத்துக்காட்டுமென்னி, லாகமதின்விகாரமிலாவறிவேயான வதிட்டானம்வளைபடல்கூடத்தரொன்றும். (௧௯)

வளைபடாததுபிரமமாகுமென்றுமருவான்மகற்பிதமாங்கரணந்தன்னிற், பிழையிலாப்பிரதிவிம்பன்சீவனென்றும் பிரமத்திற்கற்பிதமாமாயைதன்னி, லிளையாதபிரதிவிம்பனீசனென்றுமிவ்விதமாமௌவறிவாயித்தேகத்திற், களையாகநானென்னுஞ்சீவனன்றிக் கருதுகூடத்தரொங்கேயென்னிற்சொல்வாம். (௨௰)

வேறு.

செலவானிற்கடவான மறைபடுதல்போலச் சீவனாலான்மாவு மறைபடுதலாலே, நிலவுவதாமிரண்டுமொன்றாய்த்தோற்றுமெனவறிவாய் நிகழ்சீவனான்மாவைப்பகுத்தறியாதெதனா, னலமிலிதுவேமூலாக்ஞானமெனவறிவாய்நவிலுமிந்தமூலாக்ஞானமதானவவித்தை, யுலவுகின்றவெத்தனையாமென்னிலாவரண மோதுகின்றவிட்சேபமெனவிரண்டாமறிவாய். (௨௧)

வேறு.

இந்தவிருவகைக்குமிலக்கணமேதென்னினிலங்குநானான்மாவைக்காணேனென்று, தொந்தமிலாவறிவாகவிருந்துமான்மாத் தோன்றவில்லையெனுமயக்கமூடமாகும், பந்தமுளகிளிஞ்சிதனைவெள்ளியென்றுபார்ப்பதுபோலறிவுவடிவானதன்னை, யந்தமுறுகற்பிதவாங்காரியாகவறிவதுவேவிட்சேபமென்னவோர்வாய். (௨௨)

ஆதித்தனிடமிருளானிராதுபோலவப்பிரகாசமதானவஞ்ஞானந்தான், றோதற்றசுபமானவான்மாவின்கண்டோன்றுவதற்கிடமில்லையிதுநமக்கும், வாதற்றசம்மதமாமெனிலஞ்ஞானகாரியமாமாவரணம்வந்ததெவ்வா, றோதுற்றவிதுவுமில்லையெனிலவற்றையொழிக்கின்றசுருதிபடிப்பதுவேனென்னில்.(

மன்னுநானஞ்ஞானியென்பதாகவருகின்றவனுபவமுஞ்செடத்திற்றோன்றுதுன்னுகின்றசித்தினிடங்காண்பதாலே யுள்ளதெனவறிவையனுபவங்கண்டாலும், பின்னமிலாயுத்தியினிற்கூடாதென்னிற்பிரத்திட்சமாய்க்கண்டகாரியத்திற், பன்னுகின்றயுத்தியதுதேவையில்லைப்பார்த்தறியாததில்யுத்திவேண்டுமோர்வாய். (௨௪)

தூணாகன்னியாயுமதுபோலச்சங்கைசொன்னாலல்லோபுத்திகூடமாமென்னிற், கோணாதவனுபவத்தைக்கடந்துசங்கை கூடிடாததலாற்கூடத்தர்க்கும் வீணான்வஞ்ஞானமாவதற்கும்விரோதமிலைக்கூடியேயிருக்குமோர்வாய், வீணாமிவ்வஞ்ஞானந்தள்ளுகின்றவிரோதியேததுவெங்கேகாண்பதென்னில்.

சுருதிவிசாரக்ஞானமஞ்ஞானத்தைத்தொலைக்கின்றவிரோதியிதுஞானமுற்றோர், மருவுவகாலவசிட்டத்திலிருக்குமோர்வாய்மாறானவிட்சேபமென்னப்பட்ட, விருமையிலாவகங்காரியாவதாருவிவனெதனாற்கற்பிக்கப்படுவதானான், கருதுமிவர்க்கதிட்டானமேதாமென்னிற்காரணகாரியதேகமுடையவான்மா. (௨௬)

கழறுமகங்காரியாமஞ்ஞானத்தின்காரியவிட்சேபக்கற்பிதமாமன்றேன் வளருமிவனதிட்டானசைதன்யந்தான்வரமானகூடத்தனெனவேயோர்வாய் தளருமிந்தக்கற்பிதமாமகங்காரிக்குஞ்சைதன்யசுபாவமதாமான்மாவுக்கு மொளிருகின்றசுபாவசித்தபேதமெங்ஙனுரைக்கின்றபிராந்திசித்தாபேதமெங்ஙன். (௨௭)

விளங்குமிந்தவதிட்டானக்கிளிஞ்சிலுண்மை வெள்ளியெனுமாரோபமித்தையென்று, விளம்புவதுசுபாவசித்தபேதமீது வெள்ளியெனுமொருமையாமயக்கம்போல, விளம்புநான்றானென்றிங்கொருமையாகமேவுமயல்பிராந்திசித்தாபேதமோர்வாய், விளம்புமிதுவென்னுஞ்சாமான்யம்போலும்வெள்ளியெனச்சொல்கின்றவிசேடம்போலும். (௨௮)

தோற்றுமான்மாவுமகங்காரிதானுஞ் சூழ்ந்தெங்குங்காண்பிவிக்கவில்லையென்னிற்,போற்றுகின்றதேவதத்தன்றானும்போனான்புகலுமெக்ஞதத்தன்றான் கண்டோனீதான், சாற்றினவனான்றான்கேட்டவனாமென்னுந்தகும்விவகாரத்தாலேவெள்ளியீது, மாற்றுமிதுபிடவையிதுகடமென்போற் சாமானியவிசேடமதுந்தோற்றுமோர்வாய். (௨௯)

இப்பேதஞானமதாலுமக்குலாபமேதென்னிற்றானென்றசொல்லுக்கர்த்தம் வெப்பமுறுநானென்னுமகங்காரிக்குவேறான்மாவெனவறிதல்பலனென்றோர்வாய். தப்பிலாக்கடபடந்தான்கோபுரந்தானெனவோதுபொழுதிலசேதனங்கடன்னி, லொப்பிலாத்தானெனுஞ்சொல்வரலாமோதானுரையென்னிற் சிதாபாசனிலாததாலே. (௩௰)

செடமானகடபடமுஞ்சிதாபாசன்சேர்ந் திருப்பதாற்சித்தென்னும்பிரமனு
தி, யுடன்மேவுதம்பபரியந்தமானவுயிர்களுமேபரமான்மாவொருவர்தன்னி
லிடமானவிருவகைக்கற்பிதங்களாலே யியாதினுந்தானெனவோதுஞ்சொற்
களெங்குந், தடமானவான்மாவுண் டெனவேகாட்டு தாதலாற்றனெனுஞ்
சொல்வரலாமெங்கும். (௩௧)

தானெனுஞ்சொற்போலவிதுவதுவென்சொல்லுஞ்சகலபதார்த்தங்களினுந்
தோன்றலாலே, யீனமறவிவைகளுமான்மாவாமென்னி னிதுவதுதானல்ல
துபொல்லாதுபோல, மானவிவைபடுபாதிசாமான்யந்தான்வருகுதலான்மு
மூவகினும்வருகவில்லே, யானதினு லிதுதானல்லதுதான்பொல்லா தாமென்
றுசகலவிடயத்துந்தோன்றும். (௩௨)

தானெனலான்மாவெனவும்விசேடமெல்லாஞ் சத்தியின்கற்பிதமெனவுஞ்சி
த்தாந்தங்கா, ஞானமிலாவிதியாருமறியாதெத்தா லுனையெனின்முன்சொ
ன்னவறியாமையாலே, யானதாதான்மியமாமத்யாசத்தை யடைந்தவர்கள்
சாமான்யவிசேடநன்று, யீனமறவெளியாகவேறுபட்டே யிருக்கினுமொன்
றுய்க்கண்டாரெனவேயோர்வாய். (௩௩)

இந்தவத்தியாசம்போம்வழியேதென்னி லிலங்குவிசாரக்ஞானத்தாலேமுன்
னந், தொந்தமதாமஞ்ஞானவரணமாதிதொலேயுமெனச்சொன்னதுவேயுத்
தரங்கா, ணிந்தஞானிக்குக்காரணவஞ்ஞானமிறந்துமதன்காரியமாம்விட்
சேபந்தா, னந்தமுறுதிருப்பதெவ்வாறெனிலதற்கிங் கஞ்ஞானங்கருமமெ
னவுபயவேதாம். (௩௪)

அவையிரண்டிலஞ்ஞானநசித்துங்கன்ம மழியாதாற்கருமம்வனா யிருக்கு
மோர்வாய், கவையுறுகாரணமதுதானட்டமாயுங் காரியங்களிருக்குமென
ல்கூடாதென்னி, னவையிலாவுங்கடர்க்கமதத்தின்மூலநசித்தாலுங்காரியங்
கள்சற்றுநேரஞ், சுவையுறவேயிருக்குமெனவுரைத்தருனே சொல்கின்றந
மக்குமவைசரியாமோர்வாய். (௩௫)

அப்படியேகாரணம்போய்க்காரியம்பின்னமர்ந்தாலுங்கொஞ்சப்போதமர்த
ல்வேண்டு,மெப்படியோர்புருடாயிற்றுள்ளமட்டு மிருக்குமெனல்கூடாதெ
ன்றிசைக்கிற்சொல்வா,மொப்பிலிரண்டொருதினத்தில்வருநூலென்னவோ
துகாரணமானவஸ்துவெந்துந், தப்பிலாதொருசாமங்காரியந்தான்சாருமெ
னிலளவில்கற்பந்தோறுமுள்ள. (௩௬)

ஐயிலஞ்ஞானப்பிரமைநட்டமாயு மதனில்வரும்விட்சேபம் பிராரத்துவத்
தோ, டுய்யாமலழியுமெனல்சொற்பமன்றியோதுகின்றவிஸ்தாரமல்லவோர்
வா, யெய்யாமல்வாயடிகையடியேயன்றி யிதற்குமேபிரமாணமிலையோவெ
ன்னின், மையாகவாயடிகையடிகள்செய்தன்மருவுமுங்கடர்க்கமதத்தாகும
ன்றி. (௩௭)

நமக்குமேசுருதியுத்தியனுபவங்க ணன்றாகமூவகையு முண்டென்றோர்வாய்
தமக்காகாத்தார்க்கிகன்சண்டைபோதுஞ் சாற்றுகின்றசித்தாந்தமேதாமெ
ன்னி, லெமக்காகாவஞ்ஞானமுடையோர்நான்றானெனுமிருவோரையுமொ
ருவனாகக்கண்டே, யமுக்குண்டுகலங்கியேசமுசாரத்திலடிபடுவாரிந்தவிரு
வகையு நன்றாய். (௩௮)

வேதாந்தஞானிகடான்பசுத்தறிந்து விமலமுத்தராவரெனல்சித்தாந்தங்கா
ண், வேதாந்தமல்லாதசாத்திரத்தால் வேறாகாமுத்தியதுவிலையோவென்னி
ற், பேதானமற்றசாத்திரங்களெல்லாம்பிராந்தர்களைக்குறித்துமேசெய்ததா
லே, கோதானகலக்கமேற்கலக்கமாகக் குழம்புமலாற்பிராந்தியதைப்போக்
காதோர்வாய். (௩௯)

இன்னவின்னசாத்திரகர்த்தாக்கடானுமிதுவிதுவைப்பொருளென்றுகலங்க
லெங்ஙன், மன்னுமவர்பரம்பரையாய்த்தெளிவுபெற்ற வகையெங்ஙனெனி
லுலகாயுதன்மூடாளுஞ், சொன்னவிரோசனன்யுத்திசித்தாந்தத்தாற்றூலச
ரீரந்தனையேயான்மாவென்பர், பின்னமுறுசாருவாகனுமேசீவன்பிரிந்தவுட
ன்சரீரமதுமரிப்பதாலும். (௪௰)

ஊனமிலாநான்கண்டேன்கேட்டேனென்னும் யுத்தியாற்றேகமலப்பொறிக
ளென்பார், மானமுறுசிலசாருவாகன்பிராணன் மாறில்லிந்தியங்கண்மரு
வாதாலே, யூனமிலாப்பிராணனேயான்மாவென்பனுபாசகர்கண்மனமதுதா
னிலாதபோதிங், கீனமுறுபிராணனதுதெரியாதாலே யெழுகின்றமனமது
வேயான்மாவென்பர். (௪௧)

வேறு.

சணிகவாதிகள்புத்தியில்லாவிடிற்சார்மனஞ்சலித்தோர்நிலையில்லதா
லணிசெய்புத்தியுயிரெனவோதுவரறிவிலாதபௌத்தர்சுழுத்தியிற்
றணிசெய்புத்திமுதலிலதாலுயிர்சூனியம்மெனச்சொல்வர்சுழுத்தியின்
மணிசெய்பட்டராசாரியர்சூனியமாயிருந்துதெனக்கண்டுகூறிடும். (௪௨)

ஆனதாலுயிர்சத்தெனவோதுவரந்தராளருமாகமக்காரருந்
தானமேவுயிர்சூக்குமநாடியிற்சஞ்சரிக்கின்றதாலணுவென்பர்க
டீனமானதிகம்பரர்ஞானமுஞ்சிரசுபாதம்வரைகலந்துள்ளதா
லானவான்மாப்புருடனளவையதாகவென்றும்விளங்கிடுமென்பர்கள். (௪௩)

ஓதிடும்பிரபாகரர்தார்க்கிகருற்றவான்மாப்பரிச்சின்னமாயிடிற்
றீதடைந்திடலாலதுவின்றியேதிகழுபூரணமுஞ்செடமென்பர்கள்
காதலோடுறுபட்டர்மதத்தினிற்கண்படைதனிலேசெடமாகியு
மோதுசாக்கிரத்தேயறிவாகியுமுற்றதாலுயிர்சிற்சடமென்பரால். (௪௪)

ஏற்றசாங்கியர்பூரணமானதுக்கிரண்டிலக்கணங்கூடாதுயிருமே
யாற்றுசிற்பரிபூரணமாமவரவரிடத்திற்சுழுத்தியுறுஞ்செடம்
போற்றுமவ்வுயிர்கட்குச்சுகதுக்கம்புரியுமூலமதாஞ்சத்தியென்பர்க [ம்]
டேற்றுயோகியதுபுருடன்றனைச்சேர்ந்திடாதெனிற்சேட்டைசெய்யாதினு(

அடக்கியாளுவரில்லாவிடிலுயிர்க்கானபெந்தமுமோட்சமுமில்லதால்
விடக்கிலாளவரன்றியோரீசுரன்வேறதாமெனும்பாதஞ்சலிமதந்
தொடக்கிலாப்பொருளீசுரனுமிடிற்றோன்றுசீவரடங்கியசைந்திடா
ரடக்கியாளையுமந்தரியாமியேயாளலாலவரோபரமென்றிடும். (௪௬)

தார்க்கிகாதிகரணமிலாவிடிற்சங்கற்பாதியுருதபடியினு
லேற்கையானவிரணியகெற்பனேயீசனந்தரியாமியலவெனுந்
தீர்க்கமானவிசுவரூபமதந்தேகம்விட்டுக்கரணமில்லாமையா
லார்க்குமாயன்விசுவரூபந்தனிலஸ்தபாதமளவறக்காட்டலால். (௪௭)

வேறு.

பரமானவீசன்விராட்டெனவோதும்பிரசா பத்தியருமெங்குங்காலெங்குங்
கையாக, விரவுவதீசுரனுறன்மரவட்டையாதி மே விடுமீசுரனுகவாகையா
லயனே, வரமானவீசனலால்வேறலவென்றுரைப்பர்வயிட்டுணுவரவ்வயனு
ம்விண்டுவினுபிபிலே, யுரமாகவந்ததனுலவரீசனென்பரோதுசைவாகமத்த
வருஞ்சிவனுடையபாதம். (௪௮)

காணுதபடியினற்சிவனீசனென்பர் கணுதிபத்யமதத்தரு முப்புரமெரித்த
போது, கோணுகமணிபவருங் கணபதியைப்பூசை குயிற்றியதாற்கணபதி
யேயீசுரனுமென்பர், நாணுதபுராணிகருமிவ்வாறுகூறு நலமானதெய்வமெ
லாம்புண்ணியமாந்தலமா, யேணுகவிளங்குகையாற்றலங்கள் பரனென்பரி
லங்குதன்மசாத்திரனுந்தலங்கள்விருட்சமதால். (௪௯

விளங்குகையான்மூங்கிலரசெருக்காதிகளையுமேவுமவர்குலதெய்வமாய்ப்பூ
சைசெய்லாற், றுளங்குமரமீசனென்பரின்னமதவாதர் தொந்தமுறுதங்கட
ங்கண்மதவபிமானத்தால, விளங்கிடுமெந்திரவாதம்ரசவாதமுதலாய் மேவுசா
த்திரந்தொடுத்தேயலைந்தார்களிங்ஙன், களங்கமுறுமஞ்ஞான சாத்திரகர்த்
தாக்கள்கலங்கியலைகின்றவழிசொன்னேமென்றறிவாய். (௫௰)

வரும்யாருமவஸ்துநிருணயம்பண்ணுதலைந்தால்வஸ்துநிருணயம்பண்ணப்
போறதெவ்வாறென்னின், வரமானபிரமமொன்றே பொருண் மற்றதெல்லா
மாயைமயமெனுஞ்சுருதிவிசாரமதனாலே, யருவுருவைநிருணயிக்கவேண்டு
மெனவறிவா யானுலிவ்வாதிகட்கு விரோதமலோவென்னி, லருவொன்றே
பொருளெனும்வேதாந்திகட்குமதையே யானைகண்ட குருடனைப்போற்கா
ண்சமையத்தவர்க்கும். (௫௧)

வேறு.

பின்னமுறவெவ்வளவும் விரோதமிலையெனவறிதி பிரமமொன்றுண்மைமற்று
ஞ், சொன்னபொருள்சகலமுமாயைமயமென்பதிற்றோன்றுமளவென்னவெ
ன்னி,லுன்னலுறுமிவ்விதத் தோதுமுப்பத்துமொண் டுபேரிடதமளவையோர்
வாய், பன்னுமிதுவனைசொனது சித்திலக்கணமதாம் பகரும்வேதாந்தமதி
லே. (௫௨)

மொழிகின்றமாயையினிலக்கணமதேதெனின் மோகமுஞ்செடமுமெனவா
ங், கழிகின்றசகமதினிவ் விருவிதமதேதெனிற் காணுங் கடங்கண்முதலா,
யொழிகின்றபூதபௌதிகமெலாஞ்செடமதாமொளிரவையசத்தாகவும் [ம்
மொழிகின்றசத்தாயும்வேறுபடவின்மையான்மோகலெட்சணமுமெனவா(

செகசிவபரமெலாமுண்மையாய்வருவதைத்திகழ்மாயையென்பதெங்ஙு
னிகரிலாமாயைகற்பிதமெலாம்லௌகிகர்நினைவதனிலுண்மையெனவு
முகமானயுத்தியினிலநிர்வாச்சியம்மெனவுமோதும்வேதாந்தஞானிக்
கிகலானமூன்றுகாலத்தினுமிலாதாயிருக்குமென்றறிகுவாயே. (௫௪)

இந்தமாமாயைகற்பிதமதெக்காலமுளதெக்காலமில்லையென்னிற்
பந்தமானனவுகனவுளபொழுதுவிரிசித்திரபடமெனவிருக்குமெனவுஞ்
சொந்தமுளகண்படைசமாதிமூர்ச்சைகளிற்சுருட்டினபடங்கள்போலக்
கந்தலுறவில்லாதகாலமெனவறிகுவாய்கழறுமிம்மாயைதானும். (௫௫)

சுதந்தரமதோவநுபராதீனமோவெனிற்றுகளில்பரமன்றிவேறு
பிதம்பெறவிளங்கவிலையாலதுபராதீனமென்றுமதசங்கமாகத்
திதம்பெறுவதானகூடத்தனைச்செடமாஞ்செகத்தினதுவடிவமாயும்
பதம்பெறுசிதாபாசரானசீவேசராய்ப்பணலாற்சுதந்தனாயுமாம். (௫௬)

இவ்வாறுகூறிலம்மாயையாற்பிரமமதிலக்கணங்கெட்டுதென்னிற்
றெவ்வானமாயைகூடத்தனைத்தொடராதுசீவசெகமுண்டுபணலா
லெவ்வமறுசொரூபலெட்சணமதுகெடாதெனவியற்றமுன்பிரமத்தையே
யொவ்வாதசீவசெகமாகவவைபணலாயுனைத்தநீர்பிரமத்தையும். (௫௭)

விரவவைதொடாமலேசெய்ததென்றீரிருவிதங்களுங்கூடாதெனிற்
பரவுமவைகூடாதுகூட்டுதல்சுபாவமாய்ப்பகரலால்வேதமிதினி
திரமுறமயங்கவேண்டாமறிதிமாயையின்செயலெலாமிந்தவண்ண
முரமுறவிருக்குமோமாயைக்கிவ்விதசத்தியுறலெங்கிருந்தாமெனில் (௫௮)

ஒருமாயைதனில்வந்தபஞ்சபூதங்களிலொன்றுவெளியொன்றுசலனம்வரு
மொன்றுசூடுகுளிரொன்றுகடினமதொன்றுவருதலாலிந்தமாயை, மருவா
தவவைகளைக்கூட்டுதல்சுபாவமிதுமாயையின்சத்தியல்லாற், பொருவில்வே
றென்றினல்வந்ததலவென்றுமேபுகல்வதாமறிகுவாயே. (௫௯)

செகத்துமாயாமயமென்பதனையாவருந்தெரியாதவிதமேனெனிற், றெருகுத்
தவிந்திரசாலமுடையவனையறியும்வரைதோன்றுமவையுளதுபோல, வகுத்
தமாயையினதிட்டானமதையறியும்வரைமாயையுளதாகவெய்தும், பகுத்த
தினதிட்டானமோர்ந்திடிற்பொய்யெனப்பயிலுமெனவறிகுவாயே. (௬௰)

வேறு

வாதிகளியாவருமாயையதனுட்டானே மருவுமிதுவதுபொருளென்றுரைத்
தலேதா, லாதியிலாச்சந்தேகசொரூபமானவவைக்குமேபரிகாரந்தேடாமற்
றுன், றீதானசங்கையினுட்சங்கையாகத்தியங்குவதற்கஞ்ஞானமூலமோர்
வா, யேதமுறுமிம்மாயைபோக்கலெவ்வாறீதுபொருளலமாயையெனவே
யோர்வாய். (௬௧)

அறிவுறுகண்ணுற்கண்டுநிலையாகா தவாகாயபட்டணம்போற் செகத்தியாவு
ஞ், செறிவானமாயைமயமாகாதாகித்திரநிலையாயிருக்குதெனிற்சத்தசத்தா
நெறியானவிருவகையுளகப்படாதநிலையிலாச்செகத்துண்மையென்பதுன்ற
ன், வெறிதானபட்சபாதங்களன்றிவெறுனசகமாயாமயமேயோர்வாய். (௬௨)

நீர்சொனதேயல்லாமற்கெதஞ்செகத்து நிகழ்மாயையேனச்சொனபேருண்டோவென்னிற், பாரதனிற்செடமாகக்கெற்பவாசம் பண்ணினசுக்கிலமுஞ்சேதனம்போல்வந்து, சீர்பெரியன்சிறியவனென்றுண்டுடுத்தித்திரிதலுடன் கண்டுகேட்டிறலால்வேறே, சாரிந்த்ரசாலமேதெனவசிட்டர்சாற்றினரிச்சகம்போல்வடவாலாதி. (௩௨)

மரமெங்கேவிதையெங்கேவந்ததென்று மயங்காதுசகலமுமேமாயையென்றே, புரமாகக்காணெனவேவியாசர்சொன்னா ருளமதனிற்சிந்திக்கினிலைபடாத, நிணாபொருளைத்தற்கிக்கவொண்ணாதென்றுநிண்ணயிக்கவாராதசெகத்தினுள்ளே, சரியானபொருளிதுதானதுதானென்றுசங்கிக்கத்தேவையிலையெல்லாமாயை. (௩௪)

என்றுகாண்பாயெனவேவியாக்ஞவர்க்க ரிசைத்தனரிவ்வாறென்றுசிந்தித்ததற்கே, யொன்றுதகாரியமுண்டாக்குஞ்சத்தியுணாசெய்தார்மாயையெனயாருமோர்வாய், கன்றுவதாமிம்மாபாவிதையையெங்கேகாணலாமெனின்மரத்தையடக்குகின்ற, பொன்றுதபீசம்போனணுக்கணுவாய்ப்புணர்சகத்தையடக்குகின்றமாயாபீசம். (௩௫)

சுழுத்தியினில்யாவருமே காண்பரோர்வாய் சொல்கின்றமாயையதிற்புத்திவாசனைக, ளழுத்தமுறவெலாமடங்கியிருப்பதற்கிங்கடையாளமேதென்னிலீசுரன்முன், றழைத்தவதிற்சகலவாசனையுங்கண்டுசருவக்ஞராயிருத்தல்குறியாமோர்வாய், திழைத்திடுசீவேசருபாதிகளெவ்வாறுசீவேசரிருப்பதெவ்வாறென்னிற்சொல்வாம். (௩௩)

உணாயானமேகம்போலிருக்குமாயை யோதுமதன்றிவலைபோலிருக்கும்புத்தி, பிரியாதவாசனைகடிவலைதன்னிற்பிருதிவிம்பாகாசமதுபோலிருக்கு,மிரியாதசிதாபாசாண்மேகவான்போலிருப்பரீசுரனெனவேயறிவாயானாற், பரிவானமாயைபுத்தியதனில்வந்தபரசீவர்தனையெங்ஙன்பகுத்துக்காண்டல்.()

வாசனைதான்சிதாபாசனுடனேகூடிவருபுத்தியுருவமாய்முளைக்கும்போது பாசமுறுமாபாசனன்றுய்த்தோன்றும்பரன்றனையுஞ்சருவக்ஞனந்தர்யாமிதேசுடையசருவேசனெனவேவேதஞ் செப்பிடக்கேட்டறியென்னவிரண்டுபேரும், பேசுசிதாபாசரலோவிவர்களுக்குப்பிறங்குகின்றதாரதன்மியமேதாமென்னில். (௩௮)

சிவர்கண்மாயையின்வசமா யிருப்பரீசன்றிகழவையைத்தன்வசஞ்செய்திருப்பனத்தான்,மேவுமவர்தார தன்மியமாகுமோர்வாய்விளங்கீசன்றுப்பேரின்பயனேதென்னி, லேவலுறுமவ ள்மாயையிடத்திலியாவுமிருப்பதனாற்சருவக்ஞனென்பதாகு, மாவலுறுசீவர்புத்திக்குள்ளேநின்றுமாட்டுகின்றபடியதனாலந்தர்யாமி. (௬௯)

இவ்வாறலேசிருட்டிக்கும்பிரவஞ்சத்தையெவராலுந்திருப்பவசமில்லாதாலேதவராதசருவேசனறிவாயீசன்றனக்குமேசருவக்ஞகுணமுண்டானாற், பவமாகயாவருமேனனுபவிக்கப்படவிலையென்றாற்றம்வாசனைகளெல்லா, மவர்தமக்கேபரோட்சமதாலீசன்றன்மையனுபவிக்கவறியார்களெனவேயோர்வாய். (௭௰)

அந்தரியாமிக்கிந்தக்குணங்களுண்டென்றதற்குமேபிரமாணமேதிவர்க்கிங்கந்தமுறுசரீரமேதிவர்தன்னேமமழகாகச்சகமதற்குவழியென்றற்கு, மந்தமுறுபிரமாணமேதாமென்னிலந்தரியாமிக்குவெகுகுணமுண்டென்னு,மந்தரியாமிப்பிரமாணமென்கின்றவழகானவேதமேபிரமாணங்காண். (௭௧)

படமதனினூலுபாதானமாகப்பரவுதல்போற்சகமதனிலிவனேநாளு
மடருபாதானமதாற்செகங்களியாவுமவனுக்குச்சரீரமதுசகலசீவ
ரிடமதினுமிருந்தபிமானக்கயிற்றை யிசைத்துமேதேகாதிப்பாவைதன்னைப்
படரும்விதிநிடேதவழியாட்டிவிப்பன்பரமசிவனெனுங்கீதாவசனந்தானும்.

இதுதன்மமென்றறிவேனிதிலேமூளவில்லையிதிங்கதன்மமெனவறிவேனித்தைக், கதுவாதுதிரும்பவிலையொருவனரோ கலந்தாட்டிவிக்கின்றானென்னவோதுந், திதியானபாண்டவகீதையுமேயீசன் செய்ததேவழியென்றற்களவையோர்வாய், பொதுவானவீசனெதுமாட்டுவித்தாற்புருடனுடமுயற்சிவேண்டாமோவென்னில். (௭௩)

கன்மவழிமுயற்சிவருமீசனங்ஙன்கற்பிப்பனதலினான்முயற்சிவேண்டுங்,கன்மவழிமுயற்சிவருமாகிலீசன்கற்பனையெனிலீசன்பிரசாதத்தா,னன்மையுறத்தானசங்கனென்னுஞானநண்ணுவதாலீசனனுக்கிரகம்வேண்டு, நன்மையுறுமவன்றயவாலந்தஞானநணுகினல்வருபயனேதென்னிற்சொல்வாம். (௭௪)

அவ்வளவான்முத்தியெனவேதஞ்சொல்லுமறியெனவந்தரியாமிசிருட்டிநா
சஞ், செவ்வையுறச்செய்வதெவ்வாறெனிற்படத்திற்சித்திரங்கள்விரித்தது
போற்றம்மிடத்தில், வவ்வுசகமவரவரின்றெழிலாற்றேற்றிவைத்தலேசிரு
ட்டிபடஞ்சுருட்டல்போலத், தவ்வுமவரவர்கன்மவழிசகத்தைதம்மிடத்தில
டக்கல்பிரளயமதோர்வாய். (௭௫).

கருதுமொருவீசனேசெடஞ்சித்துக்குங்காரணமெப்படியென்னிற்சைதன்
னியத்தான், மருவுமோர்சித்துக்குந்தம்முபாதிவசத்தாலேசெடத்துக்குமூ
லமோர்வாய், தருகுவதிவ்வாறுனூற்பிரமந்தானே சகமூலமெனச்சுரோசாரி
யாருந், திருவாகச்சொல்வதேனெனிற்கூடத்தர்சீவனையுமன்யோன்யவத்யா
சத்தால். (௭௬)

ஒன்றுகக்கண்டதுபோற்பிரமமீச னிருவனையுமொருமையாய்க் கண்டுசொ
ன்னு, மொன்றறியவ்வவத்யாசமெவ்வாறெனின்லீசனதுசெகக்காரணம் பிர்ம்ம
த்தும், பொன்றுதவதன்சச்சிதானந்தங்கள் புகலீசனிடத்தினுமேவத்யாசத்
தாற், கன்றுபசைபூசுபடம்போலொன்றுகுங் காணெனவிவ்வுளவுநீரறிந்த
தெங்ஙன். (௭௭)

ஆறுலிங்கமதனுலேசுருதியோர்ந்தேயசங்கமாம்பிரமமென்று மீசன்றனே,
கூறுசெகசிருட்டிசெய்தானெனவறிந்தோங் குறித்தறிவாய்சிருட்டிசெயும
டைவேதென்னின், வேறிலாச்சுழூத்திதனிற்சொற்பனந்தான் விரிவதுபோ
லானந்தமயனுமீசன், மாறுபடுமாயைதனைவிரியப்பார்த்துமருவுமிரணியக
ர்ப்பனுவனோர்வாய். (௭௮)

ஒருவேதமொன்றிலொன்றுய்வந்ததென்றுமொருவேதமொருமிக்கவந்ததெ
ன்றும், பரவுவதிலெதுபிரமாணஞ் சொல்லென்னிற் பகருமிருவகையான
சொற்பனங்கள், விரவுமூளதாலிரண்டுமௌவையோர்வாய்மேவுமிரணியகெ
ற்பசொருபமெங்ஙன், பரவுசூக்குமதேகசமட்டியாகப் படமதனிற்சித்திரங்
களிருத்தல்போல. (௭௯)

எங்குமிருக்கின்றதனுலிச்சைஞானமியன்றகிரியைகளாகுஞ்சத்திமூன்றுந்
தங்குவதாற்பொன்கெற்பனெனவேயோர்வாய்சாருமிரணியகெற்பந்தோன்
றலெங்ஙன், கங்குல்பகல்சந்தியுறுஞ்சகங்கள்போலுங் கரியினலச்சிட்டப
டங்கள்போலு, மெங்குமொக்கக்குறுமூளையாம்பயிர்கள்போலு மீசுரசூக்
குமதேகமழகாயெங்கும். (௮௰)

ஒக்கலாஞ்சனைபண்ணப்பட்டுத்தோன்று மோருவாயத்தேகந் நூலமான
மிக்கவவத்தையையடைந்துதோன்றலெங்ஙன்மேவுமிதிற்பிரமாணமேநிவர்
க்குப், பக்குவமாமவையவமேதனைப்பூசித்தாற்பலனேதென்னெனிற்பஞ்சீ
கரணஞ்செய்து, திக்கதனில்வெயிலதனுல்விளங்குலோகந்தீர்ந்தபடசித்தி
ரங்கள்போலுமெலும். (௮௧)

பழுத்தபபிர்வகைபோலும்வெளியாய்த்தோன்றப்பட்டதூலாதிசகம்விராட்
டேயாகும், வழுத்துகின்றவிசுபரூபாத்தியாய மருவுகின்றபுருடசூத்திரவே
தங்க, எழுத்துபிரமாணமாம் பஞ்சமூர்த்தி யமரருடன்சுராதி சராயுசாதி,
யொழித்தவன்னுச்சிரமமுளோர்மயிலார்மாரியுளிவாச்சிமுதலவருக்கவயவ
ங்கள். (௮௨)

ஆனதாலுபாசித்தமூர்த்தியந்த வதி காரிக்கேற்றபலன்கொடுப்பரோர்வா, யீ
னமறவெவர்களுமேபூசைசெய்தலீசனவயவமாகிலார்க்குமோட்ச, மானமு
றவாராதேனென்னின்மாயாமயவடிவையுபாசித்தான்மாயையான, வூனமுறு
பலனலதுமோட்சம்வாராதுணருவாய்மோட்சம்வரலெதனுலென்னில். ௮௩

பிரமான்மவிசாரமதாலன்றிமோட்சம்பின்னென்றுலிலேயறிவாய்பிரமஞான
வுரமன்றிமற்றொன்றுற்சமுசாரந்தா னொழியாதோவென்னிற்றுன்விழித்தல
ன்றித், திரமுளதன்சொற்பனம்போகாதுபோலச் சித்தினிடத்தஞ்ஞானமு
தவுஞ்சீவே, சுரராதிசகத்தென்னுங்கனவுதானுஞ்சொலுமான்மஞானமதா
ற்போகுமோர்வாய். (௮௪)

புகல்பிரமத்தபின்னைாஞ்சீவேசாளைப் பொய்யானசகத்தினுடன்கூட்டலெங்ங
ன், றிகழுவர்மாயையின்வரலாலிவையினேடு சேர்க்கலாமெனவறிவாயிவர்க
ளாலே, யகலாதகற்பிதமேதென்னிற்பார்வையாதிபிரவேசாந்தவனாச்சிருட்
டி, தகவீசன்கற்பனையாஞ்சாக்கிராதி சார்மோட்சம்வனாயுள்ள சமுசாரங்
கள். (௮௫)

எல்லாமுஞ்சீவனதுசிருட்டியோர்வா யிவ்வாறுபிரமமொன்றே யுண்மையா
னுன், மல்லலிலாவாதிகள்சீவேசர்தன்னில் வாதஞ்செய்தவர்மாய்தலெத்தா
லென்னிற். கல்லார்கடனைப்பற்றுமஞ்ஞானந்தான் காரணமாய்வீளிலேமா
ய்வரோர்வாய், புல்லுமொருநீரிருக்கவிவர்கள்வீணுய்ப் போகாதுதத்துவத்
தையுணாயுமென்னில். (௮௬)

பக்குவம்வாராமுன்னம்பிராந்தருக்குப்பபிற்றிவைத்தாலிளைப்புமாத்திரமல்
லாம, லெக்காலுமவன்மனதிலேறாதோர்வா யெந்தவாதிகளெதனாற்பிராந்த
ரென்னிற், றக்கதிலாலோகாயுதாதியாகச் சாங்கியர்கள்வரைசீவப்பிராந்தியு
ற்றோர், பக்கமிலாயோகமுதல்விருட்சமீறாய்ப் பரனென்னும்பிராந்தியிலே
யலைந்தோரோர்வாய். (௮௭)

பெரியவராயச்சாத்திரகர்த்தாக்களாகப்பிறங்குவரைப் பிராந்தரெனச்சொல்
வதெங்ஙன, னரிதானவத்துவிதப்பிரமந்தன்னையறியாதாலிவர்களுமேபிராந்த
ராவ, ருரியவிவரிகபரங்களிரண்டு மின்றி யோநியலோகாந்தரங் களுறுவ
ரோர்வாய், சரியாகப்பிராந்தரெனச்சீவவாதர்தங்களுட னிவர்களையுஞ்சாற்ற
லெங்ஙன். ௮௮

சொற்பனத்திற்பிச்சைபெடுக்கின்றோன்றன் னிற் றலங்குமரசாயிருத்தலுய
ர்வர்னாலும், பொற்புறவேவிழித்தவுடன்கனவிரண்டும்பொய்யாதல்போலிவ
ர்கள்கற்பிதத்தி, லற்பமறுதாரதன்மியம்மானாலு மறிஞர்களைக்குறித்திவர்க
ள்பிராந்தரோர்வாய், தற்பரத்தைவிரும்பினா னிவ்வாதங்க டனையோரவே
ண்டாவோவென்னிற்சொல்வாம். ௮௯

பூருவமாய்விசாரித்துத்தள்ளிநன்றாய்ப்பொருந்திடவேதாந்தமதேயறியவே
ண்டு, மோருவாய்சாங்கியயோகங்கடன்னிலோது சீவேசர்சுத்தசைதன்ய
த்தாற், சாருமிந்தவிருவகையுந்தள்ளாதிங்கு தனித்தவேதாந்தமதிற்சேர்ப்
போமென்னி, னேரானசீவேசர்பேதத்தாலே நிகழ்நமதுசித்தாந்தத்தொவ்
வாதோர்வாய். ௯௰

தொந்தமிலாவும்முடசித்தாந்தந்தன்னிற் றொம்பததற்பதபேத மின்றோவெ
ன்னிற், பந்தமுளவத்துவிதம்போதித்தற்குப்பகுத்தலன்றிப்பொருட்பேத
மிலையென்றோர்வாய், சொந்தமுறவிலக்கணையாற்பதார்த்தந்தன்னைச்சோதி
ப்பதேனென்னிலஞ்ஞானத்தாற், பெந்தமில்சீவேசரைவேறாய்க்கண்ட பி
ராந்தருக்குப்பிராந்திதனைப்போக்கவேண்டி. ௯௧

கருதுகின்றபதார்த்தசோதனைகள்பண்ணிக் காண்பித்ததெனவறி பதார்த்த
சோதனையா, லிருவரையுமொருவராய்க்காண்ட லெவ்வாறென்னிலுபாதியி
னாலேகற்பிக்கின்ற, மருவுசெலவான்மேகவான்கள்விட்டு மருவிவைகட்கதி
ட்டானவானிரண்டு, மொருமையெனவறிதல்போற்பதமிரண்டிலுபாதியின்
கற்பிதமானசீவேசரை. ௯௨

தள்ளியிவர்க்கதிட்டானப் பிரமங்கூடத் தனையுமொன்றாய்க்காண்டலிலக்க ணமினாலே, யெள்ளலிலாப்பதார்த்தஞ்சோதிப்பதோர்வாயிவ்வணஞ்சாங் கியயோகமதத்திற்கூறுங், தெள்ளியசிவேசர்தனையருத்தமாகத்திகழுமிருப தத்துக்குமுளைப்போமென்னி, லுள்ளுகின்றவிதுவானல்வேதந்தள்ளுமு லோகாயுதாதிவரைகூடுமோர்வாய். (௧௩)

இவ்வாறுவிரோதமேதிருமதத்தி லெனிலான்மாவனந்தமென்றுஞ்சகத்து ண்டென்றுங், கவ்வுறுமீசுரனொருவனுண்டாமென்றுங்கழறலத்துவிதத்து க்குவிரோதமோர்வா, யொவ்வுமத்துவிதமதனுக்கொத்துவாராதொழிந்தா லென்சிவனையுமசங்கமாகச், செவ்வையுறவறியின்முத்தியிலையோவென்னிற் செகமீசனித்தமெனவறிந்ததாலே. (௧௪)

பிறங்குதனையசங்கனெனவறிந்தபோதும்பிரகிருதிமுன்போலத்திரும்பக்கூ ட்டுங், திறங்களுளவீசனும்பின்சிட்சைசெய்வார்திகழியல்பான்மோட்சமது கூடாதோர்வா,யறங்களிலாவசங்கனெனுமான்மாவுக்கிங்கவிவேகத்தாற்பகு திசங்கம்வந்த, திறங்கலிலாவிவேகமதுவந்தபிற்பாடெவ்வாறுகூட்டுமெனி லிவ்வாறானல். (௧௫)

வருமுனதுசித்தாந்தங்கெட்டுமாயாவாதமதால்வேதாந்தமதில்வந்தாய்நீ யருளுமுமதத்துவிதத்தான்மாநாநாவாகாதபோதிவர்கண்முத்தரொன்னுந் திருவிலிவர்பெத்தரொன்னுநிண்ணயங்கடிகழ்தலெவ்வாறெனிலிந்நியமமெ ல்லா, மொருமையறவருமாயைதானேசெய்யுமுணர்ந்திடெனநன்றாகவுரை த்தவன்றே. (௧௬)

இரண்டிலாதுமொன்றேன்மாயையெவ்வா றிவ்விகற்பங்கற்பிக்குமென்னி ற்சொல்வா, முரணுகக்கூடாதைக்கூட்டிவித்தன்மொழியவையின்சொருப மதாலெவையுஞ்செய்யு, மரணனசுபாவத்திற்பெந்தமுத்தியதனையுறும்பெ த்தமுத்தனிலவாமென்று, சுரமானசுருதிசொலுமறியீதெல்லாஞ்சுபாவத்தி லிலாவிடிற்பின்னெவ்வாறுண்டாம். (௧௭)

திகழ்மாயையெனுங்காமதேனுவிற்குச்சிவேசனெனவிரண்டுகன்றுண்டத்தா லகறுவிதப்பால்கறக்கும்வேண்டும்வண்ண மாதலாலத்துவிதமொன்றேயன் றி, யிகலானவிரண்டிலையென்றுணர்தியானலிப்பேதமெலாமித்தையான்மா வொன்றே, பகர்பொருளென்றறிந்திருக்குஞானிதானும்பலவிவகாரம்பண் ணக்கூடாதென்னில். (௧௮)

முன்போலப்பரமார்த்தமாகச்செய்கை முயலாது மித்தையெனக்காண்பனேர்வா, யன்பானஞானிவிவகரிப்பதெவ்வாறஞ்ஞானிவிவகரிப்பதெவ்வாறென்னி, லின்பமதாயிகபரத்தின்றொழில்களியாவுமெதார்த்தமென்றுமத்துவிதமில்லையென்று, மன்பாகவிவகரிப்பரறியார்ஞானியத்துவிதமாத்திரமேபுண்மையென்றும். (௯௯)

அறிவதெலாமித்தையெனக் கண்டுசெய்வா னவனினைவின்படிபலனும்வருமென்றோர்வா, யறியுமத்துவிதம்பிரத்தியட்சமாமோவறையெனினீயறிவுருவோவலவோசொல்வா, யறிவுள்ளபடிதோற்றவில்லையென்னிலதுதுவிதந்தனிலுமேசரியாமந்த, வறிபொருள்கள்சித்திக்குமதுபோலத்து விதந்தானுஞ்சித்திக்குமறிதியன்றே. (௱)

மேவுகின்றதுவிதமழிந்தல்லோவத்து விதந்தானுஞ்சித்திக்க வேண்டுமென்னி, லாவலுறுதொய்தமிருக்கையிலே தொய்தமறியுமறிவாயுறுமத்துவிதமோர்வாய், பாவுகின்றஞானம்வந்தபின்னிரண்டும்பயில்வதோவெனிலவற்றையறிந்துஞ்சாட்சி, யாவதுமாத்திரமிஞ்சுகின்றதாலேயத்துவிதநித்தியம்பொய்தொய்தமோர்வாய். (௱௧)

திரும்பவொருவேளையிலேதொய்தமெய்யாய்த்திகழ்ந்தாலெப்படியென்னிற்றிரும்பியந்த, விருமையுருவதைத்தானேபரிசயிப்பாயெத்தனைநாட்பரிசயிப்பதென்னிலிந்த, வொருமையிலாத்துச்சமதைத்தொய்தம்போகவுஞற்றுவத்துவிதமதிலேவேண்டாமோர்வா, யுருமையுடன்பசிதாகமாதியாவுமோளிருவதேன்முன்போலவென்னிற்சொல்வாம். (௱௨)

எனக்கென்னுமகங்காரிக்கன்றிச்சாட்சி யென்கின்ற நமக்கில்லையென்றேகாண்பா, யெனக்குவருமத்தியாசத்தி னாலேயிலகுசித்துரூபமதிற்காண்குதென்னி, லுனக்குவருமத்யாசமின்றேகைவிட்டுறுமான்மாவகங்காரம்வேறுகாண்பா, யெனக்கத்தியாசமதுசீக்கிரத்துக்கெழுவதன்றிவிவேகம்வரவில்லையென்னில். (௱௩)

திகழத்தியாசம்போல்விவேகந்தன்னைத் திடப்படவேயனுட்டித்தால் வருமதோர்வா, யகலுவதாந்தொய்தமித்தையாதல்போலவத்துவிதந்தானுமித்தையாமேயென்னி, னிகழவருவதுபோவதிவ்வாறென்றுநிண்ணயிக்கவாராது மாயையாயிவ்,வகையாகவிருப்பதத்துவித மாதொய்தமாவெனவுன்னனுபவத்தைப்பாராயன்றே. (௱௪)

த்வைதம்போலத் துவிதமநித்தமென் னிற் றுவைதம நுமுன் னில்லையென்றற
ன்னை, யையானவத்துவிதங்காண்டல்போலவத்துவித முன்னிலையென்றனை
யொன்றாலும், மெய்பாகவறியாதபடியாலத்துவிதமொன்றேநித்யாபமோட்ச
மோர்வாய், பையாகவிவ்விதமாயறிந்துஞ் சில்லோர்பகர்கின்றதிர்ப்தியுடன்
கவலைகெட்டே. (௧௫)

சந்தோடமுறுநிருப்பதெத்தாலென் னிற் சாத்திரத்தைத்தனக்காக்கிவிசேட
மாகச், சிந்தைநம்பாமேலெழுந்தமதியாமோர்வாய்திகழொருகாலிருதயத்
திறைசையெல்லாம், பந்தமறப்பற்றுவிட்டோன் முத்தனென்றுபயில்வேதமு
றைபிடுதுமேலோர்செய்கை, யந்தவணமில்லையெனி லகங்காரத்தோடான்
மாவையொன்றாக்கிவரும்பேராசை. (௧௬)

ஆகாதென்றந்தவேதத்துக்கர்த்த மகங்காரக்கிரந்தியைவிட்டான்மாவேறாய்
ப்பாக முறக்கண்டவனுக்ககங்காரத்தின்பட்சமாய்க்கோடிநசைவந்தபோது
ம், போகாதுஞானமெனவுணர்வாயானற்புகலகங்காரக்கிரந்திவிட்டபின்பு,
மேகாதிவ்வாசைவரலாமோவென்னினிதுபிராரத்வபெலத்தாலென்றோர்வாய்

பேசுகின்றஞானிக்குமஞ்ஞானிக்கும்பிராரத்வஞ்சரியானற்பேதமேதா, ம
ாசுடையவிவன்மூடன்வித்துவானென்றறிவதுவேதப்பரிட்சையாலேயன்றி
மாசுடையதேகமதாலறியாதாப்போன் மருவகங்காரக்கிரந்திவிட்டதாலே,
தேசுடையஞானியென வறிவதன்றித் திகழ்கன்மச்சேட்டையினற்பேதந்
தோன்றா. (௧௮)

அகங்காரக்கிரந்திபோகாதபோதுமான்மாவுஞ்சமுசாரமடையாதொன்னி, வி
கலாகவிவ்வணநீயறிந்தபோதேயிலங்குகின்றகிருதார்த்தனெனலாமோர்வா
ய், திகழகங்காரக்கிரந்திவிட்டபேர்க்குச்செப்புகின்றவடையாளமேதாமெ
ன்னிற், றுகளானபிரவிருத்திநிவிர்த்தியொன்றைத்துவேசித்தல்வாஞ்சித்த
லில்லையென்னும். (௧௯)

கீதைவசனப்படியேயிருப்பனோர்வாய்கிளரிதனாலுபேட்சையேஞானமென்
னிற், காதாதிகைகால்களிறந்தபோது கருமத்திலுபேட்சைவரு மிந்தவண்
ணம், வாதையதுஞானமெனுமுன்றன்புத்தி மருவுதெளிவெனும்பரியாசந்
தானோர்வாய், பேதையெனப்பரியாசம்பண்ணவேண்டாம்பெருமையுறுஞ்
சடபரதருபேட்சையாக. (௨௰)

இருந்ததுவாய்ப்புராணத்திற்கேட்டோமென்னிமிறையார்கள்வாகனங்களு
டனேஞானி, பொருந்திவிளையாடினுமேதேகந்தானைப் பொருந்தானென்
றிடுஞ்சாமமறையென்றோர்வாய், திருந்துசடபரதர்கானகத்திற்செல்ல மிக
ழ்ஞானநிமித்தியமாயன்றோவென்னிற், பொருந்தாமலஞ்ஞர்களின் சங்கநீ
ங்கப்போயினதேயன்றிமரங்கல்கள்போல. (௱௰௧)

பிரவிருத்தியற்றிருக்கவில்லையோர்வாய் பிறங்குமொவ்வோர்குணங்களையே
பிடித்துலோகர், தரமிலாஞான்மிதுவெனலேதென்னிற்சாத்திரசித்தாந்தங்
களறியாமூட, ருரமாகவொன்றிருக்கவொன்றைச்சொல்வ ரோர்ந்தவனப்ப
டிச்சொல்லானென்னவோர்வாய், பரமானசாத்திரசித்தாந்தமேது பகரொன்
னிற்சன்மார்க்கமுழுதுஞ்சேர்ந்து. (௱௰௨)

வயிராகமுபரதிஞானங்கண்மூன்று மருவுமிதற்கேதாதியைந்துவேறாம், ப
யிலுமிதுகளைபின்னசின்னதென்று பகுத்தறியாரெல்லாமு ஞானமென்று,
செயிராகத்தடுமாறிச்சொல்வனோர்ந்தோன் செப்பிடானந்தவண்ண மென
வேயோர்வாய், வயிராகமுதலானமூவகைக்கும் வருமேதுமுதலைந்துமெவ்
வாறென்னில். (௱௰௩)

நேரும்வயிராக்கியத்துக்கேதுதானுநிகழ்விடயதோடதிட்டியுருவமற்றை,
யேராகவெவ்விதத்தும்விடுதலாகு மெழுகின்றகாரியந்தான்றிரும்பியாசை,
வாராமலிருக்கின்றதவதிவேதா வசிக்கின்றலோகம்வரை துரும்பாயெண்ண
ல், சாருவதாம்பலன்பிரமலோகமாகுந்தயங்குமுபரதிக்கேதட்டாங்கயோக
ம். (௱௰௪)

கனமானவுருவமதுசித்தநீக்கங் காரியந்தான்விவகாரட்சயமதாகுந்
தனதானவவதியதுசுழுத்திபோலச்சரீரத்தைமறந்தலபலன்பிரமலோகத்
தினமானசாமீபஞானத்துக்கிங்கேதுசிரவணமனனநிருத்தியாசம்
புனைவானவுருவமதுமகங்காராதிபொய்யெனவேபாவித்தல்காரியந்தான்.( )

திரும்பியகங்கரக்கிரந்திவாராதோட்ட றிகழவதிதேகமூன்றுனெனநின்றுப்
போல, விரும்பியதான்பிரமமெனவுறைத்துநிற்றன் மேவுபலன்மோட்சமறி
யிந்தமூன்று, மொருமிக்கவேண்டாவோவென்னின்மூன்றுமொத்திருந்தா
ற்றிடசவுக்யமுண்டல்லாமற், பெருமையுறுமோட்சத்தின் ஞானம்போதும்
பிறங்குகன்மவசத்தாலேசிலபேருக்கே. (௱௰௫)

கூடிநிற்குஞ்சிலவருக்குக் கூடாதாகுங் குலவிதனிற்கலக்கமது வேண்டா மோர்வாய், தேடியவிவ்வகைகலங்காநிலைநின்றோர்க்குச் செய்தொழில்களே தெனிற்சின்மாத்ரமாக, நேடியதன்னிடத்திலேமாயைசெய்தநிகழுஞ்சகசித் திரத்தையுபேட்சைசெய்து, பீடியல்சின்மாத்திரமாயிருப்பனோர்வாய்பிறங் கிதனையனுட்டித்தோன்முத்தனவன். (௱௰௭)

௧வது சித்திரபடதீபவிலக்கணமுரைத்தவத்தியாயமுற்றிற்று.
ஆகப்பாயிரமுள்படக்கவி—௱௨௰௫

---

## இரண்டாவதுதிர்ப்திதீபவிலக்கணமுரைத்த வத்தியாயம்

அமுதமானதுசுகவடிவாயிருந்தடுத்தபேராச்சுகவடிவாகவுங்
கமமதாயொருநித்தியமாகவுங்காட்டல்போலக்கழனிப்பதிதனிற்
சமமதாமுத்துராமலிங்கேசருந்தன்னைவந்தடைந்தோர்தமையவ்வண
நிமலமாம்படிசெய்திடலாலவர்நித்தசுத்தபதந்தனைப்போற்றுவாம். (௧)

அகிலலோகங்களுக்கெலாவேதத்தினர்த்தந்தன்னைவிளங்கிடச்செய்பினும்
புகல்வதாம்புருடார்த்தமதைப்பெறப்பூரியிட்டவித்யாரண்யநாதனைத்
துகளிலாநமஸ்காரமதுசெய்துசொன்னதெங்ஙன்புருடனன்மாவையு
மிகலிலாவிவர்தானென்றறிந்தபிணியார்க்குப்போகநிமித்தியமாகவே. (௨)

எந்தப்போகத்தைவேண்டிச்சரீரதாபத்தையெய்துவனென்னும்போதாரண்ய, வந்தமானவுபநிடதப்பொருளறைகுவோமதுவெவ்விதமென்றிடிற், சொந்தமாகியசித்திரதீபத்திற்சொன்னவண்ணஞ்செகமித்தைசித்ததே, சிந்தையானதிற்றுனென்றுறைத்ததோர்சீவன்முத்தன்றிருத்தியைச்சொல்வதாம், (

சொன்னவேதம்புருடனென்றோதிய சொல்லுக்கர்த்தமேதென்னிற்சுபாவத்திற், பன்னுசித்தைத்தவிரவொருபொருள்பகரவில்லையென்றாலும்விவகரத்
துன்னுமாயையின்கற்பிதமாகவேவுறுவரீசுரன்சீவனிருவரி
லன்னவீசன்சிருட்டிமுதலவையாவுஞ்செய்குவன்சீவனனுமுதல். (௪)

மோட்சமீருய்வருசமுசாரத்தின்முயன்றுமுள்குவனனவிவர்களிற், சேட்சியில்லதிட்டானசைதன்யத்தைச்சேர்த்துச்சீவன்புருடனெனச்சொலு, மாட்சியாமதிகாரியைச்சொல்வதற்கான்மருபத்தைச் சேர்ப்பதெத்நாலெனிற் சூட்சியாமதிட்டானத்தையன்றியோர்சொருபமில்லையாரோபத்துக்கன்றியும். (௫)

விவகாரத்திருவோருமொருவராய்விளங்கலாலுநன்மோட்சமதனிலே
யவமதானவாரோப மும்வஸ்துவேயாவதாலவ் விரண்டையுஞ்சொன்னது
தவமதாலிப்புருடனதிட்டானஞ்சார்ந்தபோதவனெவ் விதம்பேசுவா
னவமதாகவாரோபப்பிரதானநாட்டமுற்றபோதெவ் விதம்பேசுவான். (௬)

என்னுமான்மாவாரோபத்தடங்கியேயிருக்குங்காலமொருமைப்பாடாகநா
னண்ணுகின்றசமுசாரியென்குவனுடுங்கற்பிதம்விட்டதிட்டானமே, யண்
ணுதானெனக்காணும்பொழுதுநான்சங்கன்சின்மாத்திரமெனப்பேசுவா
னெண்ணசங்கனுனென்னும்பொழுதவரிடத்திலேயகங்காரங்கூடாதெனில்

வேறு.

மேவுகின்றமுக்கியமாமகங்கரமொன்றென்றும் விரவுமமுக்கியவகங்காரங்க
ளிரண்டென்றும், மாவனவாமகங்காரமூன்றுண்டாமதிலேயாற்மாகங்காரத்
தைப்பகுத்தறியாமூட, ரேவுமொருமைப்பாடாய்நான்வந்தேன்போனேனெ
ன்றுசிதாபாசனுய்ப்பேசுதன்முக்கியமா, மாவலுறு மற்றவிரண் டகங்கரமு
மிலக்கணுவிருத்தியதனுலேபகுத்தறிந்தஞானி. (௮)

நான்சங்கன்சின்மாத்ரனென்றுபேசுதலு நவில்விவகாரத்தில் வந்தேன்போ
னேனுனென்றிங், கூனமுறுசிதாபாசனுகப்பேசுதலு மோதுகின்றவமுக்கி
யமாமகங்கரமென்றுணர்வா, யீனமுறுமஞ்ஞானிஞானியெனவிருக்கு மி
வர்கள்சிதாபாசரலோவிவர்களிலேஞானி, தானுமேதனக்கனியமாயிருக்கு
ஞ்சாட்சிதன்னைநானென்றுசொலக்கூடுமோவென்னில். (௯)

கண்ணாடிதனிற்றோற்றுமுகமுண்மையல்லக் கருதியதைக்காண்முகஞ்சுபா
வமதுபோல, வண்ணுசிதாபாசன்பொய்யதனுலுஞ்சாட்சி யாகமிஞ்சிடுந்
தான்சுபாவமதனுலுந், திண்ணமுறுசுபாவசைதன்னியமாந்தன்னைத்திகழு
நானென்றுசொலக்கூடுமெனவுணர்வா, யண்ணலுறுமாபாசன் மித்தையெ
னிலவனுலனுட்டிக்குஞானமதுமித்தையாகுவதால். (௰)

இதுசமுசாரந்தனையுமொழிக்காதேயென்னினிஞ்ஞானமித்தையதாகினுஞ்
சீவன்மூன்னங், கதுவுசமுசாரமித்தையாதலினுலதையுங்கழிப்பதனுக்கிஞ்
ஞானமேபோதுமறிவா, யதுலமாம்புருடசத்தத்தருத்தமதுகேட்டோமான்
மாவையிவரோநானெனவறிவதெங்ஙன், சதுரறுசந்தேகவிபரீத மறத்தேகந்
தானெனவேநிற்றல்போற்சாட்சிதானென்னும். (௰௧)

திடஞானமேயிவரோதானென்பதறிவாய்திகழிவரோதானெனுஞ்சொற்பிரத்தி
யட்சந்தனையே, மடமிலாதுரைப்பதனலவர்முன்புபரோட்சமாயிருக்கக்கூ
டுமோவெனிற்றசமன்றனக்கே, யிடமானவவனிடத்திலஞ்ஞானமாதியேழ
வத்தைதோன்றலினன்மாவடைவரறிவாய், தடமுளவையனுபவமாயேழை
யுங்காட்டென்னிற்றசமனவபேனாயெண்ணித்தான்றசமனெனவே. (௰உ)

தனையறியாதவன்கலங்கித் திடுக்கிடலஞ்ஞானந் தசமனெக்காணேமெங்கே
போனனோவென்னும், கனமில்பராமரிசையேயாவரணநதியிற்கழிந்தானெ
ன்றழுவதுவேவிட்சேபமாத்தன், பனியிலுபதேசத்தாற் சுவர்க்கநம்புமது
போற்பத்தாவானிருக்கின்றனெனலபரஞான, மெனலாகுநீதசமனென்று
மேயாத்தனெண்ணிக்காட்டிடவறிந்ததபரோட்சஞானம். (௰௩)

வேறு.

முன்னிறந்தானெனவழுதவழுகைபோகன்மொழிந்ததுக்கநிவிர்த்தியதாந்த
சமன்றனைப், பின்னமறவறிந்ததிர்த்திதடைகளற்ற பிரியமதாமிதுபோல
வான்மாதன்னி, லன்னவணஞ்சொல்லுமிடத்தாபாசன்றனனாதிசமுசாரம
திலமூழ்ந்தித்தன்னை, யின்னதெனவோராதுபேட்சையாக விருந்திடலஞ்ஞா
னமதமார்க்கமாக. (௰௪)

தேர்ந்துமேயில்லையவரிருந்தாலார்க்குந்தெரியாதோவென்பதாவாணமாகு
மோர்ந்திடாதுடல்களுடனுயிராத்தானுயுணர்வதுவேவிட்சேபங்குருவின்
சொல்லா, லார்ந்தபரப்பிரமமதொன்றுண்டாமென்றேயறிவதுபரோட்சமா
ம்வேதாந்தத்தைச், சார்ந்தறிவாலப்பிரமநாமேயென்றுதானுகவறிவதபரோ
ட்சமாகும். (௰௫)

வேறுகநான்கருத்தாபோத்தாவல்ல வெனப்போனதேதுக்கநிவிர்த்தியாகு,
மீறுகச்செய்வதடைவதுவெல்லாமு மியற்றினாமடைந்தமெனுஞ்சந்தோட
ந்தான், மாறிலாத்தடையறுமானந்தமிங்ஙன் மருவுசிதாபாசனுக்கே ழவத்
தையோர்வாய், கூறுமிதிற்பெந்தமெதுமுத்தியாதுகொடுக்குமெனின்மூன்
மூன்றும்பெந்தநல்கும். (௰௬)

பிந்தியநான்கவத்தைமுத்திநல்குமோர்வாய்பிறங்குமுன்மூன்றவத்தைசெயு
மனர்த்தஞ்சொல்லி, னுந்துதலாமான்மாவையறியேனென்னு முபேட்சை
யோடமார்க்கமதிலோர்ந்தேயான்மா, தொந்தமறவிலை யிருந்தாற்றோன்று
றோநீசொல்லென்னும்விபரீதவார்த்தைதானு, நந்தலுறுமிகபரத்தின் றொ
ழில்களெல்லாநமதுதொழிலதற்குவருபலமதாக. (௰௭)

நலபுண்யபாவநமைநீங்காதென்னு நடுக்கமுன்மூன்றவத்தை செயுமனர்த்தமோர்வாய், மலமானவஞ்ஞானுவரணந்தானும்வருதோற்றசத்தியின்முன்வருவதாலே, வலமுறுமேழவத்தைகளுஞ்சீவனுக்கே வருமென்னக்கூடாதுதோற்றசத்தி, கலனமுறவருமுன்புபிரமந்தன்னிற்காரணமேவடிவாகவிருந்துதென்னில். (௰அ)

13-3-40

அவர்நிருவிகாரியவரிடத்நினிற்பதலதுசிதாபாசனிடமாகத்தானே, தவறுனவஞ்ஞானுவரணந்தானுஞ்சாருவதாலவனுக்கே யுயிர்க்கில்லோர்வாய், நவமானபூருவாசாரியோர்கணவிலுமஞ்ஞானத்நினுக்காதாரந்தானும், விவரமதாயாபாசனெனச்சொல்லாமல் விளம்புவதேன்பிரமமெனவென்னிற்சொல்வாம். (௰௯)

பேசுமாரோபத்துக்கதிட்டானந்தான் பிரமமதாலெல்லாமும்பிரமந்தன்னி, லாசுறுமாரோபமெனச்சொன்னுர்நாமுமனுபவத்தாலவத்தையெலாமவனுக்கென்ருே, மாசிலாதறிபுருடனிடமாயேழும்வகுத்துச்சொல்லனுபவமாயென்னினுன்ருன், மாசானசமுசாரிபரோட்சஞானிமருவுநான்விஞ்ஞானித்துக்கமற்ருேன். (உ௰)

பாகமுளகிருதகிருத்தியனுனென்றுபகர்கின்றவிட்சேபமாதியைந்து, மாகமுறுசீவனேயனுபவிக்கவறிந்ததுபோலஞ்ஞனுனெனதுதிட்டிக், கேகமாம்பிரமமிலையென்பதானவிரண்டாகுமவத்தைகளுஞ்சீவன்ருனே, யூகமுறவனுபவிக்கக்கண்டோமோர்வா யுனாக்குநான்கவத்தைமுத்திகொடுப்பதெங்ஙன். (உக)

பரவுகின்றபரோட்சஞானத்தினுலே பகர்சத்தாவரணமதும்பரஞானத்தால்வரமில்சித்தாவரணமதுமூலாக்ஞான மாவதுடன்கேடுறலாற்பிரமநாமென்றுரமுறவேவெளியாகத்தோன்றலாலேயோதுமாரோபசீவத்துவந்தான்றரமறவேகெடுமுடனேகர்த்தத்வாதிசகலதுக்கசமுசாரநிவிர்த்தியாகும்.

ஆனவுடனித்தியனுன்முத்தனென்னு மளவறுகெம்பீரமதாற்றடைகளற்ற, வூனமிலானந்தம்வருமிந்தவண்ணமோதுநான்கவத்தைமுத்திகொடுப்பதோர்வாய், மானபரஞ்சுயம்பிரகாசமதேயானுன் மருவுபரோட்சக்ஞானவிஷையமெவ்வா, றீனமறுமதிற்பிரமமொன்றுண்டென்றேயிலங்குவதாற்குற்றமிலையென்பதோர்வாய். (உ௩)

சுயம்பிரகாசமதானுற்பிரமந்தானுய்த் தோற்றுவதேயன்றியவையுண்டாமென்றே, யயலாகவிளங்குவதாற்பரோட்சக்ஞானமப்பிரமாணமதேனனிலதற்குச்சொல்லு, மயலானநாலுவகைத்தூடணங்கண்மருவாதாலவைபிரமாணமதேயோர்வா, யியலாதநால்வகைத்தூடணங்களேதிங் கிதற்கவைகளில்லையெனலெவ்வாறென்னில். (உச)

முந்தினநிண்ணயமதற்குக்கெடுதலென்ன மொழிகின்றநேத்திரத்தாற்காணுதென்னச், சிந்தைதனின்மாறுகவறிவதென்னத் திகழேகதேசமதாய்ப்பிராந்தியாயு, மிந்தவணங்காண்பதுவேதூடணங்களிவையிலாவிதம்பிரமமில்லையென்று, வந்திடுமோர்பிரமாணங்காணுதாலே வழங்குமுன்சொன்னிண்ணயத்துக்கழிவேயில்லை. (உரு)

கண்ணுரக்காணுதாற்பரோட்சக்ஞானங்கருதுகின்றவப்பிரமாணமதாமென்னி, னெண்ணுகின்றசொற்காதிக்ஞானந்தானு மிலதாகும்பிரத்தியட்சமாகப்போகு, நண்ணுமொருவஸ்துவினைப்பரோட்சமாக நவின்றதனுற்பிராந்தியதுவென்னக்கூடாக், கண்ணினலேகதேசங்களாகக் கண்டதனுலப்பிரமாணமதாமென்முல். (உசா)

கடஞானமுதலாகப்பிராந்தியாகுங் கருதுமிதாலவைக்கொரு தூடணமில்லோர்வாய், தடமானநிரங்கிசமாம் வஸ்துதன்னிற் சாற்றுகின்றவங்கிசகற்பனையேதென்னிற், புடமானதனக்கவைதானிலாவிட்டாலும்போக்குகின்றவுபாதியைத்தொட்டுண்டென்றேர்வாய், திடமானவெவ்வுபாதியினுலென்னிற்றிகழுமசத்தபானவுபாதியினுலுண்டாம். (உஎ)

அவ்வுபாதிகளெதனுற்போகுமென்னி லபரஞானத்தி லசத்தமிசம்போகு, மொவ்வுபரஞானத்தாலபானநீங்கு முணர்திபரஞானத்துக் காளியின்றே, பவ்வியமாய்ப்பத்தாவான்றனேயென்றுபார்த்தபின்முன் கண்டநவமானபேர்க்குட், செவ்வியதாயில்லையெனக்கண்டாப்போலத் திகழான்மாப்பிரமமெனவறிந்தபோதே. (உஅ)

தானுகமுன்வழங்குமகங்காரத்தைத்தானல்லவெனத்தள்ளுவதுவேயல்லா, ஞனேயப்பிரமமெனும்பரஞானத்தைநாடிலவைகெடுக்காதென்றுணர்வாபிவ்வா, ருனுதவாந்திரச்சொல்பரோட்சஞானமஃரிக்கும்பின்மாவாக்கியவிசாரத்தாலே, வானுனபிரத்திட்சஞானநன்றுய்வருமெனவெங்கேசொல்லியிருக்குதென்னில். (உகூ)

உத்தாலமுனிமுன்புபரோட்சஞான மோதிப்பின்னெனென்பதாந் தரமகற்குச்
சத்தாகுமபரோட்சஞானங்கூறல்சாமவேதந்தனிலும்வருணனுனேனோர், சுத்த
முறுபிருகுவுக்குப்பரோட்சஞானஞ் சொல்லியையந்தாந்தரத்திலபரோட்ச
ஞானஞ், சித்திரமாய்க்கூறலெசுர்வேதத்துள்ளுந் திகழ்மகவான்முந்தியவா
ந்திரமாஞ்சொல்லால். (௫௰)

பிரமத்தைப்பரோட்சமாயறிந்துபின்பு பிறங்கபரோட்சக்ஞானமறிந்தானெ
ன்று, சுரமாகுமிருக்கென்னும்வேதந்தன்னிற்சொற்றிடுதிவ்வண்ணமாசாரி
யாரும், விரவுவாக்கியவிருத்திதன்னினன்றாய்வெளிசெய்தாரறிவாக்யவிசா
ரத்தாலே, புரமாகப்பரஞானம்வருதல்வாக்ய விருத்தியிலெவ்வாறுரைத்தா
ரெனிலுரைப்பாம். (௫௧)

சொன்னவகங்காரமுங் கூடத்தர்தானுந் தொம்பதத்துக் கருத்தமென்றும்ப
ரோட்சமான, பின்னமுறுசெகமூலவீசன்றானும்பிரமமுந்தற்பதமதனுக்கரு
த்தமென்று, மன்னவிருவகைக்கும்வேறறிந்தபோதிலவன்றானேயிவனென்
றலெட்சணம்போற், பன்னுகூடத்தரோபிரமமந்தப் பரப்பிரமங்கூடத்தரென
வறிந்தால். (௫௨)

இதுவரையுநாம்பிரமமல்லவென்று மீசுரசைதன்னியம்வேறிருக்குதென்று
ங், கதுவுபுத்தியொழிந்துவிடுமாதலாலே கழறபரோட்சக்ஞானமதற்குமூல
ஞ், சதுருறுமாவாக்கியமென்றுரைத்தாரோர்வாய் சாற்றும்வாக்கியத்தில்வ
ந்தவறிவெல்லாமு, மெதிராகாப்பரோட்சமேயல்லாமற்றானிலங்குகின்றபிர
த்தியட்சமலவேயென்னில். (௫௩)

வட்டியதற்காசையுற்றான்முதலும்போமென்வழக்கச்சொற்போற் பிரமமாக
வந்த, சுட்டறிவாஞ்சீவனுக்குமுன்னிருந்த சுயம்பிரத்தியட்சமும் போமெ
ன்னவோத, றிட்டமுறுமாசியமாய்க்காணுநீயேதெசமனென்றசொல்லவனை
க்காட்சியாக, நட்டமறத்தெரிவிக்கவிலையோவோர்வாய்நவில்கரணவுபாதிய
வையிருப்பதாலே. (௫௪)

சீவனுமேபிரத்தியட்சமாகத்தோன்றுந்திகழ்நிருபாதிகப்பிரமந்தெரிதலெங்
ஙன், மேவலுறுமிரும்புபொன்னென்கின்றதாலே விலங்கெனல்போகாதது
போற்கரணமாதி, யாவதெலாஞ்சீவனதுபாதிபோல வதைத்தவிர்வதேபிர
மோபாதியோர்வாய், வாவுநானெனன்முழுதும்போனபின்புவரலெங்ஙனன்
பிரமமென்னுஞானம். (௫௫)

ஓ நநானெனன் முழுதுந்தள்ளாமற்றன் னுபாதிமாத்திரந்தள்ளிச்சைதன்யந்
தான், பேராதுதிரமாகவிருப்பதாலே பிரமநானெனு ஞானம்வரலாமோர்வா
ய், நேரானசாட்சிசுயம்பிரகாசத்தானிகழ்விருத்திவிடயமதாய்வரக்கூடாது
சேருமானுற்பிரமம் விருத்திதன்னிற் சிதாபாசனுலறிந்து செடமாமென்
னில். (௩௬)

கடமறியத்தீபமுநேத்திரமும்வேண்டுங் கருதுகின்றவிளக்கறியக்கண்போ
தும்போல், விடமானவிடயத்தைமறியும்போது விடையாக்ஞானம்போக்க
விருத்திவேண்டுங், தொடர்பாகவதையறியச்சீவன்வேண்டுஞ் சுயம்பிரகாச
ப்பிரமமறியும்போதி, லடருமஞ்ஞானம்போக்க விருத்திபோது மாபாசன்
றேவையிலையிருந்தபோதும். (௩௭]

வெயில்விளக்குப்போற்குன்றிப்பிரமந்தன்னில் வீய்ந்துபோவான்விருத்தி
வியாப்தியுண்டிங், குயர்விலாச்சீவனுக்குப் பலவியாப்தி யுறுவதிலையென
வேதம்பகருதிந்த, வியலானவபரோட்சஞானந்தானேயிவரோநானெனும்வே
தத்தருத்தமோர்வாய், பயிலுவதாஞ்சங்கராசாரியாரும் பலகாலுஞ்சிரவண
மேபண்ணச்சொல்லி. ௩௮

விதித்தபடியாற்பிரத்தியட்சஞானமேவுதிடமல்லவெனில்வேதபேதங், கதி
த்துவ நகாமபேதங்கள்கொண்டுகன்மபேதங்களவைகாண்டல்போலத்,திதி
த்தவொருஞானமதுபேதம்வாராதென்பதனையாறுலிங்கத்தாலேயாருங், து
தித்திடுவேதங்களுக்குவிசாரம்பண்ணச் சொன்னரச்சுருதியெலாமொருப
டித்தாய். ௩௯

கண்டுவருமிந்தஞானத்தினுக்குக் கருதும்விபரீதமதுபோக்கவேண்டி, வி
ண்டிடாமனனஞ்செய்யென்முரோர்வாய் விபரீதபாவனையேதெனிற் பிதாவி
னண்டையிற்சத்துருபுத்திசெய்வான்போலவமர்தேக நான்சகமெய் யென்ற
லோர்வாய், மண்டுமிந்தவிபரீதபாவனைக்கு மருவுகாரணமேதா மென்னிற்
சொல்வாம். ௪௰

வெகுசென்மமதனிலேபிடித்துச்செய்த மேற்செனனவாசனையேமூலமோர்
வாய், நகுமிந்தவிபரீதமெதிற்போமென்னினனேசத்தியமானபிரமமிந்தத்.
தகுதியிலாத்தேகாதிமித்தையென்னுந்தத்துவபாவனையாலேபோவதோர்வா
ய், மிகுதியுறத்தத்துவபாவனைகள்செய்யும்விதமேதென்றிடிலவையும்விளம்
பல்செய்வாம். (௪௧)

பிரமத்தைப்பலகாலுஞ்சவணம்பண்ணல்பிறங்குமொருவருக்குப்போதனை கள்செய்த, பிரமானபிரமாப்பியாசமோர்வாய்நிகழெந்நேரமுமிதுவேவேலை யானற், சரீரமென்னிருவாகடப்பதெங்ஙன்றத்துவத்தைவிசாரிப்போன்கரு மமெல்லாம்,பரசிவனேநிருபவித்துக்கொள்வரோர்வாய்பரதத்வபாவனைக்கு மூலமெதாம். (சஉ)

ஏகாக்ரசித்தமதேமூலமோர்வாயிவ்வேகாக்கிரமெதனுல்வருவதென்னில் வாகானவீசுரபாவனையினலேவருவதறிமந்த்ரசெபமூர்த்தியான [ற்] வாகாரவுபாசனைபோற்றத்துவக்தையனுட்டிக்கநியமமதுவுண்டாவென்னி பாகானமந்த்ரசெபமாதிகட்குப்பலன்பிரத்தியட்சமிலையாதலாலே (சஙு)

நியமமுமந்நியமமதுதவறுமானுனிகழ்பிரத்யபாயம்வருமசனஞ்செய்தாற் பயனுகப்பசியொழித்தல்போலவஸ்துபாவனையும்விபரீதமகனைப்போக்கல் வியனுனதிட்டபலமதனுனேமம்வேண்டவிலையெனவுணர்வாய்பிரமாப்பியா ச, நயமாகப்பலபடச்செய்யென்றபோதேநவிலுமவை பிரயாசமலவோவெ ன்னில. (சச)

சஞ்சலமாமனதுக்குநியமம்பூண்டதகுசெபமும் வேறொன்றைச்சற்றேநோ க்கில், வஞ்சமுறக்கெடுமூர்த்தித்தியானந்தானும்வருத்தமலாற்கூத்துப்பார் ப்பதுவேபோல, வுஞ்சலுறவெகுவிதமாயெடுத்துக்காட்டுமுச்சாகக்கதைக ளுடன்கூடிநிற்கும், வஞ்சகமில்பிரமாப்பியாசந்தானும்வருத்தமிலைமனதுக் குவிநோதமோர்வாய். (சரு)

கனமனதுசலனவடிவென்பதற்குக்கருதுபிரமாணமேதென்னிற்சொல்வா மனதுதான்போனதுவேவழியதாகிமருவுசஞ்சலவடிவாயிருக்குமத்தை வனமாகநிறுத்துவது பவனந்தன்னை மறுப்பதற்குச்சரியெனச்சொல்கிதை தானு, மனலானவக்கினியைவிழுங்கினுலு மலைகடலைக்குடித்தாலுமேருத ன்னை. (சசு)

பிடிங்கினுமேமனநிறுத்தல்கூடாதென்றுபேசும்வாசிட்டமதேயளவையோர் வா, யொடுங்கிடாவிட்சேபமனதுக்கான்மாவெ வாப்பற்றசின்மாத்ரமற்றதெல் லா, மடங்குகின்றமித்தையெனுநிருத்தியாசமாவதுகூடாதெனிற்காவியங்க டர்க்கந், தொடங்குசெட்டுவெள்ளாண்மைதனிலேவீழுந்தொந்தமுளமன துக்குக்கூடாதோர்வாய். (சஎ)

ஆனாற்போசனமாதிவிட்சேபங்களலவோவென்றிடிற்சொற்பவிட்சேபந்தா,
னானதவனுசந்தானத்தைப்போக்காதாதலால்விட்சேபமல்லத்தானே, யானா
துபிரதான்மாயிருக்குமமருதர்க்கமுதலவைகடத்துவத்தை, யானதுகெடு
க்குமிதுகனவிட்சேபமதாலிதரவித்தையடுக்கொண்ணாதோர்வாய். (ச௮)

எல்லாவித்தையும்விட்டாற்பிழைப்பதெவ்வாறெனிற்பொசிப்பைவிடச்சொ
ன்னாற்பிழைத்தல்கூடா. தல்லாமலிதரசாத்திரத்தைவிட்டாலதனாலேசீவிக்
கக்கூடாதென்னும், பொல்லாததுராக்கிரமம்விடுவாயானாற்புகழானஞான
முளசனகராச, னல்லராசரிக்கமதுசெய்தானென்னினவிலுமவன்றிடக்ஞா
னமதனாற்செய்தான். (ச௯)

உனக்குமவையுண்டானாற்கருமத்தாலேயோதுதர்க்கமுதலவைகள்செயலா
மோர்வா, யெனக்குமேபிராரத்வமென்றுதானேயியலிலனாசாரமதுசெயலா
மோதான், கனக்கவருகருமத்தையொருவராலுங்கடக்கவொண்ணாதறிவாயஞ்
ஞானிஞானி, தனக்குவருபேதமேதென்னின்மார்க்கஞ்சார்வோர்களிருவ
ருக்குந்தங்குழூர்தான். (ரு௰)

ஒன்றாகவிருந்தாலுமறிந்தவன்றானாறுநியாய்ப்போவனறியாதோன்றானு
நன்றாறுதேக்கமுடன்போதல்போலஞானிக்குமஞ்ஞனுக்கும்பிராரத்வங்க
ளொன்றுபோலிருக்கினுந்தானகர்த்தாவென்று வொப்பிறிடமாயிருப்பன்
ஞானியஞ்ஞன், குன்றுறவேங்கிச்சாவனிதுவேபேதங்குலவிவரேநானென்
னும்பரஞானந்தான். (ரு௧)

நெறியாகவறிந்தகாமியார்க்குப்போகநிமித்தியமாயெப்போகம்வேண்டியெ
ன்னுங், குறியானவாக்கியத்துக்கருத்தமேதுகூறெனிற்சாட்சாத்காரம்வந்
தோனுக்குப், பொறியானபோத்தாவும்விடயந்தானும்புகல்கின்றதில்லையெ
னவறிவாயானை,னெறியாகப்பொசிக்கையிலேபிராரத்வத்தைநிகழ்த்துமவை
யில்லையெனலெத்தாலென்னில். (ரு௨)

இந்திரசாலத்தில்வருநகரம்பார்ப்போனிதிலொருபோகந்தனையுமிச்சியாம
ற், சந்ததமுஞ்சிரித்துச்செல்லுதல்போற்சாட்சாத்காரமடைந்தவருக்குச்
சகத்துப்பொய்யாய், நந்துவதாற்பொசிப்பானும்விடயந்தானுநண்ணவிலை
யாதலாலெண்ணையற்ற, பந்தமுறுதீபம்போலாசையாதிபகர்நினைவெலாம
ணைந்துபோகுமோர்வாய். (ரு௩)

வருபிராரத்வமதுபொசித்தாலாளிவருவதேதெனிலானியொன்றுமில்லை, மருவுகின்றதோடகிட்டியதனலத்தை மருவியவன்றிடப்படவே பொசிக்கானோர்வா, யொருவுகின்றவிடயமதிலெந்தத்தோட முளதென்னிலருத்தத்தைத்தேடும்போதும், பொருவிலவைபிரட்சித்தலாலுந்துன்பம்பொருந்துவதாற்சுகமில்லையாதலாலும். (௫௪)

நீருமலநரம்பெலும்புதசைகளாலே நியமித்தவிழையார்களுடலிலெத்தைச் சேருவதுநல்லதெனப்பசித்தபோதுந் நிகழ்விடத்தைத்தின்றார்களதுபோன்ஞானி, பேருமிதுதனைவிரும்பான்றேடவஸ்தைப்பிராரத்வத்தாற்பொசிக்கமுண்டபோதுஞ், சாருமவைகிலேசமுடன்பொசிப்பதன்றிச் சந்தோடத்துடன்புசியானென்பதோர்வாய். (௫௫)

பொசிக்கையிலேகிலேசமேதெனிலிக்கன்மம் போகலையோவினமென்றல்கிலேசமோர்வாய், சுசியாகுமும் முடையஞானந்தானுந் துன்பமதொவிந்தவணமென்னிலிந்தக், கசிவானசமுசாரவிரத்தியல்லாற் கழறுகின்றதுன்பமவையல்லவோர்வா, யுசிதமாயிவ்விரத்தியெதனல்வந்ததோதெனிலிச்சகமதுதான்பிராந்தியென்னும். (௫௬)

திடஞானமதனலேவந்ததத்தாற் றிகழ்ஞானிகிடைத்ததனாற்றிருத்திசேர்வன், மடமானவஞ்ஞானிபோகமெத்தவந்தாலுந்திருத்திபுறமாட்டானோர்வா யடலிலாவஞ்ஞனுக்குப்போகமெல்லா மருந்தியபின்வாராதோதிருத்தியென்னி, லிடமாகமேன்மேலுங்கிருதம்விட்டிங்கெரியணைந்தாலஞ்ஞனுக்குப்போகத்தாசை. (௫௭)

கெடுமன்றிவபிராகத்தாலேயாசைகெடுமெனவோர்வாய்ஞானிகன்மத்தாலே நடுவாகவருபோகம்பொசிக்கும்போதுநல்லதெனவதிலழுந்திப்போகானேதான், வடிவதனற்பிடித்துவிட்டராசனேரூர்வந்ததனாற்சந்தோடமடைதல்போல, விடுதலுளஞானிகிடைத்ததனாற்றிர்ப்திமேவுவான்பிறரறியத்திருட்டுச்செய்தல். (௫௮)

விளையாடலாவதுபோலந்தப்போகமேன்மேலுங்காமநினைப்புதவாதோர்வாய் களையாதவிவேகமன துறைத்தாலெங்ஙன் கன்மமேலெழுந்தாசையுதிக்கச் செய்யு, மிழையாதவிச்சைபரவிச்சையோடு மெழுமனிச்சையெனப்பிராரத்வமூன்றுங், கிளையாகவுளததனலிச்சைதானுங் கிளம்பலாமெனவறியீதாகாதென்றல். (௫௯)

எவருக்காயினுமாசைவருமோவென்னி லிலங்குமவபத்தியத்தைப்பண்ணு வோர்க்குந், தவறுகத்திருடுகிற வருக்கும்ராசர் தன்பாரிதனைநேசஞ்செய் வோருக்கு, மவமானவீதாகாதெனவறிந்துமாசையேன்வந்துதாகையினுவி த்தை, நவமானவீசனுமேவிலக்கமாட்டான்ஞானமதுவந்திடினுமவனுக்கு ள்ள. (சூய)

பிரகிருதிபோகாதென்றுரைக்குங்கீதை பிரமாணமறியேழைகளுக் சாய்நீர் தான்,றரமாகப்பரிகரித்துச்சொல்லுகின்றீர் சமத்ததுதானிருக்குமெனிலக் கன்மத்தை, யுரமாகமறிக்கலாமெனிலிராம னெப்பிலாநளன்றருமனுதியா னுர், பரமானதுன்பமுறக்கணக்கேயில்லைப்பரசிவனும்பஞ்சவிதத்தொழி ல்கடன்னில். (சூக)

உழலுவதுகூடாதுவாகையாலே யொருவருமீசுரநியமமொழித்தல்கூடா தெழுமிச்சாபலமறிந்தோமி னியனிச்சை யாவதேததற்களவையாதாமென் னி, னழகாகநான்மனதிற்பண்ணவொண்ணு தானகாரியமதனைப்பிலபந்தத் தால், விழைவாகநமைக்கொடுசெய்கின்றேன்யாவன் மேவுநாம்வேணுமெ ன்றகாரியத்தை. (சூ௨)

அகற்றுகின்றேனுமெனக்கேள்விசையனுக்கேயவனவன்கன்மந்தானேசெய் குதென்னு, முகத்தலுறுபகவன்வாக்கிய மேமானமுணர்திபரவிச்சையெது சொல்வாயென்னிற், செகத்திலிச்சைய னிச்சைதனக்கிலாதிருந்துஞ்சேர்ந் தவனாத்தொட்டுவருஞ்சுகதுக்கங்கள், வகுத்தபரவிச்சைபலமாகுமோர்வா ய்மருவுமெதையிச்சிக்கப்போறுனென்னும். (சூ௩)

வேதவாக்கியமாசைபோக்கச்சொல்லி விதிப்பதேனெனிலிந்தவேதமிச்சை சாதமுறுதொழிக்கவில்லைவறுத்தவித்துத் தான்புசிப்புக்குதவுதல்போன்ஞா னியாசை, தீதுசெயாதகப்பட்டபோகத்தோடு திரும்புமலான்மேன்மேலும் பிறப்புண்டாக்கு, மாதரசங்கற்பஞ்செய்யாதென்றேநீயறியிவர்க்குவிடயம திற்சிரத்தையேதால். (சூ௪)

வேறு.

வருகவிலையெனிலவைதானுண்மையாமென்னு மயக்கமிலையதனுலேவரவி லையென்றேர்வாய், வரும்விடயப்பிராந்திக்கிலெட்சணமேதென்னின்வருந மதுபோகமெலாநாளுக்குநாளாய், வருகவுத்தரோர்த்தரமாயொருகாலந்தா னுமாறுதவைசொரியமாயிருக்கவேண்டும், வருமிடையில்விக்கினங்கள் வ ராதிருக்கவெண்ணுமயக்கமுறுங்காங்கிசையேபிராந்தியெனவறிவாய்.சூ௫

## வேறு.

இவையெதிற்போமென்னில்வருவினைகள்வாரா திருப்பதிலைவாராதவினைக டானுஞ், சுவையுறவேவருவதிலையென்னும்போதஞ்சொல்கின்றபிராந்திதனைப்போக்குமோர்வாய், நவைபிலோர்ஞானிக்கு மஞ்ஞானிக்கு நவிற்று பொதுவாயிருக்கும்விடயந்தானு, மூவகைவரவொருவருக்குப்பிராந்தியிந்துமொருவருக்குப்போகமுதவுவதேனென்னில். (௬௬)

தனக்குமேபிராப்தியிலாதடையவெண்ணஞ்சார்ந்தபிராந்தனுக்கதுதான்றுக்கநல்கு, மனர்த்தமுறுமிதுமாயாமயத்தாலுள்ள படியாகுமெனுஞானிக்கதுசங்கற்பந், தனைக்குடுக்கமாட்டாதேதுக்கமெங்ஙன் சார்விக்குமெனவறிவாயிச்செகத்தை, மனத்தின்மாயாமயமாய்ப்பார்ப்பதெங்ஙன் மருவுமிதிலாசத்திபோவதெங்ஙன். (௬௭)

சொற்பனவிந்திரசாலம்போலவின்னதுறையாகவருமின்னபடிபோமென்றேயற்பமுநிண்ணயத்தில்வராதுதித்தொடுங்கு மாதலினன்மாயைமயமென்றுபார்க்கப், பொற்புறவேயப்போதுசொற்பனம்போம் பொருந்துநனவென்கின்றநிலையுறைத்தா, லுற்பனவிச்சகத்திலாசத்திபோகு முணர்குதிபித்தத்துவஞானத்தினுக்கும். (௬௮)

பிராரத்வமதனுக்கும்பெலங்களைத்தாற்பேசெனின்ஞானத்தினுக்குப் பிலமதோதின், பராவுகின்றசத்திமித்தையாகப்பார்க்கும்பாவனையாம்பிராரத்வமதனுக்கோதி, விராதொழியுஞ்சீவனுக்குச்சுகதுக்கத்தையெப்போதுங்கொடுப்பதனாற்பெலமென்றுரர்வா, யராவுகின்றபிராரத்வகன்மந்தானு மழிக்காதோஞானத்தையென்னிற்சொல்வாம். (௬௯)

செகமதனைச்சத்தியமாய்த்தோற்றிவித்துத் திகழ்பிராரத்வமதுபோகமீந்தா, லுகமானஞானத்தைக்கெடுப்பதாகு மோதுசெகமித்தையெனும்விவேகந்தன்னை, யிகலுறப்போக்காதுகனவிந்திரசால மெனப்போகதெரிசனத்தைக்கொடுப்பதாலே, யகலாதவக்கருமஞானந்தன்னை யழிக்காதென்றறிஞானம்பிராரத்வத்தை. (௭௰)

மாய்க்குமெனின்ஞானம்வந்தவுடன்செகத்து மறைந்திடி னக்கருமத்தைக்கெடுப்பதாகு, நீக்காதுமாயைமயமென்பதாக நிகழ்தலாலிருவகைக்கும்விரோதமில்லை, யாக்கமுறுமோரவத்தைதன்னிலெல்லா மான்மாவாய்ப்போம்பொழுதுயாவனெந்தப், போக்கறுமிந்தியத்தினாலெந்தப்போகம் பொசிப்பானென்றிசைக்கின்றவேதந்தானும். (௭௧)

ஞானம்வந்தவுடன்யாவுநீங்குமென்றுநவில்வதான்ஞானிக்குங்கருமபோகந்
தானுமெங்ஙனங்கூடுமெனிலிவ்வாறு சாற்றுமறைசுழுத்தியுடன்விதேகமுத்
தி, யானதையுஞ்சொல்லுதலாற்சீவன்முத்தி யதையுரைக்கவில்லையென்றுவி
யாசர்சூத்ர, மானபுறச்சொலுதறிநான்சொன்னதர்த்த மற்றும்வேறருத்தம
துகூடாதென்னில். (௭௨)

சொல்லுகின்றவியாக்ஞவர்க்கர்முதலானோர்க்குத் துவிததிட்டியிருப்பதனு
ன்ஞானங்கூடா, நல்லவர்க்குத்துவிததிட்டியில்லையென்னின்ஞானமவர்சீட
ருக்குநவிற்றலாகா, தொல்லுமவ்வாறின்றியவர்சீடருக்கே யுபதேசம்பண்
ணியசாத்திரமுண்டோர்வாய், புல்லவர்க்குச் சகந்தோன்று நிருவிகற்பம்
பொருந்துசமாதியின்ஞானமுண்டாமென்னில். (௭௩)

ஆலைவிந்தப்பட்சத்திற்சுழுத்தி ஞானமாகுமறிசுழுத்தியினுன்பிரமமென்னு,
ஞானமில்லையேயென்னிலானதாலே நான்பிரமமெனுஞ் சீவன்முத்திதானே,
யீனமின்ஞானஞ்செகத்துமறைதலல்லவெனவறிவாயிரண்டுமேஞானமென்
னி, னூனதொய்தந்தோற்றுதேஞானமாமென்றோதுகின்றவுனதுபட்சங்கட
ங்கட்குண்டாம். (௭௪)

கொதுகிளைச்சன்முதலாகக்கேட்பதாலேகூறுகின்றநிருவிகற்பஞானமந்தக்
கதுவுகடஞானத்துக்கிணையில்லோர்வாய் கருதுகின்றபரமான்மவிசாரந்தா
னே, யதுலமாஞானமலாற்றுய்தம்போவ தலைப்போலேயிருக்குதென்னி
லிந்தப், பொதுவானசித்தாந்தந்தெரிந்தபோதே புகல்கின்றகிருதகிருத்திய
னீயோர்வாய். (௭௫)

பொல்லாதமனநிறுத்தவேண்டாமோதான் புகனுட்டமானவிடயத்தையென்
று, மல்லலிலாமாயைமயமென்றுபார்த்தன் மனமதனைநிறுத்துகின்றதாகு
மோர்வாய், புல்லுமெந்தப்போகத்தையிச்சைசெய்யப்போறுனென்வாக்கிய
த்துக்கருத்தமாச்சு, தொல்லுகின்றயாவர்க்குப்போகமென்னுமுறையெதை
ச்சொற்றிடுதென்னிலவையுஞ்சொல்வாம். (௭௬)

பொசிப்பவனேயில்லையெனப்புகலுதோர்வாய்பொசிக்கிறவனேதினுவில்லை
யென்னி, னசித்திலான்மாநிருவிகாரியானதா னமக்குச்சுகதுக்கபோகமில்
லை, வசிப்பதிலாச்சிதாபாசனுரோபத்தால் வருகின்றசுகதுக்கவிவகாரங்கள்
புசிப்பதில்லையவனுமந்தப்படியிருக்கப்பொருந்தாதாலதிட்டானம்விடவாரோ
பம்.

௭௭

இருவரையுமொருவராய்க்கண்டுதோதான்மியத்தினிலிவன்பொசித்தானென்
றுலோகர், புரிவாகவுரைப்பதலால்விவேகஞ் செய்தாற்பொசிப்பவனேயிலே
யறிவாயெவ்வாறுனலு, மருவுமான்மாத்தானேபொசிப்போனென்னின்மருவி
யவராரொன்றுவிசாரஞ்செய்யிற், சுருதிநூலெலாமிந்த லௌகி கான்மாத்
தொடங்கியானந்தமயகோசமீருய். (எஅ)

நீக்கிபேகூடத்தர்தனையான்மாவாய்நிகழ்த்துதெனவறிசீவன்மித்தையானற்
போக்குகின்றவஞ்ஞானதிசையிலேகான்பொசிப்பவனெப்படியானனெனி
லான்மாவின், றேக்கமில்சத்தையைத்தனதாயிறக்கிகொண்டுநிகழ்நமக்குப்
போகமுண்மையெனக்கலங்கி, யாக்கமிலாவிடயமதைக் காங்கிசித்தானறி
யானலிவ்விடத்திற்பண்ணவேண்டும். (எகூ)

அனுசந்தானமதேதுலௌகிகத்தி லருந்துவோன் பிரியவிடயத்திற்றன்னை,
வினையமுடன்பிரியமதாய்க்காண்கின்றுப்போல் விவேகியுங்கூடத்தருக்கன்
னியங்களெல்லாந், தினையாகவப்பிரியமென்றுதள்ளித்திகழான்மாப்பிரியம
தாய்க்காணவேண்டும், புனையவறிபிரியமதாய்க்காண்பதெங்ஙன்புகலெனிற்
பாமரரானேர்மாலேசாந்தம். (அ௦)

வேறு.

முதலானவிடயத்திற்செயுமிச்சைதானுமுன்சாவதானமாய்வாதஞ்செய்புரு
ட, னிதமாகக்காவியநாடகங்களிலேதானேநித்தம்விசாரிப்பதையுங்கருமியு
பாசகர்கள், பதமானசெபயாகமுபாசனதியிலே பனும்விசுவாசத்தையுமே
ல்யோகியானவன்றன், றிதமானமனநிறுத்தப்படும்வருத்தமதையுந் திருக்
கானகூடத்தரிடந்தனிலேசெய்வாய். (அக)

இவ்விதமாய்ச்செய்ததனல்வருபலனேதென்னி லியல்பானபோகம்வித்தை
புண்ணியலோகங்கள், கவ்வுகின்றவனுமாகி சித்தியிந்தநான்குங் கருது
வோர்க்குறுபலன்போற்கூடத்தரான, வெவ்வமிலாத்தனைமூன்றுவவத்தை
கடந்தவராயேகராய்ச்சச்சிதானந்தசதாசிவமாய்ப்,பௌவியமாய்க்கண்டவர்
க்குச்சொற்பனம்போற்புண்யபாவகன்மத்துடக்குமற்றுமுத்தனமறிவாய்.)

இப்படியேகண்டவர்க்குப்பொசிப்பவனரொன்னிலெழின்ஞானியாயிருக்கு
ஞ்சீவனெனவறிவாய், செப்புமிவன்சாட்சிதனைவிட்டிராமையினற்றிகழிவ
னற்போகங்கள்சாட்சியிடத்தினுமே, யொப்பாகவுரைத்திடுவோமெனிற்சி
தாபாசனேரவத்தைதனிற்கண்டதோரவத்தைதனிலே, தப்புவதாமாயைம
யத்துட்படுவோனதனற்ரு னிலாதொழிபவனைக்கண்டேக்கமுடனே (அ௩)

சாகிறவன்பெண்கொள்ளவாஞ்சியாததுபோற் றனக்குள்ளாம் போகம் வேண்டான் முன்போற்றானே, மோகியாய்ப்பொசிக்கிறவனெனக்கூறுதற்கு மூக்கறையன்போற்குன்றிப்பிராரத்வபோகம், போகியாய்ப் பொசிக்கிறதாவிதைச்சாட்சியிடத்திற் புகலுவதெப்படியாதலால்வேதங்காணுங், தாகியாய்ப் பொசிப்பவனில்லெனச்சொல்லுதறிவாய் சரீரானுதாபமில்லையெனும்வேதத்தருத்தம். (௮௪)

சொல்லுமெனின்ஞானிக்கிமூன்றுசரீரத்தின் றுகளத்தியாசமொழிந்ததன்மூன்றான, பொல்லாதசுரமிவனைவருத்தாதென்றறிவாய்புகன்மூன்றுதேகமதிலெங்கெந்தச்சுரங்கள், புல்லுகுதெப்படித்தேவையில்லையிவனுக்குப்புகலென்னிற்றூலாதிசரீரமூவிதத்தி, லெல்லையிலாவாதபித்தசிலேட்மவியாதிகளுமிடிசூடுமுறிச்சன் முதலானபீடையுமே. (௮௫)

தூலசரீரச்சுரமாங்காமாதியாவுஞ் சொல்சமையாதியுஞ்சூக்கதேகத்தின்சுரங்கள், சாலமுறப்பலவிதமாங்காரியதேகத்தைத்தருவதுகாரணதேகச்சுரநூலைவிட்டுச், சீலமுறுபிடவையிலைரோமமதைவிட்டுத் திகழுதாவழியில்லைமண்ணதனைவிட்டுக், கோலமுறுகடமில்லையிவைகள்போலதற்குக்கூறுசுரங்களைவிட்டுச்சரீரங்களில்லை. (௮௬)

இத்தேகமூன்றுக்குஞ்சொல்சுரஞ்சுபாவமெனல்போலச்சீவனுக்குப்பிரகாசசுபாவந்,தத்துவமேபாதலினாலவனுக்கோர்சுரமுஞ்சார்வதிலைச்சீவனுக்குமுதலிவ்வாறில்லாக், கொத்தானசுரஞ்சாட்சியிடத்தில்வருமென்னக்கூடாதாகையினாலேவேதமுமெஞ்ஞானிக், கெத்தாலுஞ்சரீரானுதாபமில்லையாமென்றிசைக்குதெனவறியிவ்வாறிலாதசுரமுன்னாள். (௮௭)

எவ்வாறுதபித்ததெனிலஞ்ஞானமதனாலிலங்குமனைபுத்திரர்கடபிக்கின்றவதனைத், தவ்வலுறத்தான்றபித்ததெனுமூடகரம்போற்சரீரமதுமூன்றினையுஞ்சாட்சியையுங்கூட்டித், தெவ்வாகத்தன்சொருபமாயெண்ணிக்கொண்டுதேகமதுதபிக்கிறதைத்தான்றபித்ததாகக், கவ்வையுறப்பிரமிப்பனறிஞானம்வந்தகாலத்தின்பின்புதான்றபியாதிராமல். (௮௮)

திரும்பவுமேதவிப்பதேனெனில்விவேகத்தாற்றிகழ்பிராந்தியைத்தள்ளித்தனைச்சாட்சியாக, விரும்பலுடனறிந்தபின்புமுந்தினதாபம்போய்விட்டுநிந்தப்பழுதைக்காயேனோடியிடுப்பைப்,பெரும்பாலுமுறித்துக்கொண்டோமென்றல் போலப்பேசவிலாச்சமுசாரமதையேன்மேற்கொண்டோங், திரும்பாமலென்கின்றவெறுப்பைநீதானுந் திகழ்த்தினாய்த்தாபமெனவென்றுணர்வையானால். (௮௯)

சாட்சிநாமென்றறிந்தாற்போதாதோவனந்தந்தரமாகவனுசந்தானந்தனைசெ
ய்வானேன், காட்சியாந்தேகமதைநானல்லவென்று கருத்தினுற்பலபடப்பா
விப்பதேனென்னி, லாட்சியிலாச்சமுசாரமனைத்தையுமும்மிடத்திலாரோபி
த்தேனதனைப்பொறுத்துக்கொள்ளென்று, சாட்சிதனைச்சரணாக வடைந்தி
டுதலாயுந்தான்செய்பாவம்போகப்பிராச்சித்தஞ்செய்தே. (கூ0)

போக்கல்போற்சஞ்சிதமாங்கன்மமதுவிட்டுப்போகத்தக்கனையாகவனுசந்தி
த்திடுத, னீக்குவதாம்பரங்கிகையிலகப்பட்டபிரமர்நிரம்புபிராயச்சித்தமத
னாலேபிரம, யோக்கியத்தையடைந்தபின்புபரங்கிதனைக்கண்டாலோடுவது
போற்றேகநானல்லவென்று, நோக்கியனுசந்தானம்பண்ணுவதென்றுணர்
வாய்நுவல்கின்றஞானியாயிருக்கிறவன்முன்போல். (கூக)

பிரபஞ்சவிவகாரம் பண்ணுமனுணம்பெறுவதேனெனிற்குய்ய ..தனிலே
ாோகத், திரமடைந்தவேசியறிந்தவர்முன்புநடனஞ்செயநாணுகின்றாற்போ
ற்சீவனுமேதன்னைத், தரமாகமாயைமயமென்றறிந்தபின்புதனைக்கருத்தாவெ
னச்சொல்லநாணுவானறிவா, யுரமானஞானம்வந்தபின்னணாடுக்கமுறலா
மோவென்னில்வாலிபனாகவிருப்போன். (கூஉ)

சிமைபெறவரசர்தனையாச்சிரயஞ்செயல்போற்சிற்பிரமமறிந்தவனப்பிரமமா
மென்னுந், தீமையிலாவேதவுரைகேட்டுமேயவற்றைத்திரமாகவனுசந்தான
ஞ்செயலேயன்றித், தோமருவுபீதியிலையறிபிரமஞானஞ்சூழ்ந்தாபாசனைக்
கொல்லவந்ததனாலெவருந், தாமரணமுறமருந்துகுடிப்பாரோவென்னிற்று
ந்தேவனாகலாமெனுஞ்சந்தோடத்தால். (கூந)

கெங்கையினிற்பிரவேசம்பண்ணுகின்றாற்போலக் கிளர்பிரமமாகலாமெனு
ஞ்சந்தோடத்தான், மங்கலறஞானப்பியாசஞ் செய்வதுவாமருவியறிகெங்
கைவிளமுயற்சிசெய்தவுடனே,பங்கமுறுந்தேவனாகின்றதுபோன்ஞானிய
ப்போதேபிரமமதையடையவிலையென்னிற், பங்கமறமுயற்சிசெய்தகருமம
துமுடிந்துபகர்தேகநசிக்கும்வரைமனுடனெனும்பெயர்தான். (கூச)

நிற்பதுபோற் பிராரத்வதேகம்விழும்வரையு நிகழ்சிதாபாசனெனும் பெயர்
போகாதறிவாய், பொற்புறவேபழுதையெனவறிந்தவுடன்பாம்புபோகவிலை
யோவென்னிறபழுதையெனவறிந்துஞ், சற்பபயங்கிரமத்திற்றணிகின்றாப்
போலுந்தசமனடித்துக்கொண்டதன்காயநாளி, லற்பமாய்த்தணிவதுபோற்
பிராரத்வபோகமனுபவித்தேதுலையுமெனவறிந்திடுவாயன்றே. (கூரு)

ஞானம்வந்தும்பிராரத்வதுக்கமங்ஙனிருந்தானவிறுக்கநிவிர்த்தியெனுமாரு
வதவத்தை, யீனமறவெவ்வாறுகூடுமெனிற்றசமனிறவாமற்ருேனுகக்கண்டிடு
ஞ்சந்தோட, மானதுபுண்வேதனையைத்தெரியவொட்டாததுபோலறிவான
தான்பிரமமென்றுமுத்தனுன், றீனமறுசந்தோடம்பிராரத்வதுக்கர்தெரிய
வொட்டாததனுலவ்வவத்தையதுகூடும். (கூரு)

சாற்றுசிதாபாசனுருமவத்தையறிந்தோந் தடையிலானந்தமதைத்தெரியவ்
ருளென்னி, லேற்றுமிகபரங் குறித்துச்செயவேண்டுங்கருமமெலாஞ்செய்
துமுடிந்ததனுற்பிரமமுமோட்சமுமே, போற்றுநாமென்றறியப்படுவதான்
மனநிற்புகலுமொருகுறையுமிலையென்வறிந்ததாலே, யாற்றுதடையற்றவா
னந்தமதுவுண்டென்றறிகாண்டத்திறையமதிற்கூறுமனுட்டானம். (கூஎ)

ஒன்றுமேபண்ணமவிருக்கையினுமெல்லா முஞற்றியவைமுடிந்ததெனவு
ணப்பதெவ்வாறென்னி, லன்றெனவெலாந்தீர்ந்தமுறியாகவகுப்பற்றகனே
யுஞானியினனுசந்தானத்தாலறிவாய், துன்றியேசெய்வதறிவதுதேவையி
ல்லாத்தூயனுசந்தானமதைத்தெரியவுணாயென்னிற், பொன்றலுறநான்றுக்
கியென்றிருக்குமஞ்ஞன்பூமிதனம்புத்திரமித்திரதாரம்வேண்டி. (கூஅ)

இகலோகசமுசாரத்தலேந்திடுவனுமிலங்குபரமானந்தபூரணமாதலினும்,
பகருகின்றவம்மாயாமயந்தேவையில்லேப்பரலோகம்வேண்டினவனதற்கேற்
றகன்மமுகவையாயனுட்டானஞ்செய வேண்டுஞ்சகலவுலகமுமாயாமயமா
ய்ப்பார்க்கின்றநமக்குத், தகவான கருமமொன்றுந் தேவையிலேப்பிரமன்சா
ருலகம்விரும்பினேன்வேதசாத்திரங்கள். (கூகூ)

ஓநுவதுநாநிரதிகாரியாதலினு லோதுமதுதேவையிலேத்தத்துவத்தையறிய
ப், போதுவோன்வேதாந்தசிரவணத்தைச்செய்வான்பொருந்துமவையறிந்
தோனுக்கதுதேவையில்லேத், றீதானசந்தேகமுளன்மனனஞ்செய்வான்றே
கநாமென்றிருக்காலெண்ணேஞ்சந்தேகக், கோதிலாப்பிரமமாயிருக்கின்
றநமக்குக்குறிக்குமவைதேவையில்விபரீதபாவம். (௱)

திடமாகவுடையவன்முனிருத்தியாசஞ்செய் திடவேண்டுந்தேகாதிவிலட்ச
ணனுநமக்குத், தடமாகத்தேவையிலேவிட்சேபமுடையோன் சமாதியிருந்
திடவேண்டுஞ்சின்மாத்ரவடிவாய், மடமையிலாதிருக்குநமக்கவைதேவை
யில்லேவபூத்துகின்றவிட்சேபஞ்சமாதியிருவகையு, மிடமானவுட்கரணத்
துடையதாதலினுலியற்றவேண்டியதறிவதியாவுமுடிந்ததுவாம். (௱க)

விவகாரமிருக்கையிலேயுமக்குவிபரீத மேவாதெங்ஙனஞ்சுழுத்திபிச்சையு
டன்முழுக்கு, மவமானசவுசமிந்தநான்குநீர்பண்ணவறிந்தோமென்றிடின
வைதான்குலாலசக்கரம்போற், பவமானவாசனையினடக்குதலானமக்குப்ப
கரும்விபரீதமிலைக்குன்றிமணிச்செடியை, யவமாகப்பிரத்தியாலனெ ருப்பெ
னலால்வேகாததுபோலநீநமையுங்கருத்தாவென்றதனால். (௩௨)

இன்பமுறுசுழுத்திமுதலானவையைச்செய்தோனெனவாகோமெனவறிவா
ய்வாசனையானடக்கு, மன்புளசெய்கையும்போகவேண்டாமோ வென்னில
துபிராரத்வமதுதொலைந்தலதுபோகா, தென்பாகவறிகுதிநும்விவகாரமதற்
குத்திகழும்விதியேதென்னிலௌகீகமேனும், பின்புவரும்வைதீகமுத்கண்
டமேனும்பிராரத்வமுள்ளபடிநடத்தல்விதியறிவாய். (௩௩)

ஆனாலும்மிடத்திலேயொருவருநம்பிக்கையடையார்களுமைப்பெரியோரொ
னஞானங்கேளார், பானமுறுமும்முடைய ஞானமுமக்கன்றிப் பரனாயும்
டேறச்செய்யாதென்றுயானா, லூனமறநான்கிருதகிருத்தியனானாலு முலோ
கானுக்கிரகமாய்த்தேவரரிச்சனையு, மீனமறுசவுசாதிகளைக்காயஞ் செய்கவி
யன்றபிரணவசெபமும்வேதாந்தபாடம். (௩௪)

முதலானவவைகளையும்வாக்கதுசெய்திடுகெ மூர்த்தியுபாசனைபிரம த்யானம
னைமனதிங், கிதமாகச்செய்திடுகவிவைகளைநாஞ்செய்க வியம்பினவனல்ல
வவைசெய்தவனுமல்லத், திதமாகவிப்படிநாமிருந்திடிற்கன்மிக்குந் திகழ்ந
மக்குஞ்சண்டையிலைநம்முடஞானமுமே, நிதமார்க்குமுபகார மாமறிவாய்
ஞானநிகழ்கருமமிதற்கெவையானிர்ப்பந்தமென்னில். (௩௫)

ஞானியினாற்பொய்யெனவே தள்ளுவதாமந்த நவிலுதிரிகரணமதாற்கரும
மானதற்கே, யீனமிலாநிர்ப்பந்தமல்லாமற்சாட்சியிடத்திலேநிர்ப்பந்தமிலை
யந்தமூன்றுந், தீனமிலாக்கரணத்தாற்கருமிகருமத்தைச் செய்யட்டுமதனா
லேநமக்கானியேதிங், கானியின்ஞானத்தினுக்குநானசங்கனென்னு மதனா
லேநிர்ப்பந்தமலதுதிரிவிதமாம். (௩௬)

கரணத்தினிடத்திலேநிர்ப்பந்தமில்லைக் கரணத்திற்கருமத்தைவிலக்கிடுதல்
வேண்டாம், புரணமாஞானிதனைப்பிரமமெனவறிந்துபொருந்துவதாற்கரு
மிதனக்கானியேதறிவாய், முரணாகவெவருமறியாமலான்மாவை முக்கரண
த்துடன்கூடக்கருத்தாநாமென்ற, திரணமாங்கருமிகளு ஞானம்வந்தவுட
னேதிரிகரணமதற்குமொருகருமமும்வேண்டாத. (௩௭

வேறு.

ஞானிகளுமொருவரோடொருவர்சண்டை நண்ணுவதேனெனிலவர்களக்
ஞானத்தா, லானியுறுசெவுடர்கதைகேட்டாப்போல வழகிலாச்சண்டைக்
கிநிற்பரோர்வாய், ஞானமுறுவோன்பரனைக்குறித்தானலுநவில்கருமப்பிர
விருத்தியுசிதமல்ல, மானமுறுநிவிர்த்தியாய்ச்சன்மார்க்கத்தைமருவியிருந்
திடவேண்டுமென்னிற்சொல்வாம் (௯அ)

அறிஞோர்க்குப்பிரவிருத்திபலனெவ்வாறிங்களிக்கலையோநிவிர்த்தியுமவ்வா
றென்றோர்வாய், நெறியானநிவிர்த்தியுமேஞானத்துக்கு நிகழ்ந்திடுசாதன
மென்னிலறிந்தபின்பு, செறிவானசாதனம்வேண்டாமென்றோர்வாய்செகந்
தோற்றலாலின்னமஞ்ஞானத்தாற், றறுகுதல்செய்பிராந்தியதுவந்தபோது
ஞ்சாதனத்தையனுட்டித்தாற்றாழ்வேதென்னின். (௯௯)

குலவுமுயிருளவெலியேபூனைதன்னைக்கொல்லாதென்றாற்செத்தவெலியோ
கொல்லும், விலகலுறுப்பாசுபதங்கொல்லாதோனை விழற்கழியோகொலுமி
துபோலனுதியாகத், தொலைவுறஞ்ஞானவரணமாதியாவுஞ் சூழ்ந்துமே
கொல்லாதபோதந்தானு, யிலகுதிடஞானத்தாற்கொல்லப்பட்டே யிருக்கு
மஞ்ஞானத்துடனக்காரியங்கள். (௱)

திரும்பவுமேபெந்தமதுசெய்யுமென்ன றிகழ்புத்தித்தாழ்வொழிய வேறன்
றோர்வாய், துரும்பெனுமஞ்ஞானதற்காரியங்கள்யாவுந் தொடைபடினுஞ்
செகந்தோற்றுவதனாற்சொன்னோம், விரும்பவைதோற்றிடிலென்னவிவைக
ள்யாவுமேநாங்கொன்றோமெனப்போர்க்களத்தைப்பார்க்கும், பெரும்பான்
மையுளபோதராசர்க்கத்தாற்பெரிதாந்திர்தியலாற்பீதியிலைப்போல. (௱௧)

வேறு.

போதமுறுசூரனுக்குத்தேகாதிகுறித்துப் பொருந்துபிரவிருத்தியிலுநிவிர்
த்தியிலும்பலன்றூ, னேதுமிலையெனவறிவாய்பிரவிருத்தியாகாதிலங்குகின்
றநிவிர்த்தியாமெனலாருக்கென்னின், மோதமுறுசுவர்க்காதிமோட்சம்வனை
யடையமுயற்சியதுபண்ணுகின்றவஞ்ஞனுக்கென்றறிவாய், சாதமுறுமிவ்
வஞ்ஞானிகளுடனேஞானிசார்ந்திருக்கும்பொழுதினிற்செய்காரியமேதெ
ன்னில். (௱௨)

மகன்பிதாவினையடித்துவைகாலுமதனுன்மனதிலேதுன்பமறச்சீராடல்போல, வகமுளவஞ்ஞானிகடான்றூஷணைகள்பூசை யாற்றினுந்தான்றிரும்பவங்ஙன்வதிலாய்ச்செய்யாமற், றிகழவர்கள்சம்மதமாய்க் கரணமூன்றாலுஞ்செறிகருமஞ்செய்தவர்க்குஞானமேற்றிடலே, புகலவர்செய்தொழிலறிவாய்ஞானியானோர்க்குப்புகன்ஞானப்பியாசமதுசெய்பவர்களோடே.(௱௰௫)

கூடியிருக்கும்பொழுது செய்தொழிலேதென்னிற் குலவுஞானந்தனையேபோதனைசெய்தவர்க்குப், பீடிலாக்கருமாதிதனைத்தூஷித்ததனுற் பிறங்கவரும்பலன்றுறந்துகாட்டலெனவறிவாய், சேடாதுஞானிதனித் திருக்கின்றபொழுதுசெய்தொழிலேதெனிற்றனதுகிருதகிருத்தியமாய், நாடிமோனந்தத்தைக்கண்டுகளிப்படைந்துநாம்பிரமமென்றறியவென்னபாக்கியத்தை.(

பண்ணினமோநம்முடையவஞ்ஞானந்தானும் பகருமெந்தவழிபோச்சோநாஞ்செய்யாநின்ற, நண்ணதிட்டவெத்தனத்தானமக்கொருசம்சார நாட்டமறப்போச்சுதேநவில்பிரமானந்த, முண்ணுநிலைவெட்டவெளி யாய்த்தோற்றநமக்கிங்குதவினதேயுலகத்தில்யாவையுமேபிடிக்க, திண்ணமுறுகர்த்தவ்யங்களிலொன்றுநமக்குத்தேவையற்றுப்போனபாக்கியமேதோபாரும். ( )

பெறவேணுமென்கின்ற பிரமமேநாமாய்ப் பெற்றனமேயித்தனைபாக்கியத்தையுமேநமக்கிங்,குறநேராய்த்தந்தவிந்தச்சாத்திரத்தைப் புகழ்வோமோவிந்தச்சாத்திரத்தையனுபவமாயுறவே, திறமாகப்பயிற்றிவைத்த குருத்திசெய்வோமோதிகழென்னபுண்ணியத்தாற்பலித்துதோ விங்ஙன், விறலானம்முடையபுண்ணியங்கடனக்கு மேவுஞானத்தினுக்கு நமதுசுகமதற்கும். (௱௰௬)

வேறு.

ஒப்போதவில்லையென்றுறுபொழுதெலாமுந் *
தப்பாதுதனதுசுபவானந்தமதனைத் *
துப்போடுமனுபவமதாகத்தொடர்ந்தே *
யெப்போதுமனுபவித்திடுதல்காரியமாம். (௱௰௭)

இரண்டாவது திர்ப்திதீபவிலக்கணமுணைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆகவத்தியாயமிரண்டுக்குக்கவி—௨௱௬௰௨

முத்துராமலிங்கசுவாமிகள் திருவடிவாழ்க

# மூன்றாவதுகூடஸ்ததீபவிலக்கணமுரைத்த

## வத்தியாயம்.

பருதியெனவஞ்ஞானவிருளதுபறிக்குங் *
கருதுமறிவானதொருகடவுள்வடிவாகி *
மருவுமதியெனநிலவும்வன்னிவனமதனி *
னருள்வடிவமாய்வருமெனையனடிதொழுவாம். (க)

புகழ்பெருகும்வித்தியாரண்யராமடிகளும்புகலும்வேதாந்தமதனை *
விகலமறவிரிவாய்விசாரித்திடச்சத்திமேவாதபேர்களுக்குத் *
தகமையுளகூடஸ்ததீபிகையினற்றொம்பதார்த்தமதுசொன்னதோதி *
னகலாததொம்பதந்தனில்வாச்சியார்த்தமேதமர்லட்சியார்த்தமேது. (உ)

இந்தவிருவகையும்பொருந்துதற்குவமானமேதெனிற்றொம்பதத்திற் *
சிந்தனைசெய்கூடஸ்தர்லட்சியார்த்தஞ்சிதாபாசனவன்வாச்சியார்த்தம் *
பந்தமுறுதிட்டாந்தமேதெனிற்கண்ணாடிபதிவிம்பமானவெயிலு *
முந்திடுசுபாவவெயிருனுமொருமையதாகவொருசுவர்விளக்குவதுபோல் )

வேறு.

அறிவானகூடஸ்தர்சீவனுமேயொருமயதாயாகமொன்றை *
யறிவரறியிருவருமேனொருமையாய்த்தோற்றுகின்றரவர்கடன்னை *
நெறியாகப்பகுத்தறியும்வழியேதென்றிடினிகழுமவிவேகத்தால் *
வறிதாகவொருவனாய்த்தோற்றுவதாமருவுமோரவத்தைதன்னில். (ச)

ஏகதேசமதாகத்தோன்றிமறைகின்றசிதாபாசனேயு *
மாகமறுநித்தியமாம்பிரகாசமானகூடஸ்தரேயு *
மூகமதிலேகதேசத்திலுபாதியினாலேயுலையும்வெய்யில் *
பாகமறுமகண்டவெயிற்போற்குறிப்பினாலறிதல்பண்பாமோர்வாய். (ரு)

வேறு.

தேகமதின்புறம்பாகவிடயஞானந்தான்செறிபொழுதுகூடஸ்தர் சீவனையும்ப
குத்துப், பாகமுறவறியும்வழியேதெனவேகேட்கிற் பகருகடஞானம்வரலா
பாசன்றனக்கு, மோகமறக்கடோவிருத்திஞானம்வருவதுதான்மொழிகின்ற
கூடஸ்தராயிருக்குந் தனக்கிங், காகமுறுகடமெனவே யறிந்தவுட னனைந்
தோனுபாசனதைக்கண்டோன்கூடஸ்தனறிவாய். (சு)

கடஞானம்வருகின்றதற்குமுனும்பின்னுங் கடத்திலேகூடத்தரிருக்குதெனெ
லெங்ஙன், கடஞானம்வருதற்குமுன்னறியப்படாதாய்க் கருதுமவைவந்தத
ற்பின்னறியப்பட்ட துவாய்த், தடமாகக்காணுந்தன்னனுபவமேகுறியாஞ்சா
ர்ந்தறிவைகடமோர்காலறிந்ததாகவுமோர், தடமானகாலத்நிலறியாததாயுஞ்
சாட்சியிடத்திருவகையுந்தோற்றுவதேனென்னில். (௭)

எக்காலத்தினுமெங்குமிருக்குஞ்சுபாவ வியல்பானசைதன்யத்திடமதிற்கற்
பிதமாம், பொக்கமுறுகடமஞ்ஞானத்தோடுசேர்ந்த போதறியப் படாதாயு
ஞானமுடன்சேர்ந்தாற், சொக்கமிலாக்கடமறியப்பட்டதாகவுமேதோற்றின
தென்றறிஞானமஞ்ஞானமெதுசொல், தக்கருந்தவந்தமதிலோகம்போற்சீ
வன்சார்விருத்தியேஞானந்தோற்றமற்றபொருளே. (௮)

அஞ்ஞானமெனவறிவாய்விருத்திக்குமுன்பே யானசிதாபாசனிலா தாலறி
யாக்கடமு, மெஞ்ஞான்றுஞ்சாட்சிதானேயறிவர் விருத்தியெழுந்தபின்புக
டமதனையாபாசனறிவான், விஞ்ஞானசாட்சியறிவாரொன்றல் வேண்டாமெ
னிற் கடமென்றறிந்தவுடன்சீவன்விருத்தியிலே, பைஞ்ஞாகமெனநட்டமா
ய்ப்போனபடியாற்பகருமந்தவவசரத்திற்கூடத்தர்தவிர. (௯)

வேறுசைதன்னியந்தானில்லாதபடியால்விருத்திக்கிமுன்னறியப்படாதைய
றிந்திருந்த, பேறானகூடத்தரோவிருத்திவந்தபின்னறியப்பட்டுதெனத்தோற்
றிடச்செய்வதனுக், கீறிலாச்சந்தேகமில்லையாதலினு லிரண்டிடத்துங்கடம
றிந்தோர்கூடத்தரறிவாய், மாறிலாக்கடஞானம்வந்தவுடன்சீவன்மடிந்தாலு
மவனுடனேகூடமடியாத. (௰)

விருத்தியினுற்கடமறியப்படலாமேசாட்சி வேண்டுவதின்றெனிற் சிதாபாச
னிலாவிருத்தி, விருத்தமறுபிரகாசத்திரவியமானாலும் வெள்ளைமண்போற்
சடமானபடியினாலறியா, திருத்தமுறுசாட்சியேதோற்றுவிக்குமறிவாய்
திகழ்சாட்சியிடத்திலேகற்பிக்கப்பட்ட, திருத்தமறுகடமஞ்ஞானத்துடன்
சேர்ந்தாலுஞ்செறிகின்றவிருத்தியுடனேகூடினாலும். (௰௧)

அறிந்திடப்படாதென்றுமலவையறியப்படுவ தாகவேபேரொதனைல்வந்ததெனி
ற்சீவன்,பிறிதிபலித்ததைத்தொட்டேகடமறிந்ததுணர்வாய் பிறங்குசைதன்
னியத்தின்றடக்கானசீவ, னறிவதற்குமூலமானன்முன்னேசாட்சியதனுட
னேகூடினகாலவையறிந்ததாக, நெறியாகவோதுவோமெனின் விருத்தியத
னினிகழ்பிரிதிபலனசைதன்னியமாமதற்கே. (௰௨)

பலனுகவேண்டுமெலான்முன்னிருந்தசாட்சி பலனடையுமெனக்கூறக் கூடா
தென்றுணர்வாய், பெலனுகவோதினுற்சாட்சிசிதாபாசன் பேதமேதெனிற்
கடமதொன்றையுங்காண்கின்றேன், கலனமுருபாசனச்சிதாபாசன் விருத்
திகடமூன்றுங்காண்கின்றோர்கூடத்தரறிவாய், வலனுகவிதுவானுற்சாத்திர
க்ஞரெல்லாம்வரும்விடயக்ஞானமதிற்சைதன்யமிரண்டும். (௰௩)

பகுத்தறியாதேனென்னிற்கூடத்தனென்னப்பகராமலனுவிவசாயக்ஞானமெ
ன்று, பகுத்தறிவனெனவுணர்வாய்தேகத்தின்புறம்பேபகர்சிதாபாசனையுங்கூ
டத்தர்தனையும், பகுத்தறிந்தாற்போற்றேகத்துள்ளுமிருவரையும் பகுத்தறி
யும்வழியெவ்வாறெனின்வாகியத்திற்,பகுத்துவருவிருத்தியதன் கடபடங்க
ளாதிபகர்விடயமவையினன்னுவயவிதிரேகத்தை. (௰௪)

தெரிந்திருக்குஞ்சாட்சியெனவறிகின்றுப்போலத் தேகத்துக்குள்ளகமென்
விருத்தியுங்காமாதி, விரிந்தவதன்விடயமதுமிவையினன்னுவயமும்விதிரே
கந்தனையுமறிவதுசாட்சியறிவாய், புரிந்தவுள்ளேசாட்சிசிதாபாசத்தோற்றர
வைப்புகலென்னிற்காச்சினதாமிரும்பிலிருக்கின்ற, விரிந்தகனலந்தவயமா
த்திரத்தைத்தோற்றுவிப்பதலான்மற்றென்றைவிளக்காதுபோல. (௰௫)

காமாதிவடிவானவகவிருத்தியிடத்திற் கலந்திருக்குஞ்சீவன்றன்றேற்றுவ
தேயன்றித், தாமமிலாவன்னியத்தைத்தோற்றுவிக்கமாட்டான்சாக்கிரசொ
ற்பனத்தில்வருவிருத்தியவைநடுவு, மேமமுறுசுழுத்தியுடன்மூர்ச்சைசமா
திகளினிறத்தல்வரறேற்றுவிப்பதான்மாவென்றறிவாய், காமமுறுவெளிவி
ருத்தியறிநததமியாதைக்காண்பதாய்க்காட்டல்போலுள்ளுமந்தவழியாய் ()

காண்பியாதேனிதுவைவேறுவழியாகக்காட்டிநீரொனிலுள்ளேயகவிருத்திக
டம்போன், மாண்பானஞானுக்ஞானங்களிரண்டோடு மருவாதால ந்தவழி
தேவையில்லையறிவா, யேண்கொளகவிருத்தியினிலஞ்ஞானஞானமெனும்வி
ருத்தியேனில்லையெனின்விருத்தியதுதான், வீண்பயிலுங்கடம்போலத்தன
க்கனியமிலதான்மேவொருகான்ஞானவிர்த்திவந்துதெனக்கூடா. (௰௭)

அன்னியமாம்பதார்த்தமதினஞ்ஞானமதனையருந்துவதாலவ்விருத்திதனில
ஞ்ஞானமதாய், மன்னியிடும்விருத்திவரக்கணக்கிலையென்றறிவாய்மருவுமி
வ்வாறுட்புறம்புநானெனுஞ்சைதன்யம்,பன்னுமிருவகையெனவேநிச்சயஞ்
செய்தகற்குபலனேதா மெனிலிந்தச்சைதன்யமிரண்டி, லுன்னுகின்றகற்
பிதனேசெனனமரணுதியுறுபவன்கூடத்தராய்ச்சுபாவமாயிருக்கும் (௰௮)

தானொருகாலடையவிலைச்சமுசாரமென்னல்சார்பலனென்றறிபுத்திவளைபடுகூடத்த, ஞானமுறுசமுசாரியாகட்டுஞ்சீவனுறவில்லையெனிலசங்கசைதன்யந்தனக்குத், தானமுறுமுபாதியினில்வளைபடுதலாலேசமுசாரம்வருமானாற்குடங்குதிர்களதனான், மானமுறவளைபட்டசைதன்யமதற்குமருவுசமுசாரம்வரக்காணோமேசொல்வாய். (௰௯)

கடமதுபோலுட்கரணமலினமதுவலவே கருதுசொச்சத்திரவியங்கடன்னில்வளைப்பட்டான், மடமானசமுசாரம்வருமெனில்வெங்கலமாமரக்காலாலளந்ததுகொண்டொட்டிரொட்டிமூன்று, யிடமுறவேகாணாதுபோற்சொச்சமதனாவிலாபமிலையெனவறிவாய்மரக்கால்வெங்கலமாந், திடமானமரக்காலுஞ்சரியெனில்வெங்கலத்திற்றிகழ்விம்பங்காணல்போற் கடத்தினும்புத்தியிலே. (௨௰)

பிரிதிவிம்பமதிகமாமெனிலானாலிந்தப்பிரிதிவிம்பந்தான்சிதாபாசனிவனுக்கே, யுரியதுவாஞ்சமுசாரமுயிற்கிலையென்றறிவாயுபாதிவிடச்சீவனுக்குச்சொருபம்வேறிலதால், விரிவானசமுசாரங்கரணத்துக்கெனலாமேவுசிதாபாசனுக்குவேண்டாமேயென்னிற், புரிதலுறுசரீரம்விடக் கரணம்வேறிலதாற்புகறேகமதனுக்கேசமுசாரமறிவாய். (௨௧)

உடலமதுமரித்தாலும்புத்திமரியாதென்றோதுகின்றசாத்திரத்தாற்சரீரமதைத்தவிர, வடருமந்தக்கரணமதுவேறாகுமென்னிலானாலப்புத்திவிடச்சீவனும்வேறென்று, திடமுறவேபிரவேசவுபநிடதஞ்சொலலாற்சீவனுக்கேசமுசாரங்கரணமுறுதறிவாய், படருபிரவேசவுபநிடதமதிற்புத்திபற்றுகின்றசீவனுக்கேசரீரபிரவேசம். (௨௨)

சொல்லிடுதுபுத்தியினிலதீதமானவர்க்குச்சொல்லவிலையேயென்னிற்சடந்தேகமென்னும், புல்லுகின்றவாக்கியநாமில்லாதபோதுபுரமதுமிந்திரியங்களுமேசீவிக்காதென்று, நல்லவான்மாவுமேபிரவேசித்ததுவாய்நவிலுவதாற்கரணத்துக்கன்னியனாயென்று, மல்லலறவிருந்தவற்குப்பிரவேசஞ்சொல்லுதறிவாயக்கரணத்துக்கப்பாற்பட்டவனும். (௨௩)

சங்கமிலாவசங்கனலோபிரவேச மெங்ஙன்சாருமெனி லிவனுக்குப்பிரவஞ்சசிருட்டி, யங்கமுறவெவ்வாறுகூடுமெனவறிவாயசங்கனுக்குப்பிரவஞ்சசிருட்டியதுவிலையே. மங்குகின்றமாயையினில்வந்தவனுக்கல்லோமருவுகின்றசிருட்டியெனிற்பிரவேசந்தானுந், தங்குகின்றவவித்தையாகற்பிதனுக்கல்லாற்சாற்றுகின்றவசங்கனுக்கிங்கில்லையெனவறிவாய். (௨௪)

செகசிருட்டிசெய்தவரும்பிரவேசித்தவருந்திகழுங்கற்பிதமென்றதுப்பிரமாணமேதாம், புகலென்னின்மாயையுடனவித்தையெனுமிரண்டும்பொருந்துசீவேசரெனுமாபாசர்தன்னை, யகலாதுகற்பிவிக்குமெனும்வேதமொழியுமவர்களைநாமுற்றுவிசாரித்தாலில்லாதே, யிகமதனிலட்டமாய்ப்போறவனுபவமுமிதற்குமேபிரமாணமெனவறிவாயிங்ஙன். (௨௫)

பரசீவர்மாயையதின்கற்பிதமாமென்றும் பகரவருக்கப்பாற்பட்டவரான்மாவென்றுந், திரமானவேதத்திற்பகுத்துச்சொற்றிடுதோசெப்பெனிற்சீவேசுரர்கள்பூதபௌதிகங்க, ளுரமானபிரகிருதியிவைகளுடன்றோன்றியொழிவார்கள்கூடவென்றுமப்பாற்பட்டிருக்கு, மருவாதகூடத்தரவிநாசியென்றுமயித்திரிக்கிவியாக்ஞவர்க்கருணாத்தாரென்றறிவாய். (௨௬)

தேகமரிக்குஞ்சீவன்மரியாதென்றோதுந் திகழ்மறைவிரோதமலவோவென்னிலிந்த, மோகமறுவேதமதுபூதபௌதிகமாமோட்சமதைச்சொல்லவில்லையஞ்ஞானமான, சோகமுறுமவத்தையினிலோகாந்த்ரகெமனஞ்சொற்றிடுதாதலினாலேயான்மாவைத்தவிரப், பாகமுறுமனியமெலாமனித்தியமென்றறிவாய்பகரிந்தப்படிசீவனனித்தியனேயானால். (௨௭)

நித்தியமாம் பிரமத்தோடகம்பிரமமென்றுநிகழ்கின்றசமானாதிகரணமெங்ஙன்கூடுங், குற்றமறுமுக்கியமாஞ்சமானாதிகரணங்கூடாதாயினுந்தாணுப்புருடக்ஞானம்போல், வித்தகமுறுவாதசமானாதிகரணந்தான்மேவுமெனவறியானல்விவரணசாரியர்தான். புத்தியுறுவாதசமானாதிகரணத்தைப்போக்குவதேனெனினானென்சத்தமதற்கருத்தம். (௨௮)

கூடத்தனெனக்கண்டுகெண்டித்தாரறிவாய்குலவுகூடத்தரோதானைக்கண்டாற், பீடுற்றதற்பதத்தொம்பதத்தினுக்குமருத்தம் பேசெனிற்றேகேந்திரியமாதிகளையுடைய, சேடற்றபிராந்தியதாஞ்சீவனதிட்டானஞ்செகசரீரம்படைத்தவீசனதிட்டானஞ், சோடுற்றவவ்விரண்டுமருத்தமெனவறிவாய்தொம்பதததற்பதத்தினுமோர்பிரமத்தைத்தானே. (௨௯)

ஏகதேசங்களாய்ச்சொன்னாலவ்விரண்டுபதங்களுக்குமருத்தபேதங்களுண்டோவென்னி,லாகின்றபொய்த்தேகஞ்சகமிரண்டாற்பேதமன்றியதிட்டானமொன்றே யிரண்டில்லையென்றறிவா, யூகமதினிண்ணயமாய்ப்பிரத்தியட்சமாகவொளிர்சீவனீசுரனைப்பிராந்தியென்னக்கூடாத், தேகமறுமான்மாபோலேகவிலக்கணமாய்த்திரநிலையாகாதாலுஞ்சித்துசெடமாயும். (௩௰)

குழகுறுநித்தியமாயுமனித்தியமாகவுமே குழம்புவதாற்பிராந்தியெனறப்பி லையென்றறிவாய், நழுவுசகமதிலேகரீதியாய்த்தோற்றுநலமானபிராந்தனுக் கும்விவேகிக்கும்பேத, மெழுவதெவாறெனிற்சீவனுவதார்புத்தி யெதுவா னமாவெதுசெகத்துத்தோற்றுவிதமென்னென், றுழல்நின்றகலக்கமுளோ ன்பிராந்தனிவன்றனக்கேயுறுசமுசாரமதாகுமவையவையின்குணத்தை.()

பகுத்தறிந்துதான்சச்சிதானந்தமென்றுபரமாகநிச்சயிப்போன்முத்தனென வேதம்,வகுத்துரைக்குதறிதானேசச்சிதானந்தமாயிருப்பதற்கடையாளந்தா னேதென்னிற்,செகுத்திமொயாவிருத்திமனோவிருத்திதோன்றறிகழ்தலழித ற்குமேசாட்சியாயிருக்கு, மிகுத்திமொன்மாவுமேசத்தென்பதொக்குமேவு மெலாமறிகைபினுற்சித்தென்பதொக்கும். (௩௨)

ஐங்கோசம்விடுகினுந்தான்கைவிடக்கூடாவஸ் தானதாலானந்தமெனல்கூடு மிவரோ, மங்காதபரமசிவனென்றிடுபுராணவசனமேபிரமாண மாகுமெனவ றிவா, யெங்குமுளகூடத்தர்க்கன்னியமாஞ்சீவ னீசுரனுமாயாகற்பிதமான பூதம், பங்கமுறுபௌதிகங்கள்போற்செடமாகாது பரவுசைதன்னியமாயி ருக்குமிவர்களையும். (௩௩)

ஏதமறுமாயாகற்பிதமென்னக்கூடாதெனிற்சகலபாண்டமு மண்ணிடத்தி னில்வந்தாலுஞ், சாதமுறுகாசகும்பநிருமலமாவதுபோற் சார்மாயாகற்பித த்துட்சீவேசர்தானுங், கோதிலாப்பிரகாசத்திரவியமென்றறிவாய்குலவுகின் றகாசகும்பநிருமலமானலுந், தீதானசெடமதுபோற்சீவேசர்செடமாய்த்தி கழவிலையேயென்னிலசனத்தால்வருகும். (௩௪)

சரீரவிந்திரியாதிகளுக்குளேமன நுசார்போதரூபமாயிருப்பதேபோல வருமாயாகற்பிதத்துட்சீவேசர்போத வடிவாகவேயிருப்பனெனவறிவாய்மா யை, தருசெடத்தைக்கற்பிக்குமல்லதுசைதன்யந் தன்னையுங்கற்பிக்குமோ வென்னிலொருசீவன், மருவுகின்றநித்திராமேகமனேகமதாய்வருகின்றசிற் செடத்தைக்கற்பிக்கக்கண்டால். (௩௫)

ஏவுசீவேசாமாமாயைகற்பிக்கு தென்றநிலையாச்சரியமேதென்றேபுணர் வாய், மேவுவதாஞ்சீவனதுகிஞ்சிக்ஞமுதலாம் விரிவில்குணங்களைமாயை கற்பிக்குமல்லாற், பாவனமாஞ்சருவக்ஞசருவேஸ்வரத்வ பஞ்சகிருத்திய முதலாங்கல்யாணகுணத்தைத், தாவுவதாமாயைகற்பிவிக்குமோவென்னிற் றனையனைப்பெற்றவன்றான்பேரிடுகின்றுப்போல. (௩௬)

ஈசுரனைக்கற்பித்தமாயையதற்கேற்ற வியறொழிற்கற்பிப்பதிலே யெதுபாரம் றிவா, யாசிலாவித்தனைவல்லபமானமாயைக்கானவொருகூடத்தர் தன்னைக் கற்பிக்க, வேசிலாச்சத்தியிலையோவென்னிற்சீவ னீசுரனுங்கற்பிதமாமென வேதஞ்சொல்லக், காசிலாதறிவதுபோற்கூடத்தர்மாயா கற்பிதமென்றொரு வேதப்பிரமாணமில்லை. (௩௭)

இவரோயுண்மைப்பொருளா மாதிவஸ்துவென்றே யெல்லாவேதங் களுமே கொண்டாடுதெதனாற், றவறானவுஞ்சங்கைக்கிடமிலையென்றறிவாய்சார்மாயா கற்பிதமாஞ்சீவேசராளால், விவரமாயென்னகாரியமுடியுமென்னில் விரிய மாயையைப்பார்க்கும்பார்வைமுதற்சிருட்டி, யெவமிலாப்பிரவேசமந்தபரி யந்தமீசுரகிர்த்தியநனாக்கனாச்சுழுத்திமுத்தி. (௩௮)

வரையுளசம்சாரமெலாஞ்சீவர்தொழிலறிவாய் மருவுகூடத்தருக்குக்கிர்த்தி யமேதென்னி, லுரையுள்ளவவரசங்கரேயல்லாலவருக்கொருதொழிலுமில் லையெனவுணர்ந்திடுவாயிங்ங, னிரையாகப்பகுத்தறிந்தோ னிருப்பதெவ்வா றென்னினிகழ்பெத்தன்முத்தனெனாடுபெந்த மொடுமோட்சங், கரையிலாவுற் பத்திநாசமெலாமாயாகற்பிதமல் லாற்றனக்குச்சுபாவமாயொன்றும். (௩௯)

இல்லையெனக்கலக்கமறத்தெளிந்திருப்பனறிவா யிவையொன்றுமிலாவிட் டாற்சீவேசர்செகத்துப், புல்லுமரியாதையெலாம்வேதமதுதன்னிற் புகல்வ தேனென்னிலதிசூட்சுமமாயிருக்குந், தொல்லையுளவான்மாவைக்காட்டுவத ன்பொருட்டுத்தூலாருந்ததிஞாயமாய்ச்சொலுதென்றறிவாய், சொல்லுமிவ் வாறறிகின்றவிவேகிபிராரத்வத்தோற்றரவையெவ்வாறுகாண்பனெனிற்சொ ல்வாம். (௪௰)

சாத்திரத்தையறியாதோன் கலங்குகின்றாப்போலத் தான்கலங்காவகைமா யையாகின்றமேகங், காத்திரமாம்பிரவஞ்சமாகின்றமழையைக்கணக்கறவே பெய்யினுஞ்சிதாகாசமாக, வேத்தியமாயிருக்கின்றநமக்கானியேதுமேவுப லனேதென்றுகவலையறவிருப்ப, னுத்தனிடங்கூடத்ததீபிகையைநித்த மனு சந்தானஞ்செய்வோனான்மாவாயிருப்பன். (௪௧)

மூன்றாவது கூடத்ததீபவிலக்கணமுரைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆகவத்தியாயமூன்றுக்குத்திருவிருத்தம்—௨௱௮௰௫

முத்துராமலிங்கசுவாமிகள் திருவடிகளேசரணம்

---

நான்காவது

# தியானதீபவிலக்கணமுரைத்த

## வத்தியாயம்

ஆனைமுகனாதியாந்தேவரெல்லாமமர்ந்தவன்னிவனமானக்ஷேத்திரத்தின் மோனையெனும்பரப்பிரமசொரூபந்தானே முத்துராமேசனெனுநாமம்பெற்றுத், தானையெனவனேகமடியார்கள்சூழச் சந்திரன்றாரகையளோடும்வரல் போல்வந்து, ஞானவடிவேநீயென்றருளிச்செய்த நாதனேவுனதுபதங்களினம்போற்றி. (௧)

வேறு.

சாதனங்களுடையோர்க்குச்சவணமாதியனுட்டான *
வேதுவதனால்வரும்வாக்கியார்த்தக்ஞானமிதனோடுங் *
கேதமில்லாச்சிவன்முத்திநிலையுங்கிழ்ச்சொல்கிரந்தத்தி *
லோதிப்பிரக்ஞாமந்தமுதலோதும்பிரி[illegible]பந்தமதால். (௨)

முன்புபுகன்றநிலைதிடமாயடையாதோர்க்குமோட்சமுற *
வன்போடியற்றவேண்டுமனுட்டானமேதாமெனிற்பரத்தைத் *
தென்பதாகவுபாசனையேசெய்யவேண்டுமறிசகுண *
வின்பமானவுபாசனைபோலிதற்குக்கிரியையாதென்னில். (௩)

இந்தவத்தியாயமதினிசைக்கும்படியேபிரமத்தை *
யந்தமாகத்தியானஞ்செய்வதுவேயல்லால்வேறோ *
ருந்துகிரிகையிலைபுணர்வாயிதற்குமானமுரையென்னிற் *
சொந்தமானதாபன்யசுருதிபிரமாணமதறிவாய். (௪)

வேறு.

வசையறுதானாயிருக்கும்வத்துவையன்னியமாம்வத்துவைப்போலுபாசிக்கக்கூடாதேயென்னி, லிசைசம்வாதிப்பிரமைபோற்கண்டுங்காணாதிருக்கின்றதாலுபாசனைகூடுமறிவாய், நசையுள்ளசம்வாதிப்பிரமையதுயாதுநவில்வதாம்விசம்வாதிப்பிரமையாதென்னின், மிசையுள்ளமணிப்பிரபை கண்டுமணியெனவேமேவுவதுசம்வாதிப்பிரமையதுவிளக்கின். (௫)

பிரபைகண்டுமணியெனநாடுதல் விசமவாதிப் பிரமையறி பிராந்திபாய்நாடினேன்றனக்குப், பரவுபலன்கொடாதென்னில் விசம்வாதிப்பிரமை பலன்கொடாச்சம்வாதிப்பிரமைநாடினகா, முரமானபொருள்கொடுக்குமாகையினாற்பிரமவுபாசனையுஞ்சம்வாதிப்பிரமைபோன்முத்தித், திரமானபலன்கொடுக்குமறியிந்தப்பிரமத்தியானத்துக்கதிகாரியாரென்னிற்சொல்வாம். (௬)

அபரவுணர்வுளஞானியதிகாரியறிவாயாயினுபாசனை பண்ணுங்கிரமமேதெ
ன்னிற், சுபமுறகண்டாகாசபோதமேதாறுய்ச் சொல்வதேகிரமமறியிந்தவு
பாசனைக்கிங், குபமானம்யாதென்னிற்கண்ணாரக்காணு தொழிகினுஞ்சாத்
திரஞ்சொன்னபடிபாவிக்கின்ற, விபமூர்த்தித்தியானமேதிட்டாந்தமறிவாய்
விளம்பபரஞானமதின்லெட்சணமேதென்னில். (௭)

ஓதுகின்றபிரமந்தானெனவறியாதவையை யுண்டெனவே நிச்சயித்தலபரவு
ணர்வறிவாய், கோதிலவைசந்தேகமாவதாற்பலனைக் கொடுப்பதெவ்வாறெ
னின்மூர்த்தித்தியானவுபாசனைபோற்,போதுபரோட்சக்ஞானந் தன்னிலொ
ருவருக்கும் பொருந்தவிலைச்சந்தேக மதனுற்சம்வாதித், தீதிலாப்பிரமை
போற்பலன்கொடுக்குமறிவாய்திகழ்பிரமந்தானுகச்சொலும்வேதாந்தத்தை

கற்றுமிவனுக்கவைதான்பரோட்சமாகவுமே காரணமேதெனிற்றேக மேநா
னென்கின்ற, குற்றமுறுவிபரீதபாவனையான்மாவைக் கோதிலாத்தானுகத்
தோற்றவொட்டாதறிவாய், சற்றில்பரோட்சமதானவஃத்தொய்தபுத்திதன்னை
யுமேபிரத்தியடசமாந்தொய்தபுக்தி, செற்றமொடேன்கெடாதென்னிற்பிர
த்தியட்சமானசிலாபுத்திபரோட்சமாமீசுரபுத்தியையும். (௯)

தள்ளாதுபோலவேபிரத்தியட்சமாகச்சார்கின்றதொய்தபுத்திபரோட்சமாயி
ருக்கு, முள்ளதாமத்தொய்தபுத்திதனைப்போக்கா துணர்சிரத்தையில்லார்
க்குச்சிலைதனிலீசுரனுய்த், தெள்ளவுறுபுத்திவரக்காணுமேயென்னிற்சிர
த்தையுள்ளோனதிகாரியல்லாமற்சிரத்தை, விள்ளுமவன் றனைநூலிலெடுத்
துணைத்தல்கூடாவெனவறிவேதாந்தங்கற்றல்லதுடபரோட்சம். (௰)

வாராதோவெனின்மூர்த்தியுபதேசம்போல வரும்பிரமமதையுமுபதேசமாய்
க்கேட்டுச், சீராகவறியலாமெனவறிநூலவிசாரஞ்செய்யாமற்பிரமத்தையுப
தேசமாக, வேராகக்கேட்டறிவதெப்படியாமென்னி லெழிற்கருமசூத்திரத்
தைப்படியாமலவைபி, ஞராதவனுட்டானஞ்சித்தித்தாற்போலுமாகமநூல்
படியாதொபாசித்தல்போலும் (௰௧)

சாத்திரத்தைவிசாரிக்கச்சத்தியிலார்பெரியோர் தமைப்பிரமமின்னபடியிரு
க்குமெனக்கேட்டுக் கோத்துபாசிக்கலாமறிசாட்சாக்கரமுங்குருவுபதேசங்
கொண்டுவாராதோவென்னி, ஞத்தமுறவிசாரியாதவர் சாட்சாக்கரத்தைய
டையார்களெனவறிபரோட்சக்ஞானத்தி, லேத்துவதாம்பிரிதிபந்தமேதென்
னிற்சிரத்தையில்லாதேயவையினதுபிரிதிபந்தமறிவாய். (௰௨)

அபரோட்சஞானம்வரத்தடையேதாமென்னிறைய்தலிலாத்தோடமேபிரிதிபந்தமறிவாய், தபமானசுருதிவிசாரஞ்செயினுஞ்சிலர்க்குச் சாட்சாத்காரம் வாராதென்னத்தாலென்னில், விபமிலாவிபரீதபாவனையாற்சுருதி விசாரித்துமவைவாராதிருக்குமெனவறிவாய், சுபமானசுருதிவிசாரித்துமவைவாராதோனுக்குச்செய்தொழிலேதெனிலவைபின்பலமாய். (௰௩)

மேவுசாட்சாத்காரம்வருமளவுநூலைமேன்மேலும்விசாரிக்கப்பயிர்செயலின் வகையாற், குருவுசொற்பநாளிலைபரிபாகமாம்போற்றன்றீர்க்கவிசாரத்தான் ஞானம்வருமறிவாய், சாவுவனைவிசாரமதுசெய்வாமதேவர்சடபரதரிவர்க்கந்தச்சென்மத்தின்ஞான, மேவுவதில்லாதெதனாலெனிற்பிரிதிபந்தமேவினதாலெனவுணர்வாய்பிரிதிபந்தமதுதான். (௰௪)

எத்தனையாமவற்றினதுலெட்சணமேதென்னிலெழுபூதம்பௌதிகமும்வர்த்தமானமுமாம், வித்தமறுமிதிற்பூதப்பிரிதிபந்தமதுகைவிட்டவெருமையிற்பற்றுஞ்சன்பாசியிடத்திற், பித்தமறக்கண்டகதைபௌதிகமாம்பிரிதிபெந்தமதுசங்கற்பத்துடன்கூடியிருந்து. சத்தியுறவேதாந்தவிசாரமதுசெய்தசடபரதர்மூன்றுசென்மம்வாமதேவருமே. (௰௫)

ஒருசென்மமடைந்தார்கள்வர்த்தமானத்தி லுறுபிரிதிபெந்தமாவது விசையாசத்தி, மருவுபிரக்ஞாமந்தங் குதர்க்கம்விபரீதம்வருதுராக்கிரவகந்தையென்பதெனவறிவாய், பொருதுமிவைதள்ளுமுபாயந்தானேதென்னிற்பூதமதுமவனவன்றன்புத்தியனுசரித்தே, தெருளுறவோதிடத்தீரும்பௌதிகமாம்பந்தஞ்செனனமெடுத்தாசிரியன்மந்திரதேவதையை. (௰௬)

பின்னமற்றுபாசிக்கத்தீரும்வர்த்தமானப்பிரிதிபெந்தமதின்விசையாசத்தியுநாலர்க, மன்னுசாதனமதனாற்றீருவதாம்பிரக்ஞாமந்தமதுபலகாலுஞ்சிரவணத்தாற்றீரும், வின்னமுளகுதர்க்கமதுமனனத்தாற்றீரும்விபரீதபாவநிருத்தியாசனத்தாற்றீரு, முன்னுதுராக்கிரவகந்தைசமாதியினாற்றீருமுணர்குவாய்வேதாந்தவாராய்ச்சிசெய்தும். (௰௭)

பரவுபௌதிகப்பிரிதிபந்தமதாற்செனனம்பற்றுமெனின்விசாரக்ஞானமும்வியர்த்தமாமோ, வரமிலாப்பிரிதிபந்தமதனாலேசெனனம்வருமெனற்குப்பிரமாணமேதென்னில்விசார,வுரமதனால்வருஞானம்பிரிதிபெந்தந்துலைந்தவுடன்மோட்சங்கொடுக்கையினாற் சுருதிவிசாரந்தான், விரவொருகாலும்பாழாய்ப்போகாதியோகம்விட்டவனுமொருசென்மமிரண்டுசென்மமதனில்,(

கிருநார்த்தனவனெனுங்கீகைவசனமுமேகிளர்பிரமாணமதறிவாய்பிரிகிபங்
தந்தீர்க்க, நிருமலமாயுபாசிக்கச்சொன்னதுநிர்க்குணமோநிகழ்சகுணமோ
வென்னினிர்க்குணமென்றறிவா, யுருவமுளசகுணமதுபாசிக்கலாகுமுரு
வமிலாநிர்க்குணமுபாசித்தலெங்ஙன், மருவுமவைகேட்டல்போற்றியானிப்
பதிரண்டுவகைக்குமேசரியாகுமெனவுணர்வாயானால். (௰௯)

வாக்குமனதுக்கெட்டாநிர்க்குணத்தையெங்ஙன்மருவியேதியானிப்பதெனி
ன்மனம்வாக்குக்குந், தாக்குவதைக்கேட்டுச்சாட்சாத்காரஞ் செயல்போற்
சாரிநுவுங்கேட்டுபாசிக்கலாமறிவாய், நோக்கும்பாதன்னியமா யுபாசிப்ப
தெல்லாநுவலுகின்றபிரமமலப்பிரமந்தானென்றே, யாக்கமுறவறியெனவே
பொருவேதமுணாக்குதாதலாற்பிரமவுபாசனைநிஷித்தமென்னில். (௨௰)

அறிந்ததறியாதிவைக்குமன்னியமாயிருக்கு மறிவானபிரமமெனவொருவே
தந்தனிலே, பிறிந்திடாஞானத்தைநிஷேதிக்குதறிவாய் பிரமவுபாசனையிலு
மக்கித்தனையன்பேது, செறிந்ததினிற்கித்தனைதுவேசமேனறிவாய்நிரமாக
நிர்க்குணத்தையுபாசிப்பதற்கே, மறிந்திடாப்பிரமாணமேதுவிதியேதுவழு
த்தென்னிற்ரூபன்யஞ்சபிப்பியங்காடகமாம். (௨௧)

மாண்டுக்கியமென்கின்றவுபநிடதநான்குமருவுபிரமாணம்பஞ்சீகரணமென்
று, பூண்டிடுமாவாக்யமனுட்டானவிதியறிவாய்புகலுமவைஞானசாதனமல
வோவெவரு, மாண்டனுட்டித்திடவில்லையெனின்ஞானவேதுவாமென்றன
மக்குஞ்சம்மதமனுட்டிக்காதோ, னீண்டதனாற்கெடுகின்றானதனாலேபிர
மோபாசனைக்கிங்கிழுக்கேதாமெனவறிவாயானால். (௨௨)

எல்லாருமனுட்டிபாவுபாசனையைநீருமேன்சொலவந்தீரெனனிற்சிலமூடனி
தலி, னல்லதெனவசியமந்திரஞ்செபிக்கக்கடவனவிலிதனிற்பரமூடன்கிரி
யைபண்ணக்கடவன், கல்லாதவவர்பொருட்டுச்சொலவிலைமும்மூட்சுக்களு
க்காய்நிர்க்குணவுபாசனைசொன்னேமறிவா, யொல்லுமிவ்வாறுபாசித்தனி
ர்க்குணவஸ்தானாலோதுமதற்கானந்தமாதிகுணத்தோடும். (௨௩)

தூலாதிகுணங்களுமுண்டெனல்கூடாதென்னிற்சுருதியின்சம்மதமாகவில
க்கணசூத்திரத்தை, மேலாகச்சொன்னதொருவியாசனாக்கேளென்னவிள
ங்குசச்சிதானந்தமேநானென்றதுவே, காலானவுபாசனையானான்ஞானமதற்
குங்கழறுதியானந்தனக்கும்பேதமேதென்னிற், சாலானஞானமதுவஸ்துவி
ன்றந்திரமாந்தயங்குமுபாசனைகருத்ததந்திரமாமறிவாய். (௨௪)

வத்துதந்திரஞானம்வரும்வழியேதென்னில் வருகனலைக்கனலெனல்போலுள்ளதுசொல்வதுவே, யொத்தவத்துதந்திரமாஞானம்விசாரத்தாலுறுமறிவிஞ்ஞானம்வந்தாலேதுசெயுமென்னி, னத்தலுறுசகலசமுசாரத்தைப்போக்குநாடியறிஞானமறந்தாலானியென்ன, புத்தியதின்மறந்தாலுமானியிலையறிவாய்புகலந்தஞானமுளோனிருப்பதெவ்வாறென்னில். (௨௫)

ஜீவன்முத்தனைத்திருத்தியடைந்துபிராரத்வச் செயத்தைப்பார்த்திருப்பனறிகருத்ததந்திரமா, மோவலிலாவுபாசனையெத்தால்வருவதென்னிலுபசாரமாய்ப்பெண்ணையக்கினியென்பதுபோற், றுவுகர்த்ததந்திரமாமுபாசனையுங்குருவாற்றருமுபதேசத்தினால்வருமெனவே யறிவா, யேவமிலாத்தியானந்தான்வரிலென்னசெய்புமெனிலதனைத்தியானித்தபோதுநாம்பிரமம். (௨௬)

அடைவமெனும்புத்திதனைக்கொடுக்குமெனவுணர்வாயந்தவுபாசனைமறந்தாலென்செய்யுமென்னிற்,கடையானவிட்சேபமதிற்காட்டிக்கொடுக்குங் காண்டிபிவ்வுபாசனைக்ஞானமதையடைந்தோ, னிடையறுதெவ்வாறுயிருக்கவேண்டுவதாமெனிற்சுழுத்திவருமளவுமரணம்வருமளவு, முடைதலறத்தியானமதைவிடாதுசெய்துகொண்டே யுறவேண்டுமெனவுணர்வா யிந்தவுபாசனைதான். (௨௭)

முதிர்வுளதற்கேதுகுறி யெனிற்பிச்சையெடுப்போன் மொழிகனவிலும்பிச்சையெடுக்கக்காண்பதுபோற், கதிர்வேதமோதுவோன்வேதமேயோதக்காண்பதுபோலுபாசகனுநாடோறுங்கனவிற், சதிரானதியானமதேபண்ணக்கண்டானேற்றுன்செய்தவுபாசனைக்கிமுடிவெனவேயறிவா, யெதிரிலா ஞானமதுவஸ்துதந்திரமாமென்பதனில்யுத்தியுமேதென்னிலவைசொல்வாம் ( )

எழிலுளகூடத்தனையும்வேதஞ்சொல்படியே யிருக்குகிலையெனவிலக்கணவிருத்தியதனைத், தழுவியொருபிரகாரஞ்சோதிப்பதல்லாற்றுன்வேண்டும்படிசிந்திக்காததுவேயுத்தி, யிழிவிலாதறிதியானங்கர்த்ததந்திரமா மென்பதனில்யுத்தியேதெனிற்றுனிச்சித்த, வழிதியானித்திடுதறியானியாதிருத்தன்மாறுபாடாய்த்தியானித்தல்யுத்தியறிவாய். (௨௯)

அதனாலெப்பொழுதுமேதியானமதைச் சாவதானமாய்ச்செயவேண்டுமெனவறிவாய்மேலா, மிதமானதியானத்தின்மனதாகவென்றுமிருப்பவர்க்குச்செய்தொழிலெப்படிநடக்குமென்னிற், சதமாகப்பரபுருடன்றனையடையுநாரிசாருமவனிடத்திலேயாரூடமனதாய்த், திதமாகவெப்பொழுதுமிருக்கினுநாதர்க்குச்செய்தொழிகண்மேலெழுந்தவாறதாகவுமே. (௩௰)

செய்தொழிலைச்செய்தோப்பிவிப்பதுபோற்செய்வன் றெரிகுதிசாட்சாத்காரஞானிக்குத்தொழில்கள், பையாகவெவ்வாறுநடக்குமெனிற்கூத்தர்பாசாங்கமடிப்பதுபோற்சீவன்முத்தன்றானுஞ், செய்கிரிகையொன்றுமே தப்பாமற்செய்வன் றெளிதியுபாசனையுலகவிவகாரந் தனக்கு, மைய்யானவிரோதமெனலேதினாலென்னின்மனதிலேதியானமதுந்தேகமோடுபொறிகள். (௩௧)

ஆதிகளிற்செய்தொழிலுமாகவிருக்கின்ற வதனாலேவிவகாரவிரோதமெனவறிவா, யேதினால்விவகாரவிரோதமிலைஞானமென்பதற்கென்றாலான்மாமாத்திரஞ்சின்மாத்ர, ஞாதமறுமற்றதெலாமாயைமயமெனுஞானத்திற்குவிவகாரசாதனமதான, வீதியுறுதிரிகரணமதனாலேயொன்றும்வேண்டாதால்விவகாரவிரோதமிலையறிவாய். (௩௨)

கருதுசாட்சாத்காரமுடையனிலக்கணத்தைக் கழறுவாயெனிற்கடத்தைப்பார்ப்பவன்புத்தியையு, மொருவவதைத்தெண்டியாததுபோற்றத்துவமுமுள்ளபடிகவலையறக்கண்டுகளித்திருப்பன், மருவுகியானஞ்செய்வோனிலக்கணமேதென்னில்வருசகத்தைநினைந்திடினத்யானமதுகலைந்திங், கொருவுமெனும்விவேகமுடன்புத்தியையுமறித்தே யோடாதுதெண்டித்துக்கொண்டிருப்பனறிவாய். (௩௩.)

அமரொருகாலறிந்தகடமறுபடிவேண்டியபோதறிதற்குஞ்சிந்தனைசெய்வதற்குமிவ்வாறிருக்கு, மமருமதுவெனச்சொலவுமெத்தனமேயிலையேயவ்வாறுகூடுமோஞானமுளோர்க்கென்னி, லமரொளியிலாக்கடமேயொருகாலங்கண்டவதனாலிப்படித்தெறிந்தாற்சுயம்பிரகாசமதா, மமருசொரூபத்தினுக்குங்கேட்கவேண்டுவதோவறிகுவாய்நான்பிரமமெனும்விருத்திக்ஞானம். ()

கணப்பொழுகி னட்டமாய்ப்போமென்னிலதுவுங் கடக்ஞானத்திலுஞ்சரியாமெனவுணர்வாயிங்ங, னினைப்பரியதத்துவஞானிக்கொருசிந்தனையுமிலாவிடிலெப்போதுமனஞ்சகநாடுமென்னிற், புணர்ப்புறுகற்பிதவஸ்துப்பிரவிர்த்திததனாற்புகலானியேதறிவாயானாலுமுடைய, தணப்பறுசித்தாந்தமவமரியாதையென்னிற்சாரும்விதிநிடேதசாத்திரமரியாதையுமே. (௩௫)

தத்துவஞானியின்பொருட்டுச்சொன்னதலவறிவாய்சாரும்விதிநிடேதசாத்திரமாணைக்குறித்து, வத்துவாய்வந்துதெனில் வன்னவாச்சிரமம்வயதவத்தையெனுமபிமானியின்பொருட்டாமறிவாய், வித்தையுளஞானிக்கிவன்னவாச்சிரமம்வேண்டாவோவெனில்வன்னவாச்சிரமாதிகளும், பித்தான மாயாகற்பிதவுடலுக்கல்லாற்பிறங்குமான்மாவிடத்திலில்லையெனவறிவாய். (௩௬)

அஞ்ஞானவத்தையனுசரித்தவிதிமற்றோரவத்தையிற்கைவிடிற்றோடமல்லவோவென்னில், விஞ்ஞானமிலாக்கருமிகளுக்குவாலிபத்தில்விதிநிடேதந்தேவையற்றதுவேபோலச், செஞ்ஞானவத்தைக்குந்தேவையிலையறிவாய்சேயொன்றுமறியாதவஞ்ஞானியல்லோ, வுஞ்ஞானிதானுமந்தப்படிதானேவென்னிலொன்றுமறியாதவனுமெலாமறிந்தீசுரனாய். (௩௭)

இருக்குஞானிக்குவிதிநிடேதபேதந்தானில்லையென வறிபின்னை யாருக்காமென்னிற், செருக்காகச்சொற்பமறிந்தறியாமலிருக்குந்திகழுநடுநாடனுக்கென்றறிஞானியாக, விருக்கிறவன்செகதீசனானாற்சாபாதியேனியற்றவில்லையெனிற்சாபானுக்கிரக, தருக்குறுசாமார்த்தியமுந்தபோபலமேயல்லாற்றருகின்றஞானத்தின்பலமலவென்றறிவாய். (௩௮)

தவமூலமாய்ப்பிரமமதையறிவாயென்றுதைத்திரியவுபநிடதஞ்சொன்னபடியாலே, தவபலமல்லோஞானமெனின்ஞானவேதாந்தவஞ்சாபானுக்கிரககாரணமன்றறிவா, யவசமாம்பூருவாசாரிகளாயிருக்குமழகானவியாசர்முதலானபேர்க்கிரண்டு, மவரிடத்திலிருப்பதுபோலிருக்கவேண்டாவோவறிவானஞானமுளபேர்க்கெலாமென்னில். (௩௯)

மந்திரவாதமுஞானமதுமொருவரிடத்துமருவுசோதிடமுஞானமுமொருவரிடத்து,மந்தமுறவிருப்பதுபோல்வியாசாதியிடத்தி னவைகாணப்பட்டுதிந்தச்சாபானுக்கிரகம், பந்தமறு ஞானமல்லஞானமாத்திரத்தைப்பழகினவனிடஞ்சீவன்முத்தியனுபவமே, சொந்தமாயிருக்குமறிசாபானுக்கிரகஞ்சூழாதேலிவனென்னஞானியெனயாரும். (௪௰)

இகழுவாரென்னில்விதிநிடேதசாத்திரத்தை யெப்போதுங்கைவிட்ட துறவிகளையாரும், புகழ்வதலானிந்திக்கக்காணோமேயறிவாய் போகதூர்த்தர்கணிந்திக்கின்றார்களென்னிற், றிகழிந்தவணம்வன்னவாச்சிரமமுடையோர்தேகமானிகண்ஞானிதனைநிந்திக்கட்டு, முகளுமாடுகள்புலிகண்ஞானியைப்பாயட்டுமுறுமவையாலிஞ்ஞானிக்கானியேததனால். (௪௧)

இப்படிவேண்டியவண்ணமிருக்கலாமென்றவியல்பினான்ஞானிக்குராசரிக்கஞ்செய்யத், தப்பிலாதிச்சைவரிற்செய்பலாமறிவாய்சார்மாயாகற்பிதமாயிருக்கின்றசெகத்திங், கெப்பொழுதுமித்தையெனும்புத்திவந்ததன்பினிராச்சியபாரம்பண்ணவிச்சைவரின்ஞான, மப்பிரயோசனமென்னின்மித்தையாபுத்தியதனாலேயாசையற்றுப்போனாற்கன்மந்தான். (௪௨)

சகுணநிர்க்குணத்தியானமரசாட்சிமுதலாய்த்தனதுகன்மமுள்ளபடிஞானி
செய்வனறிவா, யகுணமிலாத்தியானியிங்ஙன்வேண்டும்வணமிருக்கலாகா
தோவெனின்மூர்த்தித்தியானமதுபோலச், சுகுணதியானத்தினனும்பிரம
மெனவேசொலுநிலையுந்தியானம்விடிலிலாதுபோவதனை, லுகவைபுறத்தியா
னமதைச்சாவதானமதாயுபாசித்துவரவேண்டுஞானியைப்போலிவனும். ( )

வேண்டும்வணமிருக்கலாகாதறிவாய்ஞானிமேவுஞானத்தைமறந்திருக்கும்
வேளையிலே, மாண்டபிரமத்துவமுமிலாமையலோவென்னின் மருவுபிராம
ணனுக்குநான்பிராமணனென், றீண்டுநினையாவிடினுஞ்சுபாவசித்தமாக வி
ருப்பதுபோலிலக்கணவிருத்தியினலுயினை, யாண்டுசோதித்திருக்குஞா
னிக்குநானப்பிரமமெனலயர்ந்திடினுஞ்சுபாவசித்தமாக. (௪௪)

இருக்குமலாற்றியானஞ்செய்பவன்போலமறந்தே யிரிந்தோமென்பீதியிலே
யறியிந்தப்படிக்கே, வருக்கமுறுமுபாசகர்க்குநாம்பிரமமென்னன் மறக்கி
னுஞ்சுபாவசித்தமாம்பிரமத்துவமு, முருக்கமுறவிருக்குதோ வில்லையோ
வென்னிலுபாசகன்மாத்திரமல்லப்பாமரர்கண்மிருகஞ், செருக்குளவெவ்
வுயிர்க்கும்பிர்மத்துவஞ்சுபாவசித்தந்தானெனவறிவாய்பாமரர்கண்மிருகம்

முதலானவுயிர்களுக்குநான்பிரமமென்னுமூதறிவிலாமையாற்சுபாவசித்தப்
பிரம, மதனலேலாபமேதெனிலவ்வாறறிவில் லாதவிவ்வுபாசகர்க்குஞ்சரி
யானபடியா, விதமாஞ்சுபாவசித்தப்பிரமத்துவத்தாலிலாபமற்றதிவனுக்கு
ஞ்சரியெனவேயறிவாய் திதமுறுவதாம்பிரமத்தியானமுமிவ்வாறுதிகழ்பி
ரயோசனமற்றதோவென்னிற்சொல்வாம். (௪௬)

பட்டினியேகிடப்பதினும்பிச்சையெடுத்துண்டல் பகர்தாழ்வில்லாததுபோ
ல்விருதாவாந்தொழிலிற், றிட்டமுறவிட்சேபப்படுவதினும்பிரமத் தியான
மேலெனவறிவாயெந்தச்சாதனத்தி, லிட்டமுறப்பிரமமதைத் தியானிப்பத
திகமென்னிற்பாமரர்தொழிலிற்கருமானுட்டான, நட்டமறுமதிகமதிற்சகு
ணவுபாசனைமேனவிலுமதின்விசுவரூபத்தையுபாசித்தல். (௪௭)

அதிகமதினுன்குசாதனமதிகமதினுமா னசிரவணமதிகமதின்மனன மதிக,
மிதிலதிகநிர்க்குணத்தியானமெனவறிவாயிதுகளெலாமொன்றினென்றுதா
ரதன்மியமாக, வதிதலேனெனிலரசன்றனைக்கிட்டக்கிட்டவருகின்றபௌச
திகம்பிரயாசங்கொஞ்ச, மதுபோலப்பிரமத்தையடுக்கடுக்கவதனலாதிக்கம
திகமாமெனவறிவாயானல். (௪௮)

பிரமவுபாசனைக்குமேன்ஞான முறுங்கிரமம்பேசென்னிற்சம்வாதிப்பிராந்தி முடிந்திடக்கிற், றிரமுறுமத்தினங்கொடுத்தல்போலேநிர்க்குணமாந்தியான முதிர்ந்திடத்திலேபிரமஞானமதாய், விரவுகின்றசமாதியாகின்றதேயல்லால்வேறுசாதனமில்லையாகையினலறிந்தோர், வரமுறவேயறியாதோர்யாவருக்குங்குறுக்குவழியாகமோட்சமதைக்கொடுப்பதனைமும். (௪௯)

நிர்க்குணத்தியானமதுசொலவந்தோஞ்சித்தநிரோதமதேசமாதியென்றுஞ்சாத்தியமீதென்று, மொற்கமறும்முதவிந்தாமுபநிடத்துச்சொல்குதுணர்வாயிதொன்றுமறியாதவர்க்குத்தியானந், தெற்புடனப்பியாசித்தாற்பலிக்குமெனலெங்ஙன்றியானத்தானென்பிரமமென்கின்றபுத்தி, நிற்புறுகத்திடப்படவேநிருவிகாரத்தினிலக்கணமும்புத்தியினிலெளிதாகவேறும். (௫௰)

அநுகாரியத்தினற்சமாதியெனலாகுமாகையினற்சகலசாதனங்களினுமுயர்வாந், திதமாகவுறுபிரமத்தியானமெனவறிவாய்திகழிங்ஙன்மூர்த்தியுபாசனைதானஞ்செபங்கள், சதுரானமோட்சசாதனமாமோவென்னிற் சார்பிரமத்தியானத்தையுபேட்சித்துமூர்த்தி, கதிவுபாசனைசெபந் தீர்த்தாடனங்கள்செய்யக்கருதுவதுள்ளங்கையிலிருக்கும்பாற்றிரளை. (௫௧)

எறிந்துபோட்டேட்டாதமுழங்கையைச்சுவைத்ததெனலாகுமாகையாற்பிரமவுபாசனைபோற், செறிந்தசாதனமொன்றுமில்லையெனவறிவாய்திகழ்ந்துக்கிரமஞ்சாட்சாத்காரவிசாரந், துறந்துநியாளிப்பவர்க்குஞ்சரியல்லாவென்னிற்றுலங்கநீசொன்னநுண்மைதானிந்தப்படியே, யறிந்துசாட்சாத்காரவிசாரமுடன்யோகமானசமாதிகள்செயமாட்டார்க்குவிதியறிவாய். (௫௨)

தொகுத்தபிரமத்தியானம்போல்யோகஞ்சமாதி சொல்சாட்சாத்காரத்திற்திட்டினபூமியதாய், வகுத்திடுதலேநினைவிலில்யோகத்தாலேவருவிட்சேபங்களெல்லாமொழிந்துசித்தநிரோத, மிகுத்துவருமச்சித்தமதிற்சாட்சாத்காரவிசாரமெளிதாயேறுமாகையினல்யோகம், பதத்திடின்முக்கியமறிவாயானல்யோகத்தும்பரவுசாங்கியமதினும்விரோதமேதென்னில். (௫௩)

சீவனன்மாவிவணாப்பகுத்துக்காண்பதுவுந் திகழொன்றாய்க்காண்பதுவும் விரோதமெனவறிவா, யோவில்சாட்சாத்காரவிசாரமலான்மோட்சமுயர்பிரமத்தியானமதனலும்வருமெனற்கு, மேவுபிரமாணமெது யுத்தியேதென்னில்விளங்குகுளவியைநினைத்தபுழுக்குளவியாதல், பாவும்யுத்தியாமரணகாலமதைநினைத்தான்பகரதுவாய்ப்போவனெனுங்கீதையளவறிவாய். (௫௪)

செய்கின்றதியானமதுதிடமானாலல்லோதேகமரிக்குங்கால முகவிடுமெத்திபி
லே, பொய்யானதேகமரித்தாற்கெதியேதென்னிற் புகழ்பிரமலோகம்போய்ப்
ப்பிரமாவினிடத்தி, லையானதத்துவஞானம்பெற்றுமோட்ச மடைவனென்
றுதாபன்யசுருதியுரைத்திடுது, மைதீருமிதைத்தவிரமோட்சமடைதற்கு வ
ழியில்லையெனவெசுர்வேதத்தினுஞ்சொற்றிடுது. (௫௫)

நாசிகேதுவுக்கியமன்வழியிதுவேயாகநவின்றனர்சத்தியகாமர்தனக்கிதுவே
வழியா, யாசிலாப்பிரகலாதனருரைத்தார்கிருட்டணனுன்மகீதையினுமேபூமி
யிற்குள்ளிருக்கு, மாசுடையதனமெடுக்கவெட்டுவதேயல்லான்மறுவழியில்
லாததுபோற்பிரமத்தையடையத், தேசுடையதியானமலால்வேறுவழி யில்
லைத்தெளியெனவுந்தேசமாஞ்சிலையைப்புத்தியதாம். (௫௬)

உளியினற்பொளிந்துதள்ளிநாம்பிரமமென்னுமுயர்வானதியானத்தாற்பிரம
மாகின்ற, விளிவிலாப்புதையலையுமடையலாமென்றுரிதனாலேபிரமவுபாச
னைபோலவிருக்கும், விளிவிலாச்சாதனமொன்றில்லையெனவறிவாய் விசார
சாட்சாத்காரத்தாலறியும்பொருளைத், தழுவியவ்வாறடையாமற் றியானமத
னாலேதானெவ்வாறடையலாமென்னிலவைசொல்வாம். (௫௭)

அனுபவமில்லாவிடினுமசத்தாம்வஸ்துவையு மழகானதியானத்தாலடையக்
கூடுவதாற், புனிதமுறவிசாரித்தாற்றானாகியுண்மைப்பொருளாகவிருக்கின்
றபிரமநாம்பிரம, மெனுந்தியானத்தினாலடையலாமோவென் றெவரையுமே
கேட்கவேண்டாம்பூதமான, தனியானகாசிதனையுபாசித்த பேர்க்குத் தார
கையாம்பிரமமதுசித்தித்தாற்போலும். (௫௮)

சம்வாதிப்பிராந்தியிலேபிரவிருத்திசெய்யத் தகமையுளிரத்தினமு மகப்
படுதல்போலுஞ், செம்மையிலாத்தேகாபிமானத்தைத்தவிர்ந்துதியானத்தா
லத்துவிதமானவான்மாவை, மமமரறத்தானென்றுதியானிப்போ னிங்கேம
லர்வானமோட்சமதையடைவனெனவேதங், கம்மலறச்சொலலுதிந்தத்தியா
னதீபத்தைக்கருத்தாகவனுட்டிப்போன்மோட்சமதையடைவன். (௫௯)

நான்காவது தியானதீபவிலக்கணமுரைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆகவத்தியாயம் ௪ க்குத்திருவிருத்தம்—௯௱௪௰௨

முத்துராமலிங்கசுவாமிகள்திருவடிகளேசரணம்

ஐந்தாவது

# நாடகதீபவிலக்கணமுரைத்த

## வத்தியாயம்

ஆரணப்பொருளாமருள்பரசிவமே *
காரணசிவமதுகாருண்யமுதலாந் *
தாரணவுருவாய்ச்சமிவனத்தெழுந்த *
பூரணமுத்துராமேசனைப்புகழ்வாம். (௧

வேறு.

விரிவாகவேதாந்தம்விசாரிக்கச்சத்திமேவிடாதோர்க்குவித்தி யாரண்யமூர்த்தி, பரிவானவான்மஞானம்பிறக்கும்வழியைப் பகருநாடகதீபந்தனிலடக்கிக்கூறு, மரிதானவான்மாவாரென்னின்மாயாசத்திக்காதாரமாயிருக்குமத்துவிதானந்தத், தெரிவானசைதன்யமான்மாவென்றுணர்வாய்திகழிவர்க்குச்சிருட்டியெதனால்வந்ததென்னில். (௨)

தருநிருவிகாரசைதன்னியமாமிவர்க்குத்தம்மாயாவுபாதியினால் வந்ததெனவறிவாய், வருசீவனாவதாரென்னிலுபாதியிலேமருவியதின்விம்பித்துச்சரீரங்களிடத்திற், றிருவுறவேபிரவேசஞ்செய்துவிவகரிக்குஞ் சிதாபாசன்சீவனாமிசம்சாரபெந்தத், துருவாவதேதென்னிற்சீவத்தோற்றரவாயுறுகின்றதுவிதமதேபெந்தமெனவுணர்வாய். (௩)

இப்பெந்தம்விடுகின்றமுத்தியேதென்னி லெழில்விசாரத்தினான்மாயைநட்டமான, வப்போதுவருமத்துவிதமதேமுத்தி யறிவாயம்முத்திக்கிசசாதனமேதென்னி, னைப்பில்விசாரத்தினாற்பிறந்தஞானமதே யொழிவிலாமுத்திக்குச்சாதனமென்றுணர்வாய், செப்புமிவ்விசாரமெதனால் வருவதென்னிற் சென்மமனேகம்பரனையுபாசித்தோருறுவர். (௪)

திகழ்குருவைவழிபட்டுவிசாரிப்போனெவன்சொறேகாபிமானியே விசாரகர்த்தனறிவாய், புகழ்குருமுன்னிலையாகஞானமளிப்பவரார்புகலென்னி லீசுரனேகுருவடிவாய்வந்திங், கிகழ்விலாஞானமதுகொடுப்பவராமறிவா யீசுரனுமென்செயின்ஞானங்கொடுப்பனென்னிற், றுகளிலாநிஷகாமவனுட்டானபத்தித்தொடர்பினான்ஞானமதுகொடுப்பனெனவறிவாய். (௫)

ஈசுரனுதுவதாராமென்னிற்சாத்நீகமெனுமுபா தியில்வந்துமும்மூர்த்தியா
ன, தேசுறுசைதன்னியமேயீசனெனவுணர்வாய் திகழொருசைதன்னியத்துக்
கிருவகைப்பேதங்க, ளாசுறுமெவ்வுபாதியினல்வந்ததெனின்மாயை யவித்
தையெனு முபாதியினல்வந்ததேயல்லான், மாசறுசைதன்னியத்தைத் தொ
ட்டுவரவில்லையுறுதியிவர்மாயையினற்சிருட்டிசெயுங்கிரமம். (௬)

எவ்வகையாமெனின்மூன்றுகுணவுபாதியினலீசனையுஞ்சீவனையு மனமாதி
செகத்துஞ், செவ்வையுறச்சிருட்டித்தார்பிரகிருதியுடையதிரிகுணமேமன
மறிவாய்சிருட்டிக்கேதுவதா, மெவ்வமறுபரம்பரையேதென்னினுனென்னு
மிதுவென்னும்விருத்தியதேபரம்பரையாமறிவா, யொவ்வுறுமெத்தனைவகு
ப்பிற்சிருட்டிபடங்கினதாமோதெனினுனெனும்விருத்தியிதுவென்விருத்தி
யினும். (௭)

இலங்குகர்த்தாவிடயமுமாஞ்சிருட்டிவருமறிவாயிவ்வகுப்பைத்தோற்றுவி
ப்பதாவொன்னினன்மா, நலங்களுளவித்தனையுந்தோற்றுவிப்பரறிவாய் நா
னென்னும்விருத்திகர்த்தாவொருவனைக்கற்பித்த, றுலங்கெவையாலெனில
வையுமேகாக்ரமதனற்றேன்றுகர்த்தாவொருவனைக்கற்பித்துதறியிதுவாய்க்
கலங்குவிர்த்திசத்தாதியைந்தையுங்கற்பிக்கக்காரணமேதெனிலவையுமிந்தி
யபேதத்தால். (௮)

ஐந்துவிதம்பிரிந்ததனல்விடயமைந்தானதையுமவைகற்பித்ததெனவறிகரு
த்தாவொன்றென்று, முந்துபயவிருத்தியென்றும்விருத்திகற்பிதமென் றே
துவதிற்பிரமாணமேதென்னினடிக்கு, மந்த முறுநாடகசாலையின்றீபமரசரா
டுகின்றோரேவல்செய்வோர்தாளம்மத்தளத்தோர், விந்தையுறுமிவரையெ
லாந்தாரதன்மியமறவேவிளக்கிவைத்துமிவர்களெலாமில்லாதபொழுதும். (

தானமுறும்விளக்கொன்றேவிளங்குதல்போலக்கர்த்தாமுதலோருளபொழு
துமில்லாதபொழுது, மீனமறக்கண்டிருக்குஞ் சாட்சியேதானென் றெண்
ணுகின்றவனுபவமேபிரமாணமறிவா, யானதொருநாடகசாலையின்றீபமரச
ராதியாந்திட்டாந்தமதனையுமேநன்று, யூனமுறுசரீரத்தி லீதின்னதென்றே
யொப்பாகப்பகுத்தெனக்குக்காட்டுமெனிற்சொல்வாம். (௰)

பகருமகங்காரமதேயரசன்விடயங்கள்பரிசாரகாண்மதியேகூத்தாடும்பெண்
க, ளிகழுறுமிந்தியமதுவேதாளம்மத்தளத்தோரித்தனையுந் தோற்றுவிக்கு
ஞ்சாட்சியேதீபந், திகழவறியசைவற்றசாட்சிக்குத்தீபதிட்டாந்தஞ்சொல
க்கூடாதென்னிலசையாம, லிகழ்வறவேநாட்டிவைத்தபகல்வத்திபிருந்தவி
ருப்பிலேநான்குதிக்குந்தோற்றுவித்தல்போல. (௰௧)

அகண்டபரிபூரணமாயசையாமலிருக்குமான்மாவேயுட்புறம்புந்தோற்றுவிப்பரறிவா, யகண்டவெளியுள்ளென்பதெதைக்குறித்தாமென்னிலவைசாட்சியாவில்லைத்தேகமதாலறிவா, யகண்டவெளியுள்ளிருப்போரானொருனென்னுமகங்காரியுள்ளிருப்போன்வெளியிருக்கும்விடய, மகண்டவிரண்டிடத்திலுஞ்சஞ்சரிப்பதுயாரென்னிலதனிற்சஞ்சரித்துக்கூத்தாடல்புத்தியறிவாய். (௰௨)

அசம்புறமுமசையாமலிருப்பகாரொன்னிலசைவறவேசாட்சிநின்றுதோற்றுவிப்பதறிவாய், தகும்புறமுட்சஞ்சரித்தல்புத்தியென்னிலங்ஙன்சாற்றவிலைநான்போனேனான்வந்தேனென்றே, யிகந்தனிலேயுரைக்கின்றுரிதனிற்காரணமேதென்னிற்சாளரவழியாயுள்விழுந்தவெயிலி,னகம்பயிலுங்காமசையவெயிலசையுதெனல்போனவிலுள்ளேயிருக்கின்றபுத்தியுமிந்தியத்தின். (௰௩)

வழியாகவெழியேவந்துலைந்ததனலைவை வலமாகத்தனைத்தோற்றுஞ்சாட்சியதன்பேரி, லிழிவாகக்கற்பிக்குததனலான்மாவுக்கென்றுமசைவிலையறியிப்போதின்னதத்வங், தெளிவாகவின்னவின்னவிடத்திருக்குதென்றுதெரிவித்தல்போற்சாட்சியிருக்கின்றவிடமு, மெளிதாகப்பகுத்துக்காட்டெளிற்புத்தியாதியிலாவவத்தைபேசாட்சியிருக்குமிடமறிவாய். (௰௪)

அக்காலமெனக்கொருதேகமுந்தோற்றவில்லையறிவியுநீர்சாட்சியிருக்கின்றவிடமென்னி, னெக்கானநீரிடத்தினிற்பவரந்நீரினின்றுலுநிலமதனினிற்பதுவேபோலப்,புக்காதுபுத்திமுதலொழிந்தபொழுதொன்றும்பொருந்தாதாலொருவடிவும்பற்றுகிறதல்ல, வெக்காலுஞ்சகலசெககற்பனைக்குமூலமென்பதாற்சருவபரிபூரணமொன்றறிவாய். (௰௫)

சகலசெககற்பனையுஞ்செய்வதுயாதென்னிர்சார்கனவினனவினுமுள்வெளிப்பிரவஞ்சத்தை, யகலாதுகற்பிக்கும்புத்தியெனவறிவாயதைச்சாட்சியெவ்வாறுகாண்கின்றதென்னிற், புகலறிவாயிருந்தறியுமதைச்சாட்சியறிவாய்பொருவில்லாவதனைநாமறிவதெவ்வாறென்னி, னிகழுமதையுன்னலையறிகின்றதல்லநீதானுய்மிஞ்சுகின்றவஸ்தாதுமறிவாய். (௰௬)

இந்தவறிவுதிப்பதனுக்குபாயமேதென்னிலெழிற்குருவால்வேதாந்தமோர்தலுபாயமதா, மந்தமாயறிதானாயிருக்கின்றவறிவையறியவொட்டாப்பிரிதிபந்தம்யாதெனிற்றேகாதி, பந்தநாஞ்சகமெய்யாமெனுமிரண்டும்பிரிதிபந்தமறிவாயதனையொழிப்பதெவ்வாறென்னி, லிந்தவணம்பிரிதிபந்த மதைக்கொடுக்கும்புத்தியிப்புத்திகற்பித்தபிரபஞ்சமதையும். (௰௭)

வேறு.

காணுறுமறிவாயிருப்பதேகழித்தல் *
சேணுறுநாடகதீபமாமிதனை *
யேணுறவனுசந்தானமதியற்றுவோன் *
றூணுறுசாட்சியேதானுய்விளங்குவன். (௰அ)

ஐந்தாவது

நாடகதீபவிலக்கணமுரைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆகவத்தியாயம் ரு. க்கு—திருவிருத்தம்—௲௱௯௰

முத்துராமலிங்கசுவாமிகள்பாதமேகெதி.

திருச்சிற்றம்பலம்.

---

ஆறாவது

# தத்துவவிவேகவிலக்கணமுரைத்த

## வத்தியாயம்.

பொன்முதற்பொருள்களாகிப்புகலவைக்கதீதமாகி *
மன்னுமொப்புயர்வதின்றிவருபரப்பிரமந்தானே *
வன்னிசூழ்சேத்திரத்தில்வனமாலாங்கட்டிபோலச் *
சின்மயவடிவாய்வந்ததேசிகேசுரன்றாள்போற்றி. (க)

வித்தியாரண்ணியதேசிகனுயிர்கட் கிரங்கிவிளங்குவதாம்வேதாந்தசித்தாந்தமான, தத்துவமாவிவேகத்தைவெளிபண்ணும்படியாய்ச்சங்கராசாரியவாரியன்பாதம்போற்றி, யத்தமுறுநின்மலவந்தக்கரணமுடையோர்க்கான்மாவையெளிதாகக்கண்டறியும்வழியைத், தத்துவமாவிவேகமதிலுரைத்தனரம்மொழியைச்சகலருங்கேட்டானந்தமடையும்வகைபுகல்வாம். (உ)

விதியானதத்துவமேததத்துவமேதவைபின்விவேகமேதெனிற்றத்வம்பரமான்மாவதத்துவஞ்,சிதைவாகுமாயாகாரியமிதனைப்பகுத்துத்தெரிவதுவிவேகமறிபகுத்துணர்வதெங்ஙன், கதுவுமறிவாயிருப்பதீதறியும்பொருளாய்க்காண்பதீதெனவறிதல்பகுத்துணர்வதறிவாய், சுதையானவவ்வறிவெத்தனைவிதமாமென்னிற்சொலுமறிவாயிருக்கின்றதான்மாவொன்றறிவாய். (௩)

தெரிந்திடுதலெத்தனையாமெனிற்றிரமத்திரமுந்திகழ்மூலாக்ஞானவிருளெணமூன்றுமறிவாய், புரிந்தறிவுவொன்றாகவிருக்கின்றதனையும்புகலறிதன்மூன்றாகவிருக்கின்றதனையுந், தெரிந்தறியச்சொல்லுமெனிற்சாக்கிரசொற்பனத்திற்றிரமாபத்திரமாயும்விடையங்களிருக்கும், பரிந்தசுழுத்தியிலந்தகாரமாயிருக்கும்பரவுதினமாதம்வருடங்கற்பந்தோறும். (௪)

அறியுமறிவந்தவிடயங்கள்போலொருக்காலாகியழியாததினாலான்மாவொன்றொழியப், பொறியானவிரண்டிலேயென்றறியிவையிற்சுகமாய்ப்பொருந்தவேண்டியதேதுதள்ளுவதேதென்னி, னெறியாகமூவவத்தையினுங்காணப்பட்டுநிகழ்பொருளெல்லாந்தனக்கேயன்னியமாதலினால், வெறிதாகத்தள்ளவேண்டியதறிவாயிருக்குமேலானதன்னைக்கைவிடப்படாததனால். (௫)

சுகமாகநாடவேண்டியதறிவாயிங்ஙன் சொலுமறிவாயிருக்கும்வஸ்து வெக்காலுந்தானா, யகலிலாதுறுமானாலஞ்ஞானகாலத் தறியாமலிருப்பதேனெனிற்படிப்போருடனே, யிகலாகவோதுகின்ற குழந்தைகுரற்றெரியாதிதுபோலனாதிசித்தவஞ்ஞானத்துடனே, யுகமானவறிவுழம்பித் தோற்றுகையாற்றெரியாதுணர்குவாயனாதிசித்தவஞ்ஞானமெதுசொல். (௬)

அக்கினியிற்சூடுபோலவுஞ்செலத்திற் சயித்தியமதுபோலும்பிரமத்திற்செகசீவபரத்தை, புக்கிவரச்செயுமூலப் பிரகிருதிதனையேபுகல்வர்களனாதிசித்தவஞ்ஞானமெனவே, பக்குவமில்லஞ்ஞானமெதிலுண்டாமென்னிற்பழுதைப்பாம்பெனப்பிரமந்தனிலுண்டாமறிவா, யொக்குமிதன் சொரூபமேதெனிற்சத்துமசத்துமோதுகின்றசதசத்துமொன்றுபலவதுவும். (௭)

சாவயமுநிரவயமுஞ்சாருமவையிரண்டுந்தானல்லப்பிரமாணமப்பிரமாணமதாய், மேவுறுநிரூபிக்கினிலக்கணசூனியமாமெனவேதஞ்சொல்லுதிதேயிலக்கணமென்றறிவாய், தாவுமிந்தப்பிரகிருதியெதுசெய்யுமென்னிற்சகசீவபரத்தைத்தன்முக்குணத்தாற்செய்யு,மோவுமீதெதனாலேபோமென்னிற்பிரமமொன்றேநாமெனுமத்துவிதவறிவாற்போமே. (௮)

திரிகுணத்தாற்செகசீவபரமதனைச்செய்யுந்திறமெவ்வாறெனின்மூலப்பிரகிருதிதனக்கே, யுரியசத்துவகுணமாஞ்சுத்தமாயையினிலுதித்தவனீசுரன்பஞ்சகிருத்தியமாமதனைப், புரியுமிந்தவந்தரியாமியைச்செய்யுமாயை பொருவிலாவவருக்குக்காரணதேகமதாம், பிரியுமிராசதவசுத்தவவித்தையாமதிலேபிரிதிபலித்தவன்சீவனிப்பிராஞனுக்கே, (௯)

மூலமாமவித்தையதுதாரதன்மியமாகமொழியுமனந்தமதாலேசீவர்களுமன்
ந்த,நீலமுறுந்தமோகுணமாம்பிரகிருதிதனிலேநிகழிந்தச்சீவருக்குப்போக்
கியபோகத்தைச், சீலமாயுண்டாக்கப்பரமசிவாக்கினையாற்றிரிகுணத்தோடு
றுஞ்சூக்க பூதமைந்தும்வந்த, தோலமிடுமிதனுடையசாத்தி காங்கிசத்தி
லோரொருமாத்திரைகளெடுத்தொன்றாகக்கூட்டி. (௰)

வைத்ததந்தக்கரணமதுசஞ்சலமாந்தொழிலான் மனமென்றுநிச்சயத்தாற்பு
த்தியென்றுமிரண்டா, மூய்த்தவையின்சாத்திகாங் கிசத்திற்பின்பூதத்தோ
ரொருமாத்திரையெடுத்துத்தனித்தனியேவைக்கு, மொய்த்தவையேசோத்
திராதிக்ஞானவிந்திரியமாமொழிபூதங்களினுடையராசதாங்கிசத்தி, லெய்
த்தலிலாப்பூதத்திலோரொருமாத்திரையா யிரண்டுதிரமெடுத்தொன்றாய்த்த
னியாய்வைத்திடவே. (௰௧)

அதுவியானதியும்வாக்காதியுமாமிவ்வா றும்பதினேழ்தத்துவமுமிலிங்கவு
டலென்று, மிதுசூக்கவுடலென்றும்போகேதுவென்றுமியம்பலாமித்துட
னேசேர்ந்தசீவனுக்குக்,கதுவுமுன்பேர்மாறியேதைசதனென்றாகுங்கணக்கி
லாச்சீவர்களின்சூக்கவுடலோடும், பொதுவானசூக்கபூதமுங்கூடிச்சமட்டி
புத்தியினாற்பொன்கெர்ப்பமென்றுமீசுரன்றன். (௰௨)

சூக்கவுடலெனப்படுமித்துடனேகூடுவதாய்ச்சொல்லிடுமந்தரியாமிக்கப்பெ
யருமாறி, யேக்கமறுசூத்திரான்மாவெனப்பேர்வந்ததெங்குந் தாதான்மிய
மாயிருப்பதனாலிவனை, யூக்கமுறுசமட்டியென்பதவனவன்றேகங்களொன்
றைமாத்திரமுறுவதாற்சீவர்வியட்டி, யேக்கமுறுசீவருக்குப்போகமும்போ
கத்துக்கிடமானதூலசரீரந்தனையுண்டாக்க. (௰௩)

கண்டனந்தமோகுணமாமாகாசாதிகளைக் கருதுபஞ்சீ கரணமதுசெய்தாற
தெங்ஙன,னண்டமுதலைந்தையுமேயீரைந்தாகச்செய்ததிற்பாதியைந்தையுமே
யைநான்காய்ச்செய்து, துண்டமாமதிற்றனதங்கிசத்தையுமேவிட்டுச்சொல
லுமற்றநான்குடனேயிவைநான்குங்கூட்டல், விண்டபஞ்சீகரணமதாமிவ்
வாறுசெய்துவிளங்குமிந்தத்தூலபஞ்சபூதங்களிடத்தில். (௰௪)

மருவுவதாமண்டங்கள்புவனங்களுநான்கு வகைத்தூலசரீங்கள்போகமுதல்வ
ஸ்து, முருவமுடனுண்டாச்சுதித்தூலபூதத் தோடுபௌதிக மெல்லாமொ
ருமைப்பாடாகப்,பொருவிலாவீசனது தூலவுடலென்றும்புகழுவதாம்விரா
ட்டென்றுஞ்சொலப்படுமித்துடனே, மருவுமீசுரனுக்குச்சூத்திரான்மாவா
ய்வருகின்றபெயர்மாறிவைசுவானரனும். (௰௫)

தைசதர்களெல்லாருந்தூலசரீரத்தைச்சார்ந்துவிசுவாளாகித்தேவதைகளென்றும், பையுடையமனிதரென்றுந்திரியக்குவென்றும்பயிலுவர்களவரீசன்வாக்கியமாங்கன்மஞ்,செய்கின்றபத்தியுடன்ஞானமெனுங்காண்டத்திறையவனுட்டானஞ்செய்துண்முகமாகாமன், மையுடையபகிர் முகமாயாருமிராகாதிமருவினராய்த்தான்பண்ணுங்கன்மவசத்தாலே. (௰௬)

சென்மபெந்தவழியாற்றிற்சுழிவழியேசுற்றுஞ்செந்துபோற்சுழன்றூர்கடயாலுவாயிருப்போ, னன்மையுறுமப்புழுக்கள்களையேறச்செய்யநறுமரத்தினிழலிருந்துசுகமடைந்தாப்போலத், தன்மையுறுசற்கருமபரிபாகத்தாலேசற்குருவாய்வருமீசனறிவுபதேசத்தா, லன்மையுறுமைங்கோசவிவேகமதையொருவனபூர்வமாய்ப்பண்ணிமுத்திபடைவனெனவறிவாய். (௰௭)

அஞ்சுவிதகோசமேதேனிற்றூலதேக மன்னமயகோசமாம்பிராணனும்வாக்காதி, யெஞ்சலுறுபிராணமயகோசமாங்கருமவிந்திரியத்தின் மனங்கூடின்மனமயகோசமதாம், விஞ்சுறுபுத்தியுஞான விந்தியமுங்கூடிவிஞ்ஞானமயகோசமிக்கோசமூன்றுந், தஞ்சமாஞ்சூக்கவுடலெனப்படுமேன்மூல சரீரமேயானந்தமயகோசமறிவாய். (௰௮)

இப்பஞ்சகோசங்களுடனூற்றுமாவுக் கெங்ஙனந்தாதான்மியமாமெனினீலமாதி,செப்பியவஸ்துடன்கூடியவ்வண்ணமாகத்திகழ்படிகம்போலவேயான்மாவாந்தானு, மப்பஞ்சகோசங்களதனோடுங்கூடியவைதானாய்த்தோற்றுதறூதான்மியமாமறிவாய், தப்பிடுமக்கோசங்கடானல்லவென்றுதள்ளுகின்றவிவேகமெவ்வாறென்னிலவைசொல்வாம். (௰௯)

அன்னுவயவிதிரேகமேயனேகத்தள்ளுமரிதானவிவேகமறியன்னுவயமேதுபன்னும்விதிரேகமேதாராய்ச்சியிலேபஞ்சகோசர்தள்ளியப்பாற்பட்டிருக்கு, முன்னுநின்றபிரமநாமெனவறிவதெங்ஙனுமாயெனிற்றூனாய்விளங்குந்தூலவுடறோற்று, மன்னுறுசொற்பனமதனிற்றான்றோற்றலன்னுவயமாந்தான்றோற்றுகினுந்தேகந்தோற்றாதே. (௨௰)

விதிரேகஞ்சூக்கவுடலிலாதசுழுத்தியினின்மேவுதான்றோற்றலன்னுவயந்தான்மேவிடினு, மிதமானலிங்கவுடலிலாதுவிதிரேகமித்தேகநீக்கலேமுக்கோசநீக்கல், சதமானசுழுத்திதோற்றாதசமாதியிலேதான்றோற்றலன்னுவயந்தான்றோற்றினலு, முதன்மையுறுசுழுத்திதோற்றாதுவிதிரேகமுஞ்சிப்புல்லதனிலுளமட்டைகளைத்தள்ளி (௨௧)

தள்ளியதனடியிருக்குமாணியெடுப்பதுபோற்சாற்றுமுன்சொல்யுத்தியினுற்றுறைகத்தோற்று,மெள்ளுவதா மைங்கோசந்தள்ளியப்பாற்பட்டங்கிருக்கின்றபிரமநாமெனவறுதிபுத்தி, யுள்ளவர்பேரறிவாளரறிசீவனுக்குமுயர்பரமான்மாவுக்குமேகத்வமிங்ங, னள்ளுறச்சாதிப்பதனுக்களவையெதுவென்னினவில்சாமவேதவாக்கியமளவையறிவாய். (௨௨)

அந்தமகாவாக்கியத்துக்கருத்தமேதென்னி லானசுயம்பாகியா யிருந்தவர்க்கோர்காலஞ், சந்தமுளதுரைத்தனம்வந்தவன்பல்லக்கேறிச் சார்ந்துவரக்கண்டிடத்திலவனென்னுஞ்சொல்லின், வந்திடுசட்டுவமுதலாமுபாதியிலக்கணமுமருவிவனென்சொல்லதனிற்றண்டிகையாதிகளாஞ்,சொந்தமுறுமுபாதியிலக்கணமும்விட்டிரண்டுசொல்லிடத்துஞ்சரீரமேயருத்தமாய்க்கொண்டே. (௨௩)

இவனவனேயவனிவனென்றொருவனைக்காட்டுதல்போ லிச்செகத்துக் குபாதானகாரணமாம்பிரமஞ், சவலமிலாமாயைசபளிதமானவீசன்றுமதத்தின் வந்தவவர்சரீரமிந்தமூன்று, மவமறவேகாட்டுந்தற்பதமலினத்துவமாமவித்தையாப்பதிவிம்பனவன்சரிரோபாதி, கவரினவையினதிட்டான வான்மாவிம்மூன்றுங்காட்டுவதுதொம்பதமாமிவர்களிருவரையும். (௨௪)

ஒருவனொன்மாவாக்யமிரண்டிடத்துமுள்ள வுபாதியையுமவையில்வருசைதன்யங்களையு, மருவலறவிட்டகண்டசச்சிதானந்தமானவொன்றையறிவிக்கும்பாகத்யாகமதாய், வருவதாம்விட்டுவிடாலெட்சணையென்றறிவாய்மருவுமிந்தஞானம்வரக்குருமுன்பாய்ச்செய்யும், பொருவில்காரியமெதுதாமெனிற்சவணமாதிபுகலுசதுவிதமுமேசெய்தொழிலென்றறிவாய். (௨௫)

அவையினதுலெட்சணமேதென்னிற்சகலமறைக்குமாறுலிங்கத்தாலருத்தவிசாரமதுசெய்து,துவையமறுபிரமதாற்ப[illegible]யமாய்க்காணறாயசிரவணமிந்தயுத்தியினாலென்றுஞ், செவையுறச்சிந்திப்பதுவேமனனமிந்தவிரண்டாற்றெளிந்தபொருடனின்மனமேகாக்கிரமாயிருத்த, னவையிலாநிருத்தியாசனந்தியானஞ்செய்வோனலமானதியானமிவையிழந்துதியானிக்கும். (௨௬)

வத்துமாத்திரமாக விருக்கின்றமனமே மருவுறுசமாதியறி யிச்சமாதிக்கேயொத்தபலனேதென்னிலனாதிகாலத்திலுற்றசஞ்சிதகன்மநாசமொடுதன்னைச், சுத்தமுறச்செயுந்தர்மம்வாசனுட்சயமுஞ்சொல்லுபரஞானமதும்பலன்றனக்கென்றறிவாய், நித்தமிந்தவதிதசுகசமாதியிடமிராமனிகழுபிரபஞ்சமதின்விழிப்பானேனென்னில். (௨௭)

ஓதுபிராரத்துவசேடத்தினல்விழிப்பனுணரிந்தத்தத்துவவிவேகத்தின்பொருளை, யேதமறப்பலபடவிசாரமதுசெய்தாலெழுமனதைச்சமாதியிலேலயம் பண்ணிச்சகல, கோதானசமுசாரந்தனையுமேவிட்டுக்கூறுபரப்பிரமமதேயாகலாமறிவாய், சேதமறுதத்துவவிவேகமதுசொன்னேந் திகழ்பஞ்சபூதவிவேகந்தனையுஞ்சொல்வாம். உஅ)

ஆருவது தத்துவவிவேகவிலக்கணமுரைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆகவத்தியாயம். சு. க்கு திருவிருத்தம். ௱அஅ.

முத்துராமலிங்கசுவாமிகள்திருவடிகளேகதி.

---

ஏழாவது

# பஞ்சபூதவிவேகவிலக்கணமுரைத்த வத்தியாயம்.

சீரூருந்தென்கழனிச்சிறந்தகொற்றவாளீச *
ரோரூ நந்திருநெல்லையிவர்கடயவுறப்பெற்று *
நேரூருமடியரொடுநிகழுமெனக்கருள்செய்த *
தேரூரும்வன்னிவனத்தேசிகன்பொற்பதம்பணிவாம் (க)

வேறு.

சத்துத்தானேயித்தனையாய்ச்சாருமென்னுஞ்சாமமறைச் *
சத்தவருத்தந்தனைப்பஞ்சபூதவிவேகத்தாலுரைப்பாஞ் *
சத்தென்றுரைப்பதெது பின்னித்தனையென்றுரைப்பதேதென்னிற்
சத்தென்றுரைப்பதத்துவிதந்தானுய்விளங்கும்பிரமமதே. (உ)

வேறு.

புகலுறுமித்தனையென்றுசொல்லுவதுபஞ்ச பூதமதின்குணங்களைந்து மிந்தியங்கள்பத்து, மிகலுமந்தக்காரணமொன்றுநானென்போனெருவ னித்தனையுங்கூடினதற்கித்தனையென்றறிவாய். நிகழுமைந்துபூதத்திற்குணம்விளங்கலெங்ஙனினைநினையேயொன்றிரண்டுமூன்றுநான்கைந்தாய்த், திகழுமறியிப்பூதங்களிலிந்தக்குணத்தைத் தெரிவதாய்ப்பகுத்துரையு நன்ருகவென்னின். (௩)

பிரிதிபொழுந்தொனியொன்றும்வானத்தின்குணமாம் பின்சீறுசீறெனவேய
டிக்கின்றவொலியும், பொறியுடையசீதவுட்ணபரிசமுங்காற்றுளதாம்புதபு
குவென்றொலிக்கின்றசத்தமுட்ணபரிச, மறியவரும்பிரகாசமெனு முரு
வங்கனலுக்காளகுணங்குழுகுழுவென்சத்தமுடன்சபித்தியக், குறியுடை
யபரிசமொடுசுக்குலமென்னுருவங் கூறுமதுரவிரசமு மப்புவின்றன்குண
மாம். (௪)

கடினசத்தமொடுகடினபரிசமொடுமைந்தாய்க்கழறுவர்னரூபமறுசுவைரசக
ந்கெந்தம், கொடிதாங்துர்க்கெந்தமிவைபூமிகுணமறிவாய் கூறிதற்குமான
மேதெனிற்சோத்திராதி, யொடியுமறிவிந்தியத்தாலனுபவித்தன்மானமுண
ர்திபிதற்கிவ்வண்ணம் வெளிநாட்டந்தானே, முடிகவுண்ணுட் டமுமுண்
டோவெனிற்செவியைவிரலான்மூடினுலுள்ளிரச்சல்கேட்பதுவுந்தவிர. (௫)

உண்பதினுங்குடிப்பதினுஞ்சீதவுஷ்டணபரிச முணருவதுங்கண்மூடினுள்
ளிருட்காண்பதுவு, மெண்பெறவேவாந்திசெயின்ரசத்தையறிவதுவுமேப்ப
மிடினற்கெந்தந்துர்க்கெந்தமதனே, நண்பாகவறிவதுவுமுண்ணுட்டமறிவா
ய்நாடிகற்குத்துணையானவிந்தியமேததற்குப், பண்பான தொழிலேதாமெ
ன்னின்வாக்காதிபரவுசகாவதற்குவசனுதிதொழிலறிவாய். (௬)

அந்தரிந்திரியமானமன துமதன்றொழிலுமாவதேதென்றிடிற்பத்திந்திரியங்
களுக்குந், தொந்தமுறுமிராசாவாயிந்தியத்தின்வழியே தோடகுணமோர்
குவதாயககமலநடுவிற், சந்ததமுமிருத்தன்மனம் விராகசமைமுதலாஞ்
சாத்திகப்பிரவிருத்திகாமக்குரோதாதி, சிந்தைரசோப்பிரவிருத்திசோம்ப
ன்முதலாகத் திகழுதமப்பிரவிருத்தியிவைமனதின்றொழிலாம். (௭)

இம்மூன்றுவகையானபிரவிருத்திதனக்கிங் கெழுபலனே தெனிற்சத்துவத்
திலுண்டாம்புண்ய, மம்மருறுராசதத்திற்பாவமுண்டாந்தமத்தின் மருவிர
ண்டுமன்றிவீண்காலம்போமறிவாய், தன்மையுறுமேகதசவிந்தியங்கள்யுத்
திசாத்திரங்களாலறிவதாஞ்சகலசெகத்தும், வின்மையுறுசத்துத்தானென
ல்கூடாதென்னின்விசாதிகசுசாதீகசுகதமெனும்பேதம். (௮)

மூன்றுமலாததுசத்துத்தானெனவேயறிவாய் மொழிபிவையினிலக்கணமே
திச்செகத்திம்மூன்று, மேன்றிடாதென்பதெங்ஙன்மரமதற்குவிசாதிபெறி
லானகல்வேறோர்மரஞ்சுசாதிகமா, மான்றவிலைபூக்காய்கள் சுவகதமாமிது
போன்மருவுசெகஞ்சத்திற்குவிசாதியெனக்கூடாத், தோன்றசத்திலாமையி
னூற்சத்திற்குச்செகத்துச்சுசாதீகமெனக்கூடாமறுசத்திலாதால். (௯)

புல்லுசகஞ்சத்திற்குச்சுகதமெனக்கூடாப் பொருந்துகின்றநிரவயவமாவதா லிவைக, ளெல்லாமுஞ்சத்தெனவேயறியதுகூடாதிங் கெல்லாமுமசத்துத் தானேயென்னிற்கனலி, யல்லானவந்தகாரத்தோடுகூடானவனந்தகாரமது மலதுபோற்செகத்தே, பொல்லாதவசத்தானாற்சத்துடனேகூடிப்பொருந்தா துசத்தாயுமாகாதென்றறிவாய். ௰)

சத்தைவிடவேறென்றிலாவிட்டாற்சிருட்டிதருமுனெலாஞ்சத்தாகவிருக்கு மெனவேதத், தொத்தவாக்கியமதனிற்சொல்வானேனென்னிலுறுங்காலவா சனைகளுடன்கூடியிருக்கு, முத்தமசீடனைக்குறித்துச்சொன்னதுவே யல் லாலுண்மையலவாகையினாற்சங்கையுமுத்தரமும், வித்தமறுதுவிதத்திலல் லாமலத்துவிதத்திலையென்றுணர்குதிபேதமையாற்சங்கித்தேன். (௰௧)

தங்குகின்றவுண்மையே தென்னிலசையாமற் சாற்றிடுகெம்பீரமதாய்ப்பிர பையுமல்லாமன், மங்குமந்தகாரமதுமல்லாமலவாங்கமனதீதகோசரமாம்பி ரமமதேசத்தென், றிங்குணர்வாய்புவியாதிபரமாணுவதனாலில்லையெனல்ச ம்மதித்தேன்பிரளயகாலத்தி, லங்குவானமுமில்லாதொழியுமெனல்கூடா தாகுமெனிலத்தியந்தநிர்ச்செகத்தாயிருக்கும். (௰௨)

வானமதுநின்புத்திதனிற்படல்போனமக்குமருவுநிராகாசமதாயிருக்கின்றச த்து, மீனமறப்படுவதுவாமெனவறிசத்தாகவிருக்கின்றசுத்தசைதன்னியத் தையெப்போ, தானலறவனுபவித்தீரொன்றுனிர்ச்சிந்தமாகவிருக்குங்காலம னுபவித்தோமறிவா, யூனமறுமப்பொழுதுசத்தெனும்புத்தியுமேயுறவில்லை பென்னிலதுநமக்குஞ்சம்மதமாம். (௰௩)

நிற்புத்தியாயிருக்கு மவத்தையுறுமிடத்தி னிகழ்சாட்சிமாத்திரமா யிருந் தோமென்கின்ற,வற்புறுமவ்வனுபவமேபோதுமாகையினான்மனவிவகாரங்க ளிலாவேளையினிற்சாட்சி, விற்பெறத்தான்மாத்திரமா யிருப்பதுபோன்மா யாவிருத்திக்கிமுன்னுஞ்சத்திருக்குமெனவறிவாய், தற்பமுறுமிம்மாயாவி லக்கணமேதென்னிற்சத்துமலவசத்துமலவுற்றுவிசாரித்தால். (௰௪)

இல்லையெனப்போவதுவேலெட்சணமென்றறிவா யிலங்குசத்தைவிடமாயா சத்தியிலையானா, லல்லலுறுமசத்தென்றலெட்சணமாமென்னி லசத்துமா யையின்செயலேயல்லாமற்சொரூப, மில்லையாதலினாலே கடசத்திமண்ணி லென்றுலுமோரொரிடத்திருப்பதுவேபோல, வெல்லையிலாப்பிரமமதின்மா யாசத்தியுந்தானேகதேசமதாகவிருக்குமெனவறிவாய். (௰௫)

எண்ணுபிரமத்திருக்குமாயையெது செய்யுமெனிற்சுவரினிடத்திருக்கும்வ
ன்னமதைத்தானே, நண்ணுபலசித்திரமாய்ப்பேரிடல்போற்பிரமநண்ணுவ
தாமாயையுமன்னிருவிகாரத்திற், றிண்ணமுறவிகாரத்தைக்கற்பிக்குமறிவா
ய்திகழ்மாயைகற்பிக்கும்விகாரமேதென்னி, லண்ணலுறமுந்தினவிகாரமா
காயமதற்கேலெட்சணமதுதானவகாசமறிவாய். (௰௬)

அழியாதசத்தினதுசுபாவமதெத்தனையாமந்தரசுபாவமதுமெத்தனையாமென்
னி, லொழியாதுண்டெனன்மாத்ரஞ்சத்தின்சுபாவமுண்டெனலுஞ்சத்தம
துமந்தரசுபாவ, மெழிலானசத்திலேசத்தமிலைச்சத்துமெழுநின்றசத்தமது
மந்தரசுபாவந், தழுவியறிசத்ததுவேயாகாசமானாற் சத்தினதுகுணம்வான
மெனக்கூறவேண்டும். (௰௭)

அன்றியேயாகாசகுணஞ்சத்தாமென்றிங்கரற்றுவதேன்வாதிகளென்றாற்பிர
மமதனி, லொன்றியாகாசத்தைக்கற்பித்தமாயையோதுகுணகுணிகளையுந்
தாறுமாறாக,நின்றிடவேதிருப்பிவித்ததிவ்வாறுசெய்தனிசழ்மாயாவியல்பறி
வாயிநுதெளியும்வழியே, தோன்றும்வேதாந்தவிசாரஞ்செய்தாற்சத்தினே
துமாகாசங்கற்பிதமானபடியால். (௰௮)

ஆதிசத்தைப்பிரதானமாயும்வானத்தை யப்பிரதானமதாயுமறியவருமுணர்
வாய், நீதியாஞ்சத்தைவிடப்புறம்பாகவிருக்குநிகழ்வானமசத்தெனவேயறி
வதெவ்வாறென்னின், மீதுளாவானுண்டென்னுமிடத்திலுண்டென்சொல்
லைவேறுசெய்தாற்காட்டுகின்றபொருடவிரவான, மோதிடவேறிலாமையில்
வானசத்தெனவேயறிவாயுறுவானந்தோற்றுதலாவில்லையெனலெவ்வாறும். ( )

எவையொன்றுசத்தைவிடவசத்தாகவிருந்திங்கிலங்குகின்றததுகனவின்மி
த்தையெனவறிவாய், நவையில்வானதிற்சத்தைச்சத்தமதைப்பிரித்துநாடுமி
டத்தாகாசமித்தையாவானேன், கவையுறுகற்பிதமாபாகாரியமாதலினாற்கார
ணம்போன்மித்தையெனவகுப்பற்றதறிவா, யிவையானவானமதுமெய்யான
சத்துமேகமாய்ச்சகலருக்குந்தோற்றுவதனாலே. (௨௰)

பிரித்தறியும்வழியெதெனிற்சாதிவியத்தியமும் பிறங்குகுணத்திரவியமுமு
டலுயிரும்போலு, மரித்தலறுசத்தும்வானமும்வேறென்றறிவாய்மருவியவ்
வாறறிந்தாலுஞ்சத்தும்வானமுமே, பிரித்தறியப்படவில்லை யவையெதனா
லென்னிற்பிறங்குபூருவம்புத்தியேகாக்கிரமதனைப், பொருத்தமுறுதத்தனா
லுஞ்சந்தேகத்தாலும்புகன்றிடுமேதேறவிலைச்சாவதானமதாய். (௨௧)

பிரமாணமூலமாய்விசாரித்தாலேறும் பிறங்கவறிவிசாரித்தோன்புத்தியிலெ
வ்வாறு, திரமாகவிருக்குமெனிற்சத்தானவஸ்துத் திகழகண்டமென்றும்
வான்பரிச்சின்னமதனு, லூரமாகமித்தையென்றும்புத்தியிலேநிடமாயுற்றி
ருப்பனெனவறிவாயிவ்வண்ணமறிந்தோன், றரமானவுலகருடன்பேசலெவ்
வாறென்னிற்சத்தையேவானமெனப்பேசுகின்றோன்றனையும். (௨௨)

ஆகாயஞ்சின்மாத்ரமென்றுரையார்களையுங் கண்டவுடனச்சரியப்படுவனெ
னவறிவாய்,மாகாயமித்தையென்றுஞ்சின்மாத்ரமொன்றே வழுவாதுசத்திய
மாமெனவறிந்தபின்பிங், கேகாதுசெய்தொழிலேதெனிலிந்தஞானத்தியல்
பாகமருத்தாதிபூதங்களிடத்தும், போகாதசத்துபரிபூரணமாவதனாற்பொ
ருந்தியெந்தவிடங்களினுங்காண்பிவிக்குமென்றும். (௨௩)

வானமதுபரிச்சின்னமதனாலேயெங்கு மருவவிலையென்றுமிப்பூதங்களெலா
மித்தை, யானதென்றுந்திடப்படுத்தவேண்டுமெனவறிவா யவைகள்பரிச்
சின்னமதாய்க்காண்பிவிப்பதெங்ங, னானமுறுமவைகளுடசுபாவகுணமெ
ன்னவோதுமன்னியகுணமேதெனிற்சத்தினிடத்தி, லீனமாயையுமேகதே
சகற்பிதமதாமிதினேகதேசகற்பிதமதாகும்வானம். (௨௪)

வானமெனுமிதினேகதேசகற்பிதமதாம்வாயுவவைவுண்டெனல்சத்தங்கிசம
தாகு, மானமறுசத்தைவிடினவைகாணுதொழிதன்மாயையினங்கிசஞ்சத்த
மாகாசாங்கிசமா, மீனமிலிம்மூன்றுகுணம்வாயுவின்காரணமாமியல்பான
குணம்பரிசமிதிற்சத்தைப்பகுக்கி, னானமுறவில்லாதால் வாய்வுமித்தை
யென்றேயுணர்குவாய்வளிமித்தையெனவறிந்தபின்பு. (௨௫)

செய்தொழிலேதெனின்வாயுவதிற்பத்திலொன்றுப்த் திகழுங்கற்பிதவனலு
மித்தையாமதற்குப், பையானவுருவமுடனைந்துகுணமனலிற்பத்திலொன்
றுகற்பிதமாமப்புரசத்துடனே, துய்யவதற்காறுகுணமதிற்பத்திலொன்றுய்
த்துலங்குபிருதிவியதற்குக்கெந்தமுடனேழா, மையானகுணமிதனிற்பத்
திலொன்றுப்க்கற்பிப்பதுபிரமனண்டமதிற்கற்பிதமாம்புவனம். (௨௬)

புவனத்திற்கற்பிதமாஞ்சரீரங்களிங்ஙன்பொருந்துமெனவறிந்திவைகடனிற்
சத்தைப்பிரித்தா, லெவமுறவேயிவைகளுக்குச்சொருபமிலாததனாலியா
வுமறிவாய்க்காணல்செய்தொழிலென்றறிவா, யவமுறுமித்துவிதமெலாமா
யாகற்பிதமென்றனுதரவுபண்ணினுற்றேசமலோவென்னிற், பவமுறுசாங்
கியன்பௌத்தன்கணநாதன்முதலோர் பரவுசெகமதைநித்தியமாயேநிச்சயி
த்து. (௨௭,

அத்துவிதமதையனுதரவுசெயுமவற்கே யபாயமிலேயெனின்மாயாகற்பிதமாயிருக்கு, மித்துவிதமதையனுதரவுசெயு நமக்கிங்கெங்ஙனபாயம்வருவதற்பமுமின்றுணர்வாய், மித்தையெனத்துவிதமதையனுதரவுசெய்தான்மேவுபிரயோசனமேதெனிற்றுவிதமதிலே, சித்தமாயனுதரவுசெயினத்துவிதத்திற்றெளிந்துபுத்திசிவன்முத்தனுகலாமறிவாய். (உஅ)

இப்படியேசத்தசத்தைப்பகுத்தறிந்தான்முத்தி யெப்போதுவருமென்னிற்றிடப்படவேயறிந்த, வப்பொழுதுமுத்திவருமறியுயிர்போம்பொழுதிலந்நிலேவேண்டாவோவெனினன்ருடகந்தான், றிட்பமுறக்கற்றபோதங்கனவுசுழுத்திதிகழவத்தைகளின்மறந்துஞ்சாக்கிரத்தினிடத்திற், றப்பலறத்தோன்றல்போற்பிராணன்போமவத்தைதன்னின்மறக்கினுஞானம்போகாதென்றறிவாய். (உகூ)

கற்றபோதம்பின்னையெதனுற்போமென்னிற்கழறும்வேதாந்தத்தின்மேற்பிரமாணமதா, யுற்றிடுமொன்றுண்டானலதனுற்போமல்லாலுறுசுழுத்திமூர்ச்சையிலேபோவதலவதனுன், மற்றுமத்துவிதஞானந்தனக்கொன்றினுலும்வாதையிலேயறிபஞ்சபூதவிவேகத்தை, யற்றமறவாராய்ந்துசகஞ்சின்மாத்திரமாயறிந்தத்துவிதமானநிலேபெற்ருேன்முத்தன். (௩௰)

இப்பிரமாகாரநிலேயெய்தினேன்றனேமோக ❊
மொப்புவதின்றெனப்பகவானுரைத்தனரோகீதைதனில் ❊
அப்படியேநீயுணர்வாயளவிறந்தமறைகளெலாஞ் ❊
செப்புவதுமிப்படியேசெகத்திலுளோரறிந்துயவே. (௩௧)

ஏழாவதுபஞ்சபூதவிவேகவிலக்கணமுரைத்த
வத்தியாயமுற்றிற்று.

---

ஆகவத்தியாயம். எ. க்கு திருவிருத்தம். ௨௱௰௯.

முத்துராமலிங்கசுவாமிகள்திருவடிவாழ்க.

## எட்டாவது

# பஞ்சகோசவிவேகவிலக்கணமுணர்த்த வத்தியாயம்.

திருவளருமான்முதலாந்தேவர்களாலளப்பரிய *
வொருபரிபூரணமறிஞரோதவொருதிருவுருவாய் *
மருவிவன்னிவனமதனின்வருமடியர்தனக்குநித *
மருமயதாமத்துவிதமருள்குருபொற்பதம்போற்றி. (௧)

கிருடையினால்வித்தியாரண்யமூர்த்திகடான் கிளர்பஞ்சகோசவிசாரத்தினைலெளிதா, யருமையதாம்பிரமத்தையேழைகளாமுயிர்களறியும்வணமறிவிக்கத்தயித்திரியமென்னும், பெருமையதாமுபநிடத்திற்குகையிற்குள்ளிருக்கும் பிரமத்தையறியின்முத்திவருமெனக்கூறினதற், குரிமையதாமருத்தமேதெனிற்றேகமதனுக்குள்ளிருக்கும்பிராணனவைக்குள்ளிருக்குமனது.

மனமதனுக்குள்ளிருக்கும்விஞ்ஞானமதற்குண்மருவிடுதலானந்தமாகுமிந்தவைந்து, மினமானகுகையென்றுமிதற்கனியமாகவிருப்பவரான்மாவென்றுமறிமிவையைந்தையுமே, கனமானவான்மாவாய்வாதிகள்யாவருமேகழறுவதாலதைநீக்கலெங்ஙனமாமென்னில், வனமானபிதாப்பொசித்தவன்னவீரியத்தால்வந்ததாயன்னத்தால்வத்திக்கையாலும். (௩)

அன்னமயமாந்தேகந்தானென்னக்கூடாததனுக்குள்ளிருக்கின்றபொறிகளையேவுவனாய், மன்னுநிரிசயமாகப்பெலதாரதன்மியமாயிருக்கும்பிராணமயமதுவுந்தானாகா, துன்னுதேகந்தனைநானெனும்புத்திதனையுமுறுவீடுபசுவெனதென்னபிமானமதையுந், துன்னியுறுகாமக்குரோதாதியவத்தையிலேசுழலுமனோமயனையுந்தானென்னக்கூடாது. (௪)

உன்னுகனல்சேர்ந்தவிரும்புநண்டைபோனனவினுகிராதிசிகைவளையுங்கலந்துநின்றுசுழுத்தி, தன்னிலேயணைந்துபோம்விஞ்ஞானமயனுந்தானென்னக்கூடாதுபுண்ணியபோகத்து, மன்னியமில்சுழுத்தியினுமுண்முகமதாகி யானந்தப்பிருதிவிம்பத்துடன்கூடிக்கணத்தின், மன்னுதுநட்டமதாய்ப்போகுமானந்தமயனையுநானென்றுசொலக்கூடாதென்றறிவாய். (௫)

இந்தவைந்துமான்மாவென்பதுவல்லாதொழியிலிதற்கனியமாயான்மாவேறி
லையேயென்னின், பந்தமுறுமைங்கோசங்களையதற்குச்சொன்னபரவுமிலக்
கணத்துடனேதோற்றிவித்தப்பாலே, விந்தையுறவினியொன்றுங் காணே
மென்றிருக்கும்விம்பசைதன்னிய மேயான்மாவென்றறிவா, யந்தவைந்து
கோசமதையான் மாவுங்கண்டா லவ்வான்மாதனைக்காண் போராவொன்னிற்
சொல்வாம். (௬)

சுதசித்தசைதன்யமாயிருக்குமான்மாச்சூழ்கின்றசெடங்களெலா மறிவர்தா
ஞ்செடமாங், திதமிலாதாலவனையொன்றறியாதெனவே தெளியறிவாயிருந்
துமொன்றுலறியாதபோதே, கிதமான்மாவறிவென்பதெப்படியாமென்னினி
கழ்குளத்துக்கதனுடையரசமதனையதனை, விதமாகவனுபவிக்காதிருந்தாலு
ம்வேறுயிருக்கின்றவிந்தியத்தாலனுபவிக்கப்படலால். (௭)

மதுரமதுசுபாவமெனல்போற்சகலசெகத்து மருவியறிவுறுமான்மா வதுவு
மேயறிவாய்க், கதுவுதற்குச்சந்தேகந்தேவையிலையுணர்வாய்கருதியறியப்ப
டுதெல்பிரமமோவறியா, ததுபிரமமோவென்னிலிந்தவிருவகையுமல்லவிதற்க
ப்பாலாயுறும்பிரமமறிவா, யிதுமிவ்வாறிருக்கிலதுதனையறிவதெங்ஙனெனி
லெனக்குநாக்குண்டோவிலையோவென்சொற்போல். (௮)

கனமானவறிவாகயெப்போதுமிருந்துங் கருதுகின்றவறிவெவ்வா றிருக்கு
மெனுமுனக்குக், கனமானவிழிவில்லையோவெனவேயறிவாய்கழறுமஞ்ஞா
னியதாகவிருக்கின்றேன்றனக்குக், கனமானபிரமநிச்சயம் பெறற்குவழி
யேதெனிலறிவாற்காட்டியதெல்லாஞ்செடமானாலும், கனமானநித்தியபோ
தமதானவறிவேகருதுகின்றபிரமமெனவறிந்திடவேண்டுவதாம். (௯)

இந்தவறிவாயிருக்குமான்மாவேபிரமமெனிற்சச்சிதானந்தமதிற்சித்திலாத,
பந்தமறுமுபயமுமேன் சொல்லவிலையென்னிற் பகருமிவ்வாறறிவாகவிருக்
குந்தானென்று, நந்தலுறுதுண்டெனவேயிருக்கின்றதாலுநாமொருகாலில்
லையெனப்போகாததாலுங், கந்தலறவான்மாவோர் சத்தெனவுமாயாகற்பித
மாங்காலமொடுதேசம்வஸ்துவதையும். (௰)

ஆன்மாவுங்கடந்தபொருளதனாலிம்மூன்று லடையாதுவாதையதாற்சுகமெ
னவுங்கூடுங், தீனமிலிப்படிக்கொற்ற வான்மாவெப்படியாய்த்திகழ்வுறுவா
ரெனிற்பொறிக்கிவிடயமாகாதா, லூனமுறவிப்படிக்கொற்றவொன்றுசொ
ல்லவொண்ணாதுதானாகவிருக்கின்றபடியா, லீனமிலப்படிக்கொற்றேயொன்
றுபரோட்சமதாயியம்பவுங்கூடாதிவ்வாறிருவகையினாலும். (௰௧)

சொல்லப்படாதவரோயான்மாவென்றுணர்வாய் துகளிலாதிப்படியேநிச்சயித் தாலிவனே, மல்லலுறுசீவனென்றுமீசனிவனென்றுமாவாக்கியத்தானலிரு வகைக்குமயிக்யம், புல்லுமெனின்மோட்சமெனச்சொனவேதவாக்யம்பொ ருந்துவதெவ்வாறென்னினெருபுருடன்றனக்கே, நல்லமகன்பௌத்திரனு ற்பிதாப்பாட்டனென்னுநாமமுபையமு மவ்வுபாதிவிடிலிலைபோல். (௰உ)

மாயையவித்தைகளென்னுமுபாதியினலீசன் வருசீவனெனச்சொல்வதொ ருபிரமமதையே, யாயவுபாதிகண் மித்தையெனவறிந்தவுடனேயச்சீவனீசுர னுமல்லநாந்தாமே, யேய்தலுறுபிரமமெனவயிக்யம்வருமறிவாயிவ்வாறுய டைகின்றமெஞ் ஞானமதனுக், கேயபலனேதென்னிலான்மாவேபிரமமென ப்பஞ்சகோசவிவெகத்தினலறிந்தோன். (௰௩)

தானகவிருக்கின்றபிரமமதுதனக்குச்சமுசாரமிலையென்னும்வேதவுரைப்ப டியே, யானதசீவன்முத்தனய்ப்பிரமமாகவடைந்திருப்பனிவனேயுமேமுக் காலங்களினு, மூனமுறுசமுசாரந்தொடர்ந்திடாதிதுவேயுறுபலனுமெனவ றிவாயெட்டாவதாகும், வானனவைங்கோசவிவேகமதுசொன்னேமருவுகி ன்றதுவிதவிவேகந்தனையுஞ்சொல்வாம். (௰௪)

எட்டாவதுபஞ்சகொசவிவேகவிலக்கணமுரைத்த

வத்தியாயமுற்றிற்று.

ஆகவத்தியாயம் அ-க்கு-திருவிருத்தம்-சாஙு௰௩.

முத்துராமலிங்கசுவாமிகள்திருவடிவாழ்க.

---

ஒன்பதாவது

# துவிதவிவேகவிலக்கணமுரைத்த வத்தியாயம்.

புகழ்வேதமுடிவினில்விளங்குபொருளாயும் *
பகரீசனாகியும்பகவன்மணியாயுந் *
நகுமாயையிருளகறஞானரவியாயு *
மிகல்கழனிதனில்வாழுமிறைவனடிதொழுவாம். (௧)

துகளிலாவீசுரனாற்சிருட்டிசெயப்பட்ட துவிதமென்றுஞ்சீவனாற்சிருட்டிசெயப்பட்ட, திகழ்துவிதமென்றிரண்டா மதிற்பஞ்சீகரணஞ்செய்தாலபூதபௌதிகம்வரையுண்டான, வகலுறுதத்துவங்களீசுரசிருட்டியாகுமதற்குமேனனவுமுதற்சீவன்முத்திவரையு, நிகழ்தலுளவவத்தைகளின்கற்பனையுமந்தநிலையானவவத்தையுளசாதிவன்னாச்சிரமம். (௨)

கழறும்லௌகிகமுறைமைமுதலானசகல கற்பனையுஞ்சீவனதுசிருட்டியெனப்படுமாற், சுழலுமிவைகளுமீசகற்பனையானாலுந்தோன்றுகின்றபிதாவினாலுண்டாக்கப்பட்ட, குழகமுறுபெண்ணுமேயன்னியனாய்வந்தகொழுநனுக்குப்போகக்கற்பனைக்கிடமாவதுபோற், கழறுவதாய் நல்லதுபொல்லாதென்றுபோககற்பனைக்கேயிடமாச்சுதாகையினாலிவைகள். (௩)

சீவனதுசிருட்டியறியீசுரகாரியமுஞ்சீவனுடபோகமுமீசுரசிருட்டியென்றுஞ், சீவனதுசிருட்டியென்றுஞ் சொல்வதெவ்வாறென்னிற்றிகழுமீசுரனாலேசிருட்டிசெயப்பட்ட, தாவுகின்றமண்பொன்பெண்முதலானவிவைகடனக்குவந்ததெனவொருவன்சந்தோஷிக்கின்றான், றவுமிதுநமக்குமகப்படவில்லையென்றொருவன்றபனமடைந்தான்விரத்தனுபேட்சைதனையுற்றான் ( )

இவ்வாறுபிரியாப்பிரியமுட னுபேட்சையென்றுமண்பொன்பெண் முதலானவைகளிற்காண்பிவிக்கும், கவ்வுமூன்றகங்கரமுமனத்தின்கற்பிதமாய்க்காண்கின்றசீவனதுசிருட்டியலாலீச, னெவ்வமறுசிருட்டியலமூவகங்காரமுமேயிறந்துதன்சுபாபமதிலிருந்ததுவேயீசன், பவ்வியமாஞ்சிருட்டியாமாதாதன்றங்கைபாரியெனவெகுவிதாகாரமதாய்த்தோன்றும். (௫)

ஒருபிண்டந்தானீசன்சிருட்டியதைக்குறித்தே யுண்டான வனேகாகாரங்க
ளுடனந்த, மருவவ்வாகாரத்திற்கேற்கவவன வன்றன்மனதிலேசங்கற்பஞ்செ
ய்சமுசாரமுமே, வருசீவசிருட்டியென்றேயறிபிராந்தியினன்மருவியசொ
ற்பனத்தினன்மனோராச்சியமதனாற், றிருவுறக்கற்பித்தவந்தக்கரணக்கற்பனை
கள்சீவனதுசிருட்டியாகட்டுரைனவதனில். ௬

பிரமாணமாகவேபிரமாண்யமாகப்பிறங்கவேதெரிகின்றபிரமேயமெல்லா
முரமிலாச்சீவனதுசிருட்டியெனல்கூடாதோதெனிலோகத்தெலலாப்பதார்
த்தமதைவிளக்கும், விரவுவெயிறுனுயப்பதார்த்தத்தின்பேரின்விழுந்தவை
யையவகரித்தேயந்தந்தவஸ்தைத், தரமாகவடைந்தவையைத்தோற்றுவித்
தல்போலச்சாக்கிரத்திற்பிரமாதாவிடத்தினுமுண்டான, (௭)

அடருபிரமாணபிரமேயமதையடைந்தே யவைகளினாகாரமாயவைகளுஞ்
ஞானத்தைத், தடமுறவேதள்ளியதைத்தோற்றுவிக்குமிங்ஙன்சங்கறபஞ்
செய்விருத்திப்பிரபஞ்சமெல்லாந், திடமிலாச்சீவனதுசிருட்டியேயல்லாற்
றிகழீசன்சிருட்டியெனச்சொலக்கூடாதிங்ஙன், படர்கின்றசித்தாந்தமாயுள்
ளவழிவிற்பார்கின்றபார்க்கின்றவிடயங்களெல்லாம். (௮)

மையில்பரன்சிருட்டியுடன்சீவசிருட்டியுமே மருவியுபயமுமொன்றாயிருக்
குமதிலீசன், செய்சிருட்டியானவிடயஞ்சிதாபாசன்சேர்ந்தறிவன்சீவனது
சிருட்டியாம்விடய, மெய்யானசாட்சிஞானத்தினல்விளங்குமேவுமிங்ஙன்
சீவேசசிருட்டியும்வேறாகத், துய்யதாய்த்தெரிந்தவுடன்சீவசிருட்டியுமேது
டைத்தடக்கவேண்டுமதேமனநாசமென்றும், (௯)

வாசனாட்சயமென்றுஞ்சீவன்முத்தியடைய மருவுசாதனமென்றுஞ்சொலப்
படுமென்றறிவா, யீசனார்சிருட்டியதுசீவன்முத்திவந்துமிறவாமலிருப்பது
போற்சீவசிருட்டியுமே, நாசமிலாதிருந்தனற்சாட்சியாயிருக்குநமக்காவி
யேதென்னிற்சுகதுக்கமாதி, காசுறுசம்சாரமெலாஞ்சீவனதுசிருட்டிகாரண
மாய்வந்ததலாற்பரன்சிருட்டியதனால். (௰)

சமுசாரமற்பமுமேவருவதிலையிங்ஙன்சாற்றுகின்றவர்த்தமதிற்சமுசயமுண்
டானா, லமுதமுறுமன்னுவயவிதிரேகயுத்தியதனாலேவிளக்குகிறோமஃதெ
வ்வாறென்னி,னுமையீசன்சிருட்டியுண்டோசமுசாரமுண்டென்றேதலன்
னுவயயுத்தியவன்சிருட்டியிலையோ, விமலமறுசமுசாரமில்லையெனக்கூறல்
விதிரேகயுத்தியொண்டுமொத்துவரவேண்டும். (௰௧)

ஒத்துவாராமலெங்கேதடைபட்டதென்னி லுறுசுழுத்திசமாதிமுதலானவவத்தையிலே, சுத்தமுறுபரன்சிருட்டியிருக்கையினுமியார்க்குஞ்சுகதுக்கமாதிசமுசாரமிலையதனாற், பெத்தமுறுமன்னுவயயுத்திதடைபடுதுபிரளயத்திற்பரன்படைப்பெலாம்விதிரோகித்துஞ்சித்தமாய்ச்சீவன்முத்தி யார்க்கும்வராதாலேதிகழும்விதிரோகயுத்திதடைபட்டததனால். (௰௨)

ஏற்றமுளபரன்சிருட்டிசமுசாரமூலமெனலாகாச்சீவனதுசிருட்டியேயதனுக், காற்றுகின்றமூலமெனலன்னுவயஞ்சீவனதுசிருட்டியொழிந்திடத்திற்சமுசாரமிலதாய்ச், சாற்றுவதுவிதிரோகமிவ்விரண்டுமொத்துச்சார்ந்ததேபிரமாணமஃதெங்ஙனென்னிற், போற்றுபரன்சிருட்டியெனும்வெளிப்பிரபஞ்சங்கள்பொருந்தாதசொற்பனத்திற்சீவசிருட்டியுமே. (௰௩)

அன்னுவயித்ததனாலேசுகதுக்கமாதியானசமுசாரமதினன்னுவயங்கண்டோம், பன்னுசமாதிகள்சுழுத்தியாதிகாலத்திற்பரன்சிருட்டியானபிரபஞ்சமிருக்கையினுங், கன்னியிலாச்சீவனதுசிருட்டியாமந்தக்கரணக் கற்பனையொழிவாற்சுகதுக்கமாதி, யுன்னுசமுசாரமநும்விதிரோகித்ததனா லுறுசீவசிருட்டியேசமுசாரமூலம். (௰௪)

துவையசிருட்டியுங்கூடிவிளங்குகின்றநனவிற்சொல்சீவசிருட்டிதானொழிந்தவனேமுத்தன், றவமாகவின்னமொருயுக்தியேதென்னிற் றன்கண்ணிற்காணுமற்றூரதேசத்தி, னவமாகநெடுங்காலம்பிள்ளைபோயிருக்க நமதுபிள்ளையிருக்கின்றானெனுஞ்சீவசிருட்டி, யுவமையறவிருந்துசுகங்கொடுத்து தந்தக்காலமொருவன்வந்துனதுமகனிறந்தானென்றோத. (௰௫)

அதைக்கேட்டுமகனிழந்தோமெனச்சீவசிருட்டி யழிந்தவுடன்றுக்கமதைக்கொடுத்தகவனிறந்துங், கதையானவிவ்வார்த்தைகேளாமலிருந்த காலமெலாமிவன்சிருட்டியிருந்துசுகங்கொடுத்த, திதனாலேசகலவுயிர் களுக்குமேபெந்தமீய்கின்றதுட்கரணப்பிரபஞ்சமல்லாற், சுதையானபரன்சிருட்டிகொடுப்பதலவதனாற்றுடைக்கத்தக்கதுசீவசிருட்டியெனவறிவாய். (௰௬)

மோகமுறுமுட்கரணப்பிரபஞ்சம்வருகமூலகாரணமீசன்சிருட்டியாதலினால்வேகமுறப்பரன்சிருட்டியொழிந்தபின்பேயத்துவிதமும்வரவேண்டுமெனப்பரவாதிகேட்க,வாகையுளசீவரதினுத்தியோகத்தால் வருவதுபொவதுகூடாதீசனதுசிருட்டி, யோகையுளபரன்கருத்தின்படியாகுமவ்வா றேதுபிரளயத்தவரின்சிருட்டியெலாமொழிந்தும். (௰௭)

அத்தொய்தமொருவருமேயடையவிலையாங்கேயதனானன்முதலானமோட்
சசாதனத்தாற், சத்ததுவாம்பரன்சிருட்டிநடக்கின்றபொழுதே தருசீவசிரு
ட்டியொழித்தத்துவிதம்பெறுதல், சித்தமதாலதுநமக்குச்சாதனமுமாகுந்
திகழுமதுநம்மாலேதுடைபடுவதல்லச், சுத்தபரசீவர்களின்றுவிதபிரிவுரை
த்தோஞ்சொல்லுபரன்சிருட்டிநம்மாற்றுடைபடாதறிவாய். (௰௮)

ஆனசீவத்துவிதமேபெந்தப்படுத்துமாயினவைபின்னபடி யென்றுமதுதனை
யு· முனமறவழிப்பதின்னபடியென்றுநிலையாயுரையென்னிற்சாத்திரிகாசாத்
திரிகமென்றே, யீனமுறுசீவனது துவிதமிருவிதமா யிருக்குமிதிற்சாத்திரி
கமாவதுவேதாந்த, நேமமுறவுரைத்தபடிகேட்டுமனததிலேநிச்சயித்ததத்து
வசித்தாந்தயுத்திக்கிரமம். (௰௯)

உத்தமமாமீதாதியானவந்தக்கரணத் துறுகின்றபிரபஞ்சமசாத்திரிகமதுதா
ன், பெத்தமுறுசாத்திரத்தைக்கடந்துலகமதனைப்பிரமாணமாகவெண்ணிய
க்கட்டின்படியே, புத்தியினினிச்சயித்தவுட்கரணசகமாம்பொருந்துமிதுதீ
விரமுமந்தமுமென்றிரண்டாஞ், சித்தமிதிற்காரியத்தின்வளாநடக்குங்காம
க்குரோதாதிப்பிரபஞ்சந்தீவிரமென்றுரைத்தல். (௨௰)

சாருபிரவிருத்தியற்றிங்குலகமதைக்குறித்துச்சங்கற்பஞ்செய்மனனப்பிரவ
ஞ்சமெல்லா, நேருகின்றமந்தமெனச்சொலப்படுமிவ்விரண்டு நிகழ்ஞானம்
வேண்டுமென்போன்சிரவணத்தின்முன்பே, யேருளசாதனம்பழகுங்காலம
திற்றானேயெழுமசாத் திரிகமதாம்பிரபஞ்சமிரண்டும், பேருதல்செய்திட
வேண்டுமில்லையோகேள்விபெலமுறவேசித்தமதங்கொருமியாதறிவாய்.( )

அக்கேள்விமுடியும்வரைதவிர்ந்துகிடமுற்றுலசாத்திரிகம்வரலாமோவெனி
ன்வரலாகாது, மிக்கவரிற்சீவன்முத்திகூடாதாதியிலேயிடன்ஞானம்வேண்
டுமென்றுமறிந்தபின்புவிடுதல், பொக்கமறுசீவன்முத்திக் காகவுமாஞானம்
பொருந்தினபினுட்கரணப்பிரபஞ்சமதனைச், சொக்கமுறவிடாதிருந்தாற்கா
மாதியடைந்துசுகதுக்கமதிற்பெந்தப்படுகின்றோன்றனக்கும். (௨௨)

எப்போதுநித்தியமாமுத்தனனென்று மிலங்குநிரதிசயவானந்தனானென்று
ஞ், செப்பமுறநில்லாமன்மறைபடுவதாலேசீவன்முத்திகூடாதுசீவன்முத்தி
வேண்டாந், தப்பில்பரப்பிரமமாமூவவத்தைச்சாட்சி தாமென்றுபிரித்தறிவ
தேமுத்தியென்னு, மொப்பறுநற்சாத்திரமேபோதுமெனிலிங்ஙனுறுவது
கொண்டுவகைதனையடைகிறவனானால். (௨௩)

குருமுன்பாய்வேதாந்தசிரவணமாத்திரத்தாற் குலவுசொற்கமுண்டெனுநீ
ல்போதுமுனக்கறிவாய், பொருவசுரர்பீடைகளும்புண்ணியம்போயெரிந்
து பூவிழுவோர்தமையுங்கண்டிச்சையிலையென்னீ, லருமையுறயெழபத்
தோர்சதிரியுகம்வரைக்குமானந்தபோகமுறுஞ்சுவர்க்கமதிலுனக்குக், கரு
துகின்றவொவ்வொருகால்வருமசுரபீடைகண்டதிலேவெறுப்புவந்துசொற்
கமதுதனையும். (உச)

என்றிடவேண்டாமெனுநிற்களவிறந்தகோடியியன்றசனனுதிசமுசாரம்வரு
தற்குத், தோன்றுகாரணமானவுட்கரணசகமுந்தொலைத்துமேசீவன்முத்தி
பழகிடவேவேண்டு, மான்றவிதுவரைகேட்டவேதாந்தநூல்களனைத்தினுக்
குந்தாற்பரியஞ்சாட்சியேநானென், றூன்றவேபற்றுகின்ற புத்திவாங்காம
லுறவேண்டுமென்றுமுடலாதிகளினிடத்தில். (உரு)

விரவுநானெனும்புத்திவாராமன்மறிக்க வேண்டுமென்றுமதைத்தொட்டேப
பிமானமதற்குப், பரவுமிடமாமகிலசகத்தையுமெய்யென்னப்பாராமற்பொ
ய்யெனவேதிடஞ்செய்வாயென்றும், பொருவரிதாய்க்குவிந்தபடியாலிங்கு
ன்கேட்டபொருளதனைவிட்டிதற்குவிபரீதமான, வருமையிலாவசுத்தபுத்தி
தனைப்பண்ணிக்கொண்டேயசாத்திரிகப்பிரபஞ்சம்விடமாட்டேனென்றால்

அப்பியாசித்திடுநூல் வாக்குமட்டாய்க்கிளிபோ லசுத்தபிரவிருத்தியினன்
ஞானிக்குநாய்க்கும், பொற்புறவொப்பென்றுவருமிம்மட்டுமல்லப்பொரு
ந்துமுன்னுளிதுவரைக்குஞ்சமுசாரமதிலே, சொற்பமுறுபெந்தமுறச்செ
யறனதுட்கரணதோடமென்றேயுள்ளுவதிப்போதிஞ்ஞானத்தை, யொப்பி
லாதனுட்டித்துஞ்சீவன்முத்திவேண்டா முட்கரணப்பிரவஞ்சங் கைவிடே
னென்றால். (உஎ)

இவன்கற்றஞானமென்னவிவன்செய்யக்கிரமமென்னவெனயாவர்களின்மன
தோடத்தாலுங், கவலையுறுபெந்தமதையடைகுவனுதலினற் கருதுமந்தக்
கரணக்கற்பனையைநன்றாய்த்தவிர்ந்தே, யுவமையிலாச்சாட்சியே நானென்
றுநின்றிங்குட்கரணமதைச்சாட்சியிடத்தாணிக்கொண்டு, சவமானசரீராதி
சமுசாரமறந்துசகமதிலேபட்டணத்தார்போற்பூசையடைந்தே. (உஅ)

தீனமறுமானந்தாபரணமதைத்தள்ளிச் சீவன்முத்தியாம்பிரமமாகலாமறிவா
யானவிந்தப்படிசீவசிருட்டிபெந்தப்படுத்துமாகிற்றீவிரமானபிரபஞ்சம்விடு
வோ, மீனமுறுகாரியத்துக்குதவாதமந்தமிருந்தது கொண்டானியேதென்
னின்மனோராச்சியந், தீனமுறுசகலபிரபஞ்சவிருத்திக்குந்திடவனுசந்தா
னமதாம்பீசமாதலினால். (உகூ)

செனனமரணாதிக்குமூலமெனவறிந்துதினமுமனோராச்சியத்தைமுந்திவிட வேண்டு, மனவரகமிப்படியேபிரும்பைக்கொண்டிரும்பையராவுதல்போற் சாத்திரிகப்பிரபஞ்சமதனாற், பினமானவசாத்திரிகமிரண்டையுமேதள்ளிப் பின்புபிணஞ்சுடுதடிபோற்சாத்திரிகமதையும், வனமாகவிட்டொழிந்துதா னேதானாகவதிந்துதிடப்பட்டதுவேசீவன்முத்தியாமால். (௫௰)

இவ்வாறுதத்துவசித்தாந்தமரியாதை யெல்லாமுமிந்தவிந்தவிதங்கூடாதெ ன்று, கவ்வலறத்தள்ளுகின்றசீவன்முத்தியுடையகருதுமிலக்கணமெல்லா ஞ்சாத்திரிகமதனை, யெவ்வமறத்தள்ளுகின்றவழியென்றேயுணர்வாயிவ்வா றுசாத்திரிகாசாத்திரிகமான, வவ்விரண்டையுந்தவிர்ந்துதானேதானாகவலை ச்சலறநின்றவிடஞ்சீவன்முத்தியாமால். (௫௧)

ஒன்பதாவதுதுவிதவிவேகவிலக்கணமுரைத்த

வத்தியாயமுற்றிற்று.

ஆக வத்தியாயம். ஒன்பதுக்குத்திருவிருத்தம் ௪௱௫௯.

முத்துராமலிங்கசுவாமிகள்திருவடிவாழ்க.

---

## பத்தாவது

# மகாவாக்கியவிவேகவிலக்கணமுரைத்த வத்தியாயம்.

அரும்பொடுகரும்புங்காமனுயுதமதனாலற்றை *
வரம்புறத்தள்ளிச்செல்லுமதுநதிசூழும்வன்னிச் *
சுரும்புசூழ்வனத்திலுற்றதுகளிலாவடியார்க்கெல்லாம் *
பரம்பிரமத்தைத்தானுய்ப்பகர்குருபரனேபோற்றி. (௧)

வித்தியாரண்ணியசாமிகண்மகாவாக்ய விவேகமுரைத்ததையுரைக்கின்மகா வாக்யமென்ப, தெத்தனையாமெனின்வேதநான்கினுமேமுடிந்த பொருளத னையிசைக்குமகாவாக்கியநான்கறிவா, யொத்தவதற்கருத்தமெந்தவிதமென் னின்ஞானவுருவமாயிருப்பதுவேபிரமமாமென்று, சுத்தமாமிருக்குவேத ஞ்சொல்லுநானேசொலுமந்தப்பிரமமெனவேசுர்வேதமுரைக்கும். (௨)

நீயுமதுவேயென்றுசாமமறைபுகலு நிகழுமிந்தவாத்மாவேபிரமமாமென்றே யேயப்வதர்வணவேதமுணாக்குதெனவறிவாயிருக்குவேதத்துணாக்குமருத்த மெங்கேயிருக்கு, தாயதுணாயெனின்யாதோரறிவினுற்சத்த மாதியாம்வி டையமெலாமறிகிறதோவந்தத், தேபலறுபோதமேபிரமமெனவறிவாய்திக ழிவ்வாறுளபிரமமெத்தனையாமென்னின். (௩)

திரிமூர்த்திமுதலானதேவதைகளிடத்துந்திகழ்மனுடர்மிருகமுதலானவிட யத்து, முரியசைதன்னியமொன்ருெழியவிரண்டிலேயென்றுணர்குவாயிவ் வாறுமுந்தியவாக்கியத்தாற், றெரிவானஞானநிருணய'மானுன்மற்றதிரிவித வாக்கியங்களுக்குமருத்தமேதென்னிற், பரிபூரணமாயிருக்கும்பரமான்மா த்தானேபகருமிந்தத்தேகமதிலிருந்திடும்புத்திக்கே. (௪)

சாட்சியாயிருக்கின்றசைதன்னியமிங்ஙன் முனகவிருக்கின்றபிரமமகமென் று, மாட்சியாமெசுர்வேதஞ்சொல்லுதென்றுஞ்சீவன்மருவுதேகேந்திரியா திகட்குமப்பாலாக, வாட்சியாயிருக்கின்றவஸ்துவிந்தப்பிரமமானதாற்செக மூலப்பிரமநீயென்னக், சாட்சிதருசாமவேதஞ்சொல்லுதென்றுங்கருதுமி ங்ஙன்சுயம்பிரகாசமதாகவிருக்கும். (௫)

ஆற்றுமாத்தானேபிரமமல்லாம ※<br>
லேற்றவேருென்றுமில்லையாமென்று ※<br>
மூற்றமாய்நான்காமறைபுணாயிடுது ※<br>
தேற்றமாயென்றுதெளிகுவாய்நீயே. (௬)

பத்தாவதுமகாவாக்கியவிவேகவிலக்கணமுணாத்த
வத்தியாயமுற்றிற்று.

ஆக வத்தியாயம் பத்துக்குத் திருவிருத்தம் சாஎம.

முத்துராமலிங்கசுவாமிகள் திருவடிவாழ்க.

பதினொராவது

# யோகானந்தவிலக்கணமுரைத்த

## வத்தியாயம்.

கடனிகராகியகருணையேவடிவாஞ் *
சுடரொனுமுத்துராமையன்றுணையடி *
படருறநினைபவர்பரவடிவடைதலாற் *
றுடர்வுறநாயினேன்றுதிப்பதப்பதமே. (க)

தீபமைந்தும் விவேகமைந்துஞ் சொல்லியிந்தப்பத்திற் செப்பியவாபிரமத்தைப்பகுத்தறிந்தோன்றனக்குத், தாபரனும்வித்தியாரண்ணிய மூர்த்தியுமேசகலதுக்கமொழிந்துதடையற்றவானந்தஞ், சோபமறவடைவனெனவானந்தமைந்திற்சொல்லுவதெவ்வாறென்னிற்பிரமஞானத்திற், பாபமுறுமிவ்விரண்டுபலனும்வருமென்றுபகர்கின்றவதற்குமேபிரமாணமேதாம். (உ)

எத்தனையிஞ்ஞானசுகங்கெதமிதனையடைந்தோ ரெவரெவ்வாறடைந்தார்களப்பிரமமெதனை, னித்தியவானந்தமாயிருக்குமிவையைந்துநிகழ்த்துமெனிற்பிரமவித்துப்பரத்தையேயடைவான், பெத்தமறுஞானியெல்லாச்சோகமுமேகடப்பன் பிரமரசம்பொசித்தவர்க்கேசுகமற்றோர்க்கில்லைப், பத்தியொடுசகலமுந்தானெனக்கண்டோன்றனக்கே பயநீங்குந்தொய்தமதாய்க்கண்டவர்க்கேபயமாம். (ங)

பிரமவானந்தமதையறிந்தாலோர்காலும் பிறங்குமொருநிமித்தமாயும்பயமேயில்லை, வரஞானிதனைக்கருமவக்கினிகிட்டாதுவருபிரமமறிந்தவுடன்பாசமெலாநசிக்கும்,தரமில்பரமதையறிந்தாலிருதயத்தின்முடிச்சுஞ்சகலசந்தேகங்களுமேவெந்துபோஞானிக், கொருபொழுதுஞ்செனனமரணந்தியிலைப் பிரமமுறவறிவோன்பிரமமேயாவனெனவிங்ஙன். (ச)

மூளங்குகின்றவேதபுராணங்கள்பிரமாண முன்னுபிரமானந்தம்வித்தையானந்தம், வழங்குவிடயானந்த மெனஞானசுகந்தான்மருவுமூவிதமாகுமுன்வருணனிடத்திற், களங்கமறுபிருகுவுமேகேழ்வியுற்றுப்பெற்றார்கருதுசனற்குமாரரிடநாரதரும்பெற்றார், விளங்குகின்றசகலமுமானந்தமதிற்பிறந்துமேவுமதினிருந்ததுமாத்திரமாகமிஞ்சும். (ரு)

அதனானமத்துவிதானந்தமெனும்வழியா லடைந்தார்கடிரிபுடியில்லாதபடியாலே, நிதமானபிரமமானந்தமெனவறிவாய்திரிபுடியேகதிலெங்ஙன்சுகமில்லையென்னின், மதமுறுவிஞ்ஞானமயனென்னுஞாதுருவுமனோமயமென் ஞானமதும்விடயனேயருமே, யிதமிலாத்திரிபுடியாம் விடங்கலந்ததேன் போலிதின்வருகுஞ்சுகமதுமாயிரந்துக்கத்துடனே. (௬)

கூடினதுகொண்டுசுகமில்லையெனவறிவாய்துலவுமத்துவிதத்திலெங்ஙன் றிரிபுடிகளில்லை, நாடியுணாயெனிற்பஞ்சபூதம்வருமுன்னநாடுமகண்டானந்தமதுதானுஞ்சமாதி, நேடிவருசுழுத்திமூர்ச்சைகள்போலம்மூன்றுநீங்கியேயிருக்குமறிவிங்ஙன்றெய்தத்தில், வீடிடாவானந்தமிலையதுபோலத்துவிதத்தினுமானந்தமதேயில்லையவையிருந்தால். (௭)

அனுபவிக்கவேண்டுமெதற்கானதிரிபுடியுமவடத்திலில்லையெனிற் றிரிபுடியற்றிடத்தி, னினிமையுறுமத்தொய்தமதிற்சுகங்களென்றுமிரண்டிலை யத்தொய்தமதேயானந்தமறிவாய், கனிவானவானந்தமுண்டாமென்பதற்குக் கழறுபிரமாணமுமேதெனிற்றானாய்த்தோற்றுந், தனியானவஸ்துவுக்குப் பிரமாணந்தேவைதானிலையென்றறிந்திடுவாயத்துவிதானந்தம். (௮)

தானாகத்தோற்றுமெனல்சொல்லதுமாத்திரமேதானொழியக்காண்பதற்குக் கூடாதோவென்னி, லானதசுழுத்திபோலெனவறிவாயானலத்துவிதானந்தமதுசுழுத்தியிற்றானாக, வானெனவேவிளங்குதற்குப்பிரமாணமேது வழுத்தென்னிற்சுழுத்தியிலேயிந்திரியதிட்ட, மேனியுறவிலாதிருந்து நாஞ்சுகமாயிருந்தோமெனவிளம்புன்னனுபவமேபிரமாணமறிவாய். (௯)

சுழுத்தியானந்தமலவிட்சேபதுக்கஞ்சூழாதைச்சுகமெனவே சொல்லுகிறீரென்னிற், சுழுத்தியிலேசுகமில்லாவிடின்மெத்தையாதி சொல்லுகின்றசாதனமேன்றேடுகிறாரறிவாய், சுழுத்தியிலேசுகமில்லைத் துக்கம்போதற்காய்ச் சொல்லுபாய்தலகாணிதேடுகிறாரென்னிற், சுழுத்தியுறுக்காலத்தின்வியாதிக்காரருக்குஞ்சொல்லுமெத்தைதலகாணிதனைக்கண்டவுடனே. (௰)

துக்கம்போயிடவேண்டுமெப்படிக்காணாதாற் சொல்லுமவைநித்திராக்கிச்சாதனமல்லாமற், றக்கவானந்தமதனுக்குச்சாதனமாய்ச்சார்ந்திடாதறிசுழுத்தியானந்தமதற்கு, மிக்கசாதனமேதாமெனினனவுமுதலாம்விட்சேபமதினைந்தமனதுசுழுத்தியிலே, பொக்கமிலான்மாவைநாடினவுடனானந்தம்பொருந்துமந்தவானந்தமனுபவிக்கையாலே. (௰௧)

ஒருதுக்கமதுந்தோன்றாதலினாற்சுழுத்தியோதுமானந்தமெனவேண்டுமி லாதிருந்தா, லிருமையுறச்சகலருக்குநாட்டம்வராவேதத்தெழுமைந்துதிட் டாந்தமதுஞ்சொல்லாதறிவாய், மருவுகின்றசுழுத்தியே சுகமெனற்குச்சுரு திவகுத்தவைந்துதிட்டாந்தமேதெனின்வல்லூறு, பொருவிலாக்குழந்தை யுடன்பருந்துமகாராசன்புகலுமகாப்பிராமணனென்றறிந்திடுவாயன்றே.( )

அஞ்சுமெந்தவிதத்திலே திட்டாந்தமென்னிலாங்காயிற்றிற்கட்டுண்ட வல்லூ றெத்திசையி, லெஞ்சுறாதோடினுந்தன்னிலையில்வந்தேயதுதா னிளைப்பாற ல்போற்சீவோபாதியாமனது, துஞ்சிடுபுண்ணியபாவம்பொசிக்கநனுக்கன விற்சுழன்றுசுழுத்தியில்வந்துசுகமடையவேண்டும், விஞ்சுபருந்தானதுதா ன்கூட்டில்விழும்போதுவேகமுறவிழுவதுபோற்சீவனுமொன்றாலும்.(௰௩)

தடையுறாதச்சுழுத்திச்சுகத்தைநாடுவதாற் சாற்றுகின்றசுழுத்தியானந்தமெ னவேண்டு, நடையறவேமுலையுண்டுமெஞ்சமதிற்கிடக்கு நற்குழந்தைராகத் துவேசமிலாததனாற், றடைபடாவானந்தமாவதுபோல்ராகத் துவேசமிலா ச்சுழுத்தியுமானந்தமதேயாகுந், திடமாசப்புவிமுழுதுந்தன்வசஞ்செய்தி ருக்குந்திகழரசன்பின்புநிர்ப்பதனாயிருத்தல்போல. (௰௪)

சேர்திருத்தியுளசுழுத்தியுஞ் சுகமேயாகுஞ்சீவன்முத்தனாயிருக்கு மகாப்பி ராமணனுங், காரறவேயினிக்கற்கவேண்டியதின்றென்றுகவலையற விருப்ப துபோற்கவலையிலாச்சுழுத்தி, நேருறுமானந்தமாமெனவறிவாயிங்ஙனிகழ் சீவன்முத்தனாய்ப்பெந்தமறுவோர்க்கே, யேருறுமச்சுகமல்லான்மற்றவர்க் குச்சுகமுமில்லையோவெனினன்றாய்விடுபட்டோன்றனக்கும். (௰௫)

நன்றாகப்பெந்தமுறுவோனுக்குஞ்சுகமா நடுநாடரானவர்க்குச்சுகமிலையெ ன்றறிவா, யென்றலுநற்சுழுத்தியினிலிதரவியாபார மேன்றெரியவில்லையெ னின்மனைவியணைந்தோர்க்குச், சென்றுபெறுவீட்டினதுள்வெளிக்காரியங் கடெரியாதுபோற்சுழுத்திச்சுகமடைந்தோனுக்குப், பொன்றலுறாக்கண்ட மதிற்சொற்பனமும்வெளியிற்புகலுநனவிருவகையுந்தெரியாமலெழுந்தே.(

சுகமாகத்தூங்கினேனென்றறியேனெனலாற் றுலங்கிடுமஞ்ஞானமுடனை ந்தமயனும், வகையொடுகொணப்படுத்துமனோமயன்விஞ்ஞான மயனுமஞ் ஞானத்துறும்போதானந்தமயனாந், தொகுமானவேதமிவ்வாறஞ்ஞானவிரு த்திருக்குமுமனோவிருத்திதூலமுமாமென்று, பகருமறிபிரமரசத்தேக மாயழுந்திப்பதிந்தவன்விட்சேபமதின்விழிப்பதேனென்னின். (௰௭)

போனசென்மகருமத்தால்விழிக்கின்றுன்விழித்துப்புகலுமந்தப்பட்சபாதங் கள்விடாமையின, லூனமறக்கணப்பொழுதுநிருவிஷயமாகவுறுகின்றுன் பின்புகன்மமதைமறக்கச்செய்தே, யீனமுறவிழுத்து போமாகையினற்சு ழுத்தியெழுமுன்னும்பினும்பட்சபாதமிருப்பதன, லானவானந்தமதேபிரம மெனநன்றுயறிதிசும்மாவிருத்தல்பிரமானந்தமானுல். (௰அ)

மேவுசோம்பலும்பிரமானந்தமெனவேண்டு மெனின்வேதமறிந்தவர்க்குத் தானமதுகொடுத்த, நீவுறக்கேட்டலும்வேதநான்கெனவேயறிவேன்றிகமெ னக்குந்தான்தாவென்கிறவன்போலத், தாவுறுநீபரியாசஞ்சொல்லுகிறுய் குருநூறனையன்றியார்பிரமமறிவார்களுணர்வா, யோவும்வேதாந்தமெலாம் படித்தாற்போதாதோவுனையென்னிலருத்தமறிந்தாலொழியப்போதா. (௰௯)

விற்பத்தியாலருத்தமறிந்திடிற்போதாதோவிளம்பெனிற்சாட்சாத்காரம்வரி னெழியப்போதா, வற்புதமாமகுதினிமேல்வருவதெப்போவென்னி னரு மைபுறுகிருதார்த்தனுமளவுங்குருவைப், பொற்புறவேதியானித்தால்வருமை நிவாய்குருவைப்பொருந்தவுபாசித்திடினெவ்வாறுவருமென்னிற், தற்பம றுமவர்விடயநிமித்தமிலாதெழுந்ததகவானந்தங்களையும் விடயமொழிந்தத ற்பின். (உ௰)

ஆந்தரமாம்விருத்தியினிற்பிருதிவிம்பிக்கின்றவானந்தங்களுமுனதுசுபாவா னந்தத்தின், போந்தவாசனையல்லால்வேறல்லவென்றுபொருந்தியறியெனவு பதேசஞ்செய்வரறிவாய், வாய்ந்தசுபாவானந்தம்பிரிதிவிம்பசுகமும்வாசனை யின்சுகமுமெவ்வாறுண்டாக்குமென்னிற், சூழ்ந்தநூல்யுத்தியனுபவத்தாற் றுன்பிரமசுகமென்னல்சுபாவசித்தமாகவிருந்தாலும். (உக)

அவடத்திற்பிருதிவிம்பானந்தமகாஞ்சுகமு மமருமிருதயம்விட்டுக்கண்டத் தின்வந்து, நவமானசொற்பனத்தில்விஞ்ஞானமயராய்நவிலவர்நேத்திரத்தி ல்வந்துசாக்கிரத்திற்கனலைக், கவர்கின்றவிரும்புருண்டைபோற்றேகமெல் லாங்கலந்துசுகிதுக்கியுதாசினமென்னவுறுவ, ருவளகமாங்சுகிதுக்கிகரும காரியமாமுதாசினந்தன்சுபாவமாயிருக்கிறதென்றுணர்வாய். (உஉ)

சுகதுக்கமெத்தனையாமிவ்விரண்டுமன்றிச்சும்மாவேயிருக்குங்காலெதுதோ ற்றுமென்னி, லிகமுறுவாகியபோகமென்றுமனோராச்சியமென்றுசுகதுக் கமிருவிதமாகவிருக்குந், திகழுமிதனிடைதண்டிகளினுமேயெனக்கோர்சி ந்தனையுமிலைச்சுகமாயிருக்கிறனென்றெவரு, மகலாதுசொல்லுவதாலான் மாவேசுபாபவானந்தமென்கிறதிலையமிலையறிவாய். (உரு)

தன்னதுசுபாவசுகமிதுதானோவென்னிற்றயங்குநீருளகுடத்தைத்தொட்ட வுடன்றோன்று,மின்னசீதளந்தண்ணீராகாவிட்டாலுமிதுகொண்டுகுடத்து நீருளவெனக்காண்பதுபோற், சொன்னவுதாசினகாலந்தனிற்காண்பிவிக்கு ஞ்சுகமுள்ளேயகங்காரத்தான்மறைபட்டிருக்கு, மன்னசுபாவானந்தத்து டையவாசனையென்றறிதிசுபாவானந்தமெப்பொழுதுதோற்றும். (உச)

பிரமாப்பியாசத்தா லகங்கரத்தைமறக்கப் பிரமசுகசுபாவமது வெளியாகத் தோன்றுந், திரமாகவகங்கரத்தைநன்றாகமறந்தாற்சித்தமிருப்பதனாலேநித் திரையுமல்ல, விரவானபிராரத்வமிருப்பதனாற்றேகம்வீழ்ந்திடாதிந்தவணந் தோய்தமுந்தோற்றாமல், வரமானநித்திரையுமல்லாமலுளதாய்வருபிரமான ந்தநிலைவெளியாமென்றுணர்வாய். (உரு)

இந்தநிலைவரச்செய்யும்பிரமாப்பியாச மெவ்வாறுபிரமாணமதற்கேதாமென் னின், வந்தபிரபஞ்சவிடயத்தின்வீழாமல்வரமானபுத்தியையுந்திடம்பண் ணிக்கொண்டே, யுந்துகின்றபிரபஞ்சமதைமெல்லமெல்லவொழிந்திடவே வேண்டுமியாதொருவழியாற்புத்தி, பெந்தமுறப்பேதித்துதந்தவழியெல்லா ம்பேர்த்திடவேவேண்டுஞ்சஞ்சலமானமனதை. உசு)

இவ்வான்மாவிடஞ்சலனமறநிறுத்தவேண்டு மிந்தவணநிறுத்துவனேலிந்த யோகத்தாற், கவ்வுறும்யாதொன்றதனான்மனநிற்கும்யாதோர்கருதுசுகமத ற்காதியந்தமதுமில்லை, யெவ்வமறும்படியாதோர்நிலைபெற்றானினிமே வில் லையெனப்படுங்கருமபெந்தங்களாலுந், தவ்வுறவேயசைக்கவொண்ணாதப்பிர மானந்தந்தழுவுமிவன்றனையென்பதேகிரமமிதுபோல். (உஎ)

உரைத்தகீதாவசனம்பிரமாணமறிவாயோதுமிவ்வாறனுட்டித்தன் மிகத்துக் கமென்னி, னிரைத்ததெற்பைநுனியாலேசிஞ்சிலிப்பிக்குருவிநேமிதனையி றைப்பதுபோன்மனநாசஞ்செய்தல், சிரத்தையொடுதுன்பமுறாதனைச்சிறு கச்சிறுகச்செயவேண்டும்பிரபஞ்சவிருத்திதனைமறந்தாற், கரத்தலுறுமெ ண்ணையற்றதீபம்போலந்தக்கரணமுஞ்சின்மாத்திரமாயழியுமெனவறிவாய்.

கருதுசித்தமான்மாவிலபித்ததனாலே கருமபெந்தமெவ்வாறுவிடுபடுவதெ ன்னிற், றிருவிலாக்கருமசமுசாரமாமதற்குச்சித்தமேமூலமதாலச்சித்தந்த னையே, யொருவுறச்சோதனைசெய்யிற்சகலகருமமும்போமுணர்குவாய்சித் தமதைச்சோதிப்பதெங்ஙன, னரியவிதைச்சோதித்தான் மோட்சமென்றுஞ் சோதியாதிருக்கிற்பெந்தமென்றவதின்மானமேதாம். (உகூ,

ஏதமிலந்தக்கரணம் விடயம்பற்றுதல்போ லிலங்குகின்றபிரமத்திற் பற்று
வைக்கின்றதுவே, கோதறச்சோதிப்பதந்தக்கரணம்விடயத்திற்கூடி னலசு
த்தமாம்பிரமத்தைச்சேர்ந்தாற், றீதில்சுத்தமாகையினுன்மனதுபெந்தமுத்
திசேர்குவதிற்காரணமென்றுரைக்கின்றவேதம், பேதமறுபிரமாணமாகு
மெனவுணர்வாய்பிறங்கியசமாதியிலானந்தமெவ்வாறிருக்கும். (௯௰)

சமாதியிலாவேளையிலெப்படியிருப்பனிங்ஙன் சாரும்யோகத்தின்மனமுண்
டவர்க்குக்குறிதா, னமைவதேதிந்தியங்கள்பிலமுறவேசகத்தினவாவுற்றுற்
செய்கின்றகாரியமேதிவருக், கிமையானவிடயவானந்தமெங்ஙன்றேற்றுமி
ந்தவைந்துங்கூறுவாயெனிற்சமாதியிலே, கமையானநிருமலமாமுட்கரண
ந்தனக்கோர்கருதுசுகிசனை மட்டுந்தெரியுமேயன்றி. (௯௧)

சொல்லொணுவாக்கதனற்சமாதியினிச்சயம்போற்றேன்றுமற்றவேளையுமம்
பிக்கையுடனிருப்ப, னல்லதாம்பரபுருடன் றனையடையுமகள்போலனுசந்
தானந்தனிலேகரிசனமல்லாமற், புல்லுபிரபஞ்சமதிற்கரிசனமற்றிருப்பன்
பொருந்துசுமையெடுக்கிறவன்சற்றுச்சற்றதனைச்,செல்லலறவைத்திளைப்பா
றுதல்போலச்சிறுகச்சிறுகமறித்திந்திரியங்களைச்சமாதியிலே. (௯௨)

இளைப்பாறச்செய்வனனுசந்தானந்தனக்கிங் கிடையூறுய்வரும்விடயானந்த
மதுநெருப்பிற், பிழைத்தலறத்தள்ளுகிருப்போற்றேற்றுமறிவாய்பிரமாப்பி
யாசமதும்பிரபஞ்சத்தொழிலுங், தழைத்தலுறுமொருமனதாற்செயக்கூடா
தென்னிற்றரமறுஞானியின்மனது காக்கைக்கண்போலக், களைப்பறவேயி
ருவகையுஞ்செய்யுமெனவறிவாய்கழறுசமாதியினில்வருபிரமரசந்தனையும்.

அதன்பிரிதிபந்தமதாம்விடயரசந்தனையுமனுபவிக்குஞானியெவ்வாறிருப்ப
னெனிலுரைக்கி, னிதமுறவேயிருவிதபாஷையுமறிந்தோன்போல விருவ
கையானந்தமதுங்கண்டுபொசித்தவனுந், திதமுறவேகளித்திருப்ப னென
வறிவாயிங்ஙன்றிகழ்பிரமானந்தமதினெப்போதும்யோகி, மதமறவெபிரத்தி
யட்சமாகவிருக்கின்றவருயோகானந்தமதுசொலப்பட்டுதெறிவாய். (௯௪)

பதினேராவது யோகானந்தவிலக்கணமுரைத்த

வத்தியாயமுற்றிற்று.

ஆகவத்தியாயம்-பதினென்றுக்குத்-திருவிருத்தம்-௯௰௪.

முத்துராமலிங்கசுவாமிகள் திருவடிவாழ்க.

---

## பனிரெண்டாவது

# ஆத்மானந்தவிலக்கணமுரைத்த வத்தியாயம்.

அமிழ்தமெனமதுவருந்துவோனுங்குற்ற மகுற்றமிதுவெனவறியாதுழறல் போல, விமிழ்கருணைமுத்ராமவடிகளென்றே யேழைகளைக்காக்கவன்னிவனத்தெழுந்து, தமிழருள்செய்தேவேநின்னருளாந்தேனைத் தானருந்துமியான்பிதற்றுங்கவியிற்சொற்க, ளமிழ்தலிலாவிலக்கணத்தோடிலக்கியங்கட்கொத்துவராதிருக்கினுமேபொறுப்பாய்போற்றி. (௧)

விளங்கும்யாதொருவருட மூச்சுக்காற்றதுவே வேதமாய்விளங்குமோயாதொருவர்நன்று, யளக்கரியவேதத்தா லுலகமெலாம்படைத்தாரவ்வீசனும் வித்தியாரண்யராகத், துளங்குசாமியைத்தொழுதே யான்மானந்தத்திற் சொல்லுமருத்தந்தனையுஞ்சொல்லுகுறோமதுதான், றளம்பலிலாயோகியானவன்யோகத்தாலேதனதுசுபாவானந்தந்தன்னையறியட்டும். (௨)

இனிமூடனுயிருக்கின்றோனுக்குக்கெதியே தெனிற்றன்மாதன்மவசத்தாலிலக்கஞ்சனன, மனையனெடுக்கட்டுமெறியிவ்வாறுதள்ளலாமோவெல்லாரிடத்துந்தயவுசெயுமென்னிற், றனிநாமையோவென்றுற்பலனேதாமந்தச்சடனும்வெதுமுகனோவந்தரமுகனோவென்றிங், குனியறிந்துகொண்டுமேயவனவனுக்கேற்றவுபதேசம்பண்ணுகுறோமெனவுணர்வாயானால். (௩)

இருவகையிலெவனுக்கிங்கெத்தையுபதேச மியற்றுகிறதென்னின்வெகுமுகனாகவிருக்கு, மொருமூடன்றனக்குமேகருமவுபாசனையையுபதேசஞ்செய்திடவந்தாமுகனைப்பொருந்தி, வருமூடனுக்கான்மானந்தமார்க்கத்தில் வரஞானந்தனையுபதேசிக்கலாமறிவா, யருவின்மூடனுக்கான்மானந்தவுபதேசமார்கெதஞ்செய்தாரந்தவுபதேசமேதாம். (௪)

நாவலர்கள்போற்றுகின்றவியாக்ஞவர்க்கர்தமது நாயகியாமயித்திரிக்கவ்வுபதேசஞ்செய்தார். வீவதிலானந்தமாயிருக்கின்றவஸ்துவேறிலான்மாவென்றுகாட்டலனுக்கிரக. மாவதறிவாயிவ்வாறுபின்விடயங்களனைத்துமான்மாவல்லோவென்னிற்பெண்சாதி, தாவுபுருடன்பிள்ளைபசுப்பிராம்மணனென்சாதியுலகங்கடேவதைகள்வேதங்கள். (௫)

பூதங்கள்சகலமுமேயான்மாவைக் குறித்துப் புகல்பிரியமன்றியிதானந்தமல
வென்று, வேதஞ்சொற்றிடுதறிவாயானந்தமாகவிளங்குமிவையாவுமானந்த
மலவென்றே, யோகிடலெவ்வாறென்னின்மனைவிக்குவிருப்பமொப்பிலாப்
புருடனிடம்வரும்பொழுதுநோய்க, ளாதரஞ்செய்பசியினாலவனிவளையிச்
சியாததனாற்பத்தாவைகுறித்துவந்தசுகமும். (௬)

அவளதுசுபாவமேயல்லாமலவளை யானந்தமெனக்கூடா தவனுக்குமவடா,
னவமாகத்தோற்றுங் கால்வியாதிபசியாலேநத்தாதபடியினாலவளிவளையிந்த
வவமிலாச்சுகமிவன்சுபாவமேயல்லா லவள்பிரியவஸ்துவலமுள்ளுப்போன்
மீசை, குவவாகத்தைத்தழுகுங்குழந்தைதனைமுத்தங் கொள்ளுகிறசுகம்பி
தாவுடையசுகமல்லால். (௭)

ஆனந்தமலவாகுமக்குழவிதானுமன்றியுமேசந்தோடமுறவறியாரொத்த, மா
னமுறுகனகாதிகளைச்சாவதானமாகவைத்தேரட்சித்துமகிழுகிறசுகமு, மூ
னமறுதன்சுகமேயல்லதைஸ்வரிய மோதுசுகமல்லவெருதிச்சியாதிருந்துந்,
தீனமுறவதிற்பொதியையெடுத்துஞ்சந்தோடஞ் செட்டிக்கேயல்லாமற்கா
ளையிடமல்ல. (௮)

நாம்பிராமணனென்றுசபைதனிலேபூசை நாளுமடைகின்றசுகந்தன்சுகமல்
லாம, லாமசேதனசாதிக்கலச்சொற்கமாதியாமுலகம்வேண்டுமெனும்வாஞ்
சையுந்தன்னுடைய, வேமமலாலவ்வுலகந்தனக்காகவல்லவீசன்முதலாந்தெ
ய்வமதைப்பாவம்போகத், தாமமுறப்பூசித்தருன்பிழைக்கும்பொருட்டே
தானன்றித்தேவதைகடனக்காகவலவே. (௯)

வேதமதையோதறனக்காகவேயன்றி வேதத்தின்பொருட்டல்லவிடந்தாகம்
பாக, மேதமறவுலத்தலவகாசமதற்காகவெழுபஞ்சபூதமதைநத்துகிறசுகமு
மாதமுறுதனக்காகவல்லதுபூதங்கட்காக வலவிவ்வாறுண்டவனடியானென
வே, யோதன்முதலானதுகடனக்காகவன்றியொருவருக்காகவுமல்லவானப
டியாலே. (௰)

சகலவிடயங்களையுங்குறித்துமேபிரியந் தானலதுவிடயங்கள்பிரியவஸ்துவ
ல்லப், புகலுமதாலான்மாவேயானந்தமென்றுபுகலுவதிற்சந்தேகமில்லையெ
னவுணர்வா, யிகலிலிவ்வாறுறுசுகமெத்தனைவிதமாமென்னி லேமமுதலாம்
விடயமதிலாசையென்று, மகல்கருமோபாசனையிற் சிரத்தையென்றுங்கி
டையாதானவஸ்திலிச்சையென்றுங்குருதெய்வமிடத்திற். (௰௧)

பத்தியெனநான்குவிதமா குமெனவறிவாய்பகருமிந்தவிடயமதின்வருபிரிய
ம்போல. நித்தமுமேயான்மாவினிடத்துமொருபிரிய நிகழ்வதுகொண்டவ்
விடையம்பிரியமல்லவென்று, வித்தமுறப்புகலுவதேனென்னிலொருவிடயம்
விட்டுமேலொருவிடயநாடுகிறுப்போல, வத்துவிதவான்மாகைவிடப்படா
ததனாலவர்சுகமாமற்றதானந்தமலவறிவாய். (௰௨)

ஆசையொடுதுவேசத்துக்கிடமிலாதவரோ யான்மாவென்றுலோட்டாங்கிளி
ஞ்சிதனைப்போல, மாசுடையவுபேட்சைக்கோபிடமானதொன்னின் மருவிடு
முபேட்சைசெய்வோன்சொருபமாதலினாற், றேசறுமுபேட்சைக்கிவிடயம
லவான்மாத்தெரிந்திடுநோய்கோபங்களான்மூடுபட்டோன், காசுறவான்மத்
தியாகம்பண்ணநினைப்பதனாற்கருதுமவர்துவேசமதின்விடயமாமென்னின்.

தகித்திடயோக்கியமானதேகத்தைத்தகிக்கச்சங்கற்பித்திடலன்றித்தநிப்பவ
னுயிருக்கும், பகுத்தலிலாத்தனைத்தகிக்கக்கூடாதென்றுணர்வாய் பகருமி
வ்வாறிருவகைக்கும்விடயமாகாது, மகத்துளவான்மாப்பிரிய மதற்குவிடய
மதாய்மருவுமெனிற்பிதாவுக்குப்புத்திரனேசகல, தொகுத்தபெந்துகளினு
மேபிரியவஸ்துவதுபோற்சொலுமுயிரால்விடயமெலாம்பிரியமாமதனால்.( )

தீனமறுமதிப்பிரியவஸ்துவுயிரல்லாற் செறிகின்றவிடயமலவெனவுணர்வா
யிவ்வா, றூனமிலாதகிப்பிரியவஸ்துவுயிரானுலொளிருமான்மாத்தானேமக
வானதென்னு, மீனமறுவேதமதிலிவன்செய்ததவத்தா லியல்பாகவான்மா
வேமகவானதென்று, மானமுறுகுழந்தையிலாதவனுமேகெதியையமருவிடா
னென்றுமேவேதமுரைப்பதனால். (௰௫)

உரைத்திடுவோமா ன்மாவாய்மகவையெனிற்கெவுணமோதுமித்தைமுக்கிய
மென்றுமான்மாமூன்றுண்டு, நிரைத்தவொருவகையிலே யான்மாமுக்கியமாய்
நிகழுமிதிற்புத்திரனையான்மாவென்பதுவும்,புரைத்தமூவகையிலொருவகை
யலான்முதலாய்ப்பொருந்தாதென்றறியிந்தமூவகையான்மாவாய்ங், கரைத்
ததேதிதிலெந்தவான்மாமுக்கியமாங்கழறுமிதுதனைவகையாயெனினவையு
முரைப்பாம். (௰௬)

ஒருபுருடன்றனைச்சிங்கமென்கிறதுபோலவொருகுழந்தைதனையான்மாவெ
ன்கிறதுகெவுண, மருவிலாக்கட்டைதனைக்கள்ளனெனல்போலவைங்கோச
ந்தனையான்மாவென்கிறதுமித்தை, தருவானகட்டைதனைக்கட்டையெனல்
போலச்சாட்சிதானென்கிறதுமுக்கியந்தானிறந்துங், குருவானகுழந்தைபி
ழைத்தாற்போதுமென்றுகூறலாற்குடும்பத்தையொட்சிக்கின்றதனால். (௰௭)

பகநகெளணன்மாவாம்புத்திரன் முக்கியநான் பருத்திளைத்தேனெனுமிடத்
திற்றேகமுக்கியமதாய், விகலமறக்காண்பதுபோற்சுவர்க்கவுலகத்தை வே
ண்டுமென்றுதேகமொறுக்குந்தபசுசெய்யின், புகலுமித்தையான்மாவாமக
ங்கரமுக்கியமாம்புகனிரு விகாரிசுயம்பிரகாசனனென், றகலாதுசொலுமி
டத்தின்முக்கியவான்மாவாயமருகின்றசாட்சியே முக்கியமாகையினல். ( )

அங்ஙனமைங்கோசமதுவிடினும்விடக்கூடா வான்மாவானந்தமெனவறிவி
னைப்பிரித்தே, யங்ஙனுறவறிவதெங்ஙன்றள்ளுபஞ்சகோசமாதி யெலாமொ
வ்வொருகாலானந்தமாக, வங்ஙனந்தோற்றுவதெதனு லெனினன்றுடகமூ
ன்றவத்தைகளின்போக்குவரத்தறிகின்றசுயமா, யங்ஙனுறுபிரகாசசைதன்
யந்தானென்றறிந்திடவேவேண்டுமிக்கபுத்ராதியெல்லாம். (௰௯)

ஆவலுடனன்மாவையடுத்ததற்குத்தகுந்தவானந்ததாரதன்மியங்காணுமறி
வாய், தாவுறுமான்மாவையுமேகிட்டினமட்டுக்குந்தருசுகத்தின்றூரதன்மிய
மெவ்வாறுமென்னிற், கோனவயுறுமூலகமதிலைஸ்வரியஞ்சுகத்தைக்கொடு
க்கின்றசாதனத்தாற்றைகவிடாச்சுகமாய், மேவலுறுமெனவுரைப்பர்புத்திரா
திக்கிவியாதிவரிலைஸ்வரியமதைக்கொடுத்தாகினுமே. (௨௰)

தனையனையொட்சிக்கையினலைஸ்வரியமதினுந் தனையனேயானந்தங்கனல்பிடி
த்தவீட்டிற்,றனையனைக்கைவிடுத்துமேதானேடலாலேதனையனைக்காட்டினுந்
தேகமானந்தமாகுந், தனையிலாக்கொசுகுதூளிக்காற்றுவீசின்சரீரமதையு
பேட்சித்துத்தனதிந்தியங்க, டனையுமேபதனஞ்செய்வதனலேதேகந்தனைக்
காட்டிலிந்திரியமானந்தமெனவாம். (௨௧)

வெட்டிடவேகொண்டுபோம்பொழுதுபொறிகளையும் விட்டுமேபிராணதிக
ளையொட்சிப்பதனு, லிட்டமுறுமிந்தியத்தைக்காட்டினுமேபிராணதிகளான்
மாவாமந்தப்பிராணன்போமிடத்தி, னட்டமுறுபிராணனிருக்காதெனவேவி
ட்டுநவிலுபிராணதிவரிற்கூடவும்வாராமற், றிட்டமுறவவைநசிக்கிற்கூடநசி
யாமற்றிகழுசங்கசைதன்யமானதான்றனே. (௨௨)

ஒருக்காலுங்கைவிடாவானந்தரூப முணர்குவாய்தகப்பனுக்குப்பின்னவ்வா
றீனத், திருந்துபொசித்திடவறியாச்சாட்சியையான்மாவென்றிசைத்திடுத
ல்செவ்வையலப்பாடுப்பழிருணமும், பொருந்துதனதாயொப்புக்கொண்டு
பொசிக்கின்றபுத்திரனையான்மாவாமிவனுக்குமேலாய்த், திருந்துகின்றபிரி
யவஸ்துவொன்றிலையாமென்னிற் றெரியமுன்சொல் விவேகமெலாம்விட்டு
மறுபடியும். (௨௩)

இப்படிச்சங்கித்தவனுஞ்சீடனே பிரிதிவாதியோவெனவறிந்தேயிருவகைக்
குமேற்க, வொப்புறவேசொலவேண்டுஞ் சீடனுக்குமுன்னேயுரைக்கிறேம்
பிள்ளைவருமுன்னுமேபிள்ளை, செப்பமுறவில்லையெனவே துக்கங்கெற்பத்திற்
சேர்ந்தாலும்விழுந்துபோமெனத்துக்கநிலைத்துத், தப்பிடாதுரிற்பிறந்துபி
ழைத்தலவோவென்றுதான்றுக்கம்பிறந்தபின்புகணம்பறவைதோடம். (உச)

முதலானதாற்றுக்கங் குமரனவனானான் முடிவிலூட்டியினாலேதுக்கமாம்பூ
ண, விதமாசப்போட்டுவித்தாற்படிக்கிருனில்லையெனத்துக்கம்வித்தைவரி
ற்கல்யாணஞ்செய்யப், பதமிலாத்துக்கம்வருமெவ்வனம்வந்தடையிற்பரதா
ரகெமனமதுபண்ணுவதாற்றுக்கஞ், சதமானகுடும்பியேலவன்றரித்திரத்
தைச்சார்தலாற்றுக்கமவன்றனவானாயிருந்தால். (உரு)

தானவைபாராதிறப்போமோவெனத்துன்பிங்ஙன் றனையன்முதலானதுவை
ப்பகுத்துப்பார்த்தறியி, னீனமுறுதுக்கமேபிரிதிவாதிக்குதென்னவறிசுபார்
வந்தானேயெனவேகூற, வூனமுறுபிரிதிவாதிக்குமேசொல்வதுரைத்தசங்
கைகுதர்க்கமதாலிகபரமில்லாமற், றீனமுறக்கெட்டுப்போவாயெனவேசா
பஞ்செப்புவதாமெனவறிவாயிவர்கோபித்ததனால். (உசா)

வாதிதனக்கானியேதெனிற்பிரமவித்தாய்மருவுகின்றேன்பிரமவடிவாற்சீட
ன்றனக்கு, நீதியிலாப்பிரிதிவாதிக்குமிவர்பண்ணுநிக்கிரகமனுக்கிரகம்பலி
க்குமெனலாலு, மோதுகின்றபிரமவித்துக்களைவிசமசங்கை யோதினோனா
யிரமாஞ்சதுரியுகம்வரைக்கு, மேதமுறுரவுரவமாநரகமதிற்கிடப்பனென்கி
ன்றபுராணமதின்வசனத்தினாலும். (உஎ)

பிரிதிவாதிக்கனர்த்தம்வருமெனவேயுணர்வாய்பிறங்கினிமேற்சித்தார்ந்தமே
தாச்சுதென்னி, லரிதாகச்சொன்னபடிபகுத்தறிந்துசாட்சியானதானெவை
களினும்பிரியவஸ்துவென்றே, யுரியவானந்தமதிலெப்போதுங்களிப்போடு
றுபவர்க்கேமுத்தியெனச்சித்தாந்தமறிவாய், துரியவான்மாவுக்குச் சித்தி
னிலக்கணம்போற்சுகமதுவுஞ்சுபாவமெனிலூட்கரணந்தன்னில். (உஅ)

சித்துமாத்திரந்தோன்றிச்சுகந்தோன்றுதேதனாற் றிகழ்பிரகாசமுஞ்சுடலு
ஞ்சுபாவமாங்கனலின், மெத்தவுறுஞ்சூடதுதண்ணீரிலுமேபிரபை வீட்டி
னிலும்பிரிந்துகாண்கின்றதுவேபோலு, மூத்தமமாமணமலரின்ரூபரச கெ
ந்தமோரோரிந்தியங்களுக்கோரோர்குணந்தோற்றுதல்போ, னித்தமுறுமா
ன்மாவின்சிதானந்தந்தானுநிகழுமொவ்வோர்விருத்தியிலொவ்வொன்றாகவ
றிவாய். (உகூ)

எந்தவிருத்தியிலெந்தச்சுபாவமதுதோற்றுமென்னி னிருமலமானசாத்திகத்திஞன்ம, சொந்தமதாஞ்சித்துமானந்தமதுந்தோற்றுந் துகளானராசதத்திற்சுகந்தோன்ருதறிவா, யந்தமறுமிவ்வான்மானந்தமதைமுன்னேயறைந்த வத்தியாயமதிற்சொனயோகமன்றி, யிந்தவத்தியாயமதிற் சொன்னவிவேகத்தாலெங்ஙனஞ்சாதிப்பதிதற்களவையேதென்னின். (௫௰)

தாகமுறும்யோகமதாலுறபிரமமநுவே சாற்றுறுஞானமதாலுமுயரான்மானந்த, மாகவெளிப்படுமிதற்குப்பிரமாணம யோகமதனலேயடைகின்றபதஞ்சாங்கியத்தும், பாகமுறவடையலாமெனுங்கீதாவசனமபகருபிரமாணமாமெனவறிதிசாங்கியம், யோகமெனவிருவழியாய்ப்பகுத்துச்சொல்வானேனெருபடித்தாயிருவருக்கும்பலன்வரலேனென்னின். (௫௧)

ஒருவருக்குயோகமதிங்கெளிதாகவிருக்கு மொருவனுக்கு ஞானநிச்சயமெளிதாய்வருமென், றருமையுடன்மனதிலேகண்டிரண்டுவழியுமறைந்தனரப்பகவானும்யோகியுடன்ஞானி, யிருவருக்குஞ்சின் மாத்திர மெனுஞானமோடமிராகாதியில்லாமைவிடயவருச்சிதமுஞ், சருவினுல் வளர்கின்றதேகாத்தியாசந்தவிர்தல்சரியான்மோட்சமதுஞ்சரியாமறிவாய். (௫௨)

தொய்தமெலாந்தோற்றுகையாற்புத்திபிலேபட ாமற் ருேன்றுவதெவ்வாறென்னிற்புத்திக்கேற்கவுமே, நைதலுறுதொய்தமிலையெனவத்துவிதவானந்தமதிற்சொல்லுகிருேமான்மானந்தத்தை, யுய்தலுறவனுசந்தானஞ்செய்துநாளுமுலகமதைப்பாராதோன்காரியத்தால்யோகி, யையமறவாவனெளிதாகவுமேமோட்சமடைவனெனமந்தனுக்கிங்கனுக்கிரகஞ்செய்தோம். (௫௩)

பனிரொண்டாவது ஆத்மானந்தவிவேகவிலக்கணமுணாத்த

வத்தியாயமுற்றிற்று.

ஆக வத்தியாயம் ௰௨. க்கு திருவிருத்தம் ௫௱௩௮.

முத்துராமலிங்கசுவாமிகள்திருவடிவாழ்க.

---

பதின்மூன்றாவது

# அத்துவிதானந்தவிலக்கணமுரைத்த

## வத்தியாயம்.

அமுதம்போலுமரியபரம்பொருளமரராலுமளப்பரிதாயது *
குமுதமாகவேகூவியவேதங்கள்குறிகொணாப்பரமானுடரூபமாய்ச் *
சமதமாதிநிறைந்திடுவோர்க்கொருசச்சிதானந்தநீயெனவோதிட *
விமலமாகவேவன்னிவனந்தனின்மேவலாலவ்வடிகளைப்போற்றுவாம். (௧)

---

ஆக்கமுறுமுன்சொன்னயோகானந்தமதே யான்மசுகமாகட்டுந்தொய்தமுடன்கூடித், தேக்கலறவிருப்பவர்க்குப்பிரமவடிவெங்ஙன்சித்திக்குமெனின் வானமுதலாகத்தன்ன, தூக்கமுறுதேகபரியந்தமுளசெகங்களொருமிக்கத் தனக்குபாதானகாரணமாய், நீக்கமறவிருக்குமானந்தமதிற்றோற்றிநிகழானந்தத்திலிருந்தானந்தமதிலே. (௨)

இயல்பாகவிறப்பதனான்மிருத்தொழியக்கடமுமில்லையெனல்போலவானந்தமதைத்தவிர, வயலாகவில்லையெனவேதஞ்சொல்லுவதாலத்தொய்தம்பிரமமெனல்கூடுமெனவுணர்வாய், குயவனாலுண்டாக்கப்பட்டகடந்தானுங்குயவனாலுடைந்ததெனக்கூறுதல்போற்செகத்தும், வியனாகவரப்பிரமநிமித்தகாரணமாய்மேவுமெனின்மண்ணைவிடக்கடங்காணாததுபோல். (௩)

ஈங்குபிரமத்தைவிடச்செகத்திராததனா லியல்பாகநிமித்தகாரணமென்னக்கூடா, தோங்குபாதானகாரணமாகவேண்டுமுணர்குவாய்காரணத்தினாற்செகத்துவராமுன், பாங்காகவாரம்பவிவர்த்தபரிணாமம் பரவுமெதனாலென்னிற்பிதாவுக்குமகனா, நீங்கிடவேகண்டதுபோற்காரணத்தைவிட்டுநிகழுகாரியம்வேறுகாணாதபடியால். (௪)

உகமானநிரங்கிசத்தினாரம்பபட்சமுதவாதுபாறயிராவதுபோற்காரணமுஞ்சுகமானதன்னுருவுகெட்டுவேறுருவாய்த்தோன்றுதாற்பரிணாமபட்சமுங்கூடாதிங், கிகலானபழுதையேபாம்பாகத்தோற்றுமிதுபோலிங்குந்தன்னதுருவுகெடாமற்று, னகலாதுவேறுபோற்றோற்றுகையால்விவர்த்தமாவதுவேசித்தாந்தமெனவுணர்வாயானால். (௫)

ஊக்கமுறுநிரங்கிசவஸ்துவில்விவர்த்தந்தானுமுரைப்பதுகூடாதென்னினிரங்கிசமாயிருக்கு, நீக்கமறுவானமதிற்றலநீலாதிகளைநிகழ்வுறவேகற்பித்தல்போலநிரங்கிசமாய், வீக்கலறவிருக்கின்றபிரமமதிற்செகத்துவிவர்த்தமெனக்கூடுமறியசங்கமாயிருக்குந், தேக்கலுறுபிரமமதுசெகத்தையுமெவ்வாறுசிருட்டிக்குமென்னிலவையுத்தியொடுஞ்சொல்வாம். (௬)

எழிலுளவிந்திரசாலக்காரனுடமாயையிந்திரசாலந்தனையுங்கற்பித்தல்போல வழுவில்பிரமத்திலொருமாயையுண்டங்ககுதேமருவுசெகங்கற்பிக்கும்பிரமமலவுணர்வா, யழிவுறுமாயாசத்தியொன்றுண்டத்தோடேயத் தொய்தங்கெட்டுதெனிலந்தச்சத்தியுமே, யிழிவிலாப்பிரமத்தைத்தவிரவேறல்லவிதனலைத்தொய்தத்துக்கானியிலையுணர்வாய். (௭)

எதமுறுமந்தச்சத்தியுமிலையாமென்னி னியலுறுகாரியம்வரலாற்சத்தியுண்டென்றுணர்வாய், பேதமுறுமிந்தவசங்கதமெங்கேயாலும்பிறங்கிடவேகண்டதுண்டோவெனிற்கனலிலிருந்து, சாதமுறுதாகசத்தியக்கினிதானுயுஞ்சாருமணிமந்திரத்தாற்கனற்குவேறாயு, நீதமுறக்காணவிலையோவறிவாயிங்ஙனிகழூபிரமமுமல்லப்பிரமத்தின்வேறாய். (௮)

ஐயமறவிலையாமென்கிறமாயாசத்தியவையினிடத்திருப்பதற்குமானமேதென்னின், மெய்யானபிரமத்திலனந்தசத்தியுண்டாமெனும்வேதம்வாசிட்டம்பிரமாணமறிவா, யுய்யும்வணம்வாசிட்டமுரைப்பதெவ்வாறென்னிலோதுமொருநாதரோபிரமத்தினிடத்திற், றையலுறுமனந்தசத்தியுண்டந்தவனந்தஞ்சத்தியினாற்பிரமமேவுலகமதாய்த்தோற்றும். (௯)

ஒப்பாகத்தேகமதிற்சிற்சத்திமருத்திலுறுஞ்சலனசத்திகல்லதனிலேகடினந்தப்பாதுசெலமதனிற்சீதசத்திகனலிற்றாகசத்தியிதுமுதலாயனந்தசத்திதானுங், கப்பிலாப்பிரமமதிற்காரியத்தினாலேகாண்குதென்றுஞ்சிருட்டிக்கிமுன்னிந்தச்சத்தி, யெப்படியோவண்டமதிற்சூக்குமமாய்ப்பாம்பங்கிருப்பதுபோலவும்விதையிற்றருவிருத்தல்போலும். (௰)

ஓலமுறக்காண்பியாதப்பிரமந்தன்னி னுறுங்காலதேசவிசித்திரத்தினாற்பாரிற், சீலமுறுபயிர்கண்முளைப்பதுபோலப்பிரமத்தினுஞ்சத்தியொவ்வொருகாற்செகத்தெனும்ரூபமதாய், மாலமரவிளங்கிடுமென்றுதியிலேமனதுவந்திடும்பின்பெந்தமோட்சங்களுமுண்டாகுஞ், சாலமுறப்பின்பாகாசாதிசிருட்டியுமேதருவதெனுங்கிரமமெலாம்வாலகாக்கினைபோல். (௰௧)

ளவியமாமூடருக்குச்சொன்னதேயல்லா லல்லவேயுண்மையெனச்சொன்
னுமொன்றறிவாய், நவ்வியமர்வாலக்காக்கினையாவதேதுநவிலுமெனக்கேட்ட
யிராகவருடையசங்கைக், கெவ்வமுறுமசத்தென்னும்பட்டணத்திலேமூன்
றிராசகுமாராளுண்ட ங்கிரண்டுபேரினிமேற், கௌவுதலாம்பிறப்படையப்
போறார்களொருவன்கருப்பத்தின்வரப்போறான்புண்ணியர்களாகும். (௰௨)

அக்கமூறுமூவனாயகுமரர்களும்வேட்டை யாடப்போமிடந்தனிலேமாகம
தினல்ல, மிக்கதோப்பிருக்குதெனவூமைசொலக்கேட்டுமேவுமந்தவிடத்தி
ற்போய்த்தோப்பைக்கண்டதிலே, தக்கமுயற்கொம்பைவெட்டிச்சிங்கநாத
மதாய்த்தானூதிக்கொண்டினிமேல்வரப்போறநகரி, லெக்கலுறவின்றைக்
குப்பிரவேசித்தார்களென்றுமுலைத்தாதிசொன்னகதையைக்கேட்டதனை ()

கருதியவிசாரமற்றகுழந்தையுமெய்யென்றேகருதினன்சமுசாரகற்பனையி
வ்வாறு, சுருதிவிசாரணையில்லாமூடருக்குமெய்போற்சொல்லியதென்றிது
முதலாமுபகதைகளோடே, வருமாயாசத்தியுடவிசாலமதைவசிட்டர்வழு
த்தினரிராகவருக்கச்சத்திதனையே, பொருந்த லுறநாமும்நிருபித்தோமென்
றறிவாய்புகலுறுமாயாசத்திக்கிலக்கணமேதென்னின். (௰௪)

காரியமாதாரமிரண்டுக்கும்விலட்சணமாய்க் காணுமறியவையிரண்டுமேது
சத்தியிதற்கு, நேரில்விலட்சணமென்பதெவ்வாறிம்மூன்றுநிகழ்த்துமொரு
திட்டாந்தந்தனிற்பகுத்தேயென்னின், ஞேரின்வாய்குவிந்துபண்டியுண்டா
கியிருக்குமொருகடங்காரியமென்பதைந்துகுணமுடைய, வாரியமாமண்
டானேயாதாரமென்பததிற்சத்தியிருவடிவுமற்றிருக்குமறிவாய். (௰௫)

கிளரிரண்டிலக்கணமுமற்றசத்திதானுங்கிளைத்தெவ்வாறிருக்குமெனவறிவ
தெங்ஙனென்னிற், றளர்தலுறுமநிர்வாச்சியம்மெனவேயுணர்வாய்சாருமிந்
தக்கடசத்தியின்னபடியென்றே, யளவிடப்படாதபடியாலதுவேயில்லையாகு
மெனிற்காரியவுற்பத்திக்குமுன்னே, வளரிந்தச்சத்திதனக்காதாரமானமண்
ணுக்குள்ளொளித்திருந்துநிமித்தகாரணமாய். (௰௬;

கீர்த்தியெழுங்குலாலாதிகளுஞ்சகாயமதாய்க்கிளர்ந்துகூடினவுடனேவிகா
ரமாயிருக்கும், வார்த்தையுறுகடவடிவாய்த்தனக்காதாரமதாமண்ணுக்கும
ண்ணென்னும்பேரையுமேமாற்றி, யார்த்தலுறுகடமென்பததனாலேசத்திய
ல்லவெனக்கூடாதென்றறிமண்ணிற்சத்தி, பேர்த்திடுகாரியமாகக்குயவன்
வேண்டுதல்போற்பிரமத்திற்சத்திசெகமாவதற்குமேதான். (௰௭)

குலவுகின்றநிமித்தகாரணம்யாராமென்னிற் கூறுகடசத்தியுளமிருத்துசுயஞ்செடமாய், நிலவுவதாற்சைதன்னியமாயிருக்குங்குயவனோடுமாயாசத்தியுடைத்தானபிரம, மிலதுசுயஞ்சுத்தசைதன்னியமாதலினாலெப்போதுநிமித்தகாரணம்வேண்டாமறிவாய், விலகலுறமண்ணென்றுஞ்சத்தியென்றுமவைபின்விகாரமதுகடமென்றுங்கூறவிலையாரும். (௰௮)

கூறுமூலகதினியாவுங்கடமென்றுகூட்டிக் கூறுகின்றாரிதனிலேகாரணமேதென்னி, னீறானவிசாரமிலாவஞ்ஞானமூல மென்னவறிவிசாரமேதகுதுடையோனெத்தை, மாறிலாக்கடமென்பனெனிற்குயவன்றொழிற்குவருமுன்புமண்ணெனும்பேரோவழங்கலாலே, கோறுகடசத்தத்துக்கருத்தமலமிருத்துக்குலாலவியாபாரத்தின்பின்புகடமென்றே. (௰௯)

கெடுதலறவழங்கினபாண்டமுமண்ணைத்தவிரக்கிளர்தலிலாததனாலேகடசத்தந்தனக்கு, நடுவானவருத்தமண்ணைத்தவிரவலவென்றுநாடுதலேவிசாரமிவ்வாறாராய்ந்தபுருட, னடைவானகடஞ்சத்திபோலநிர்வாச்சியமேயானதாற்சத்திகாரியமென்பனறிவாய், விடுமநிர்வாச்சியமதையுஞ்சத்தியென்றுசொல்லவேண்டுமலாற்கடமென்றுநிறுவகிப்பதெங்ஙன். (௨௰)

கேதமிலிந்திரசாலக்காரனுடசத்தி கெழுமையுறக்காண்பியா தப்பொழுதுமாயை, யேதமறக்காண்பிக்கிற்கெந்தருவசேனையென்றுசொலப்படுகிறாப்போன்மண்ணிற்சத்தி, சாதமுறுகாரியமாய்க்காட்டாதபொழுதுசத்தியென்றுங்காண்பித்தபொழுதுகடமென்று, மோதலுறக்கூடுமெனவறிந்திடுவாயிந்தயுக்திக்கிப்பிரமாணமேதென்னிற்சொல்வாம். (௨௧)

கைதவமாயிருக்கின்றமாயைமயமெல்லாங் கழறுகின்றவாக்குமாத்திரமேயல்லாம, லெய்தலுறுமருத்தமேயிலையவிகாரமதாயிருக்கிறமண்மாத்திரமேபொருளென்றுவேதக், தைதலுறச்சொல்லுறாதென்றறியொருகாலத்திற்சத்தியென்றுமொருகாலங்காரியமாமென்றும், பொய்யதுறக்காண்கின்றகடமெய்யென்றங்கீகரியாதபோதுவிவகாரமெங்ஙன்கூடும். (௨௨)

கொடியவிருவகைக்குமாதாரமதாமண்ணைக் கூடியேயிருப்பதனால்விவகாரங்கூடு, மடருமண்ணைவிட்டுப்பார்த்திடின்வாக்குமாத்திரமல்லாமலிரண்டிடத்துமொருபடித்தாயிருக்கும், விடலிலாமண்போலேபொருளாகாதறிவாய்விகாரமென்றுங்கடமென்றுஞ்சொல்லுகின்றபொருளே, யிடருறுபொய்யாயிடின்மண்ணெனவறிந்தவுடனே யேன்காணாதேபோக வில்லையெனிற்சொல்வாம். (௨௩)

கோதுபெறுவிகாரமொருபொருளுமலவுளதாய்க் கூறுவதுமலவென்றுகாணப்பட்டதுவே, நீதறவேதோற்றுமற்போனதெனவறிவாய் திகழுகாரியம் பொய்யென்றறிந்ததனாற்பலன்று, னேதுசொலுங்காணுமற்போகவேண்டாவோவெனிற்புருடனிழறண்ணீருட்டலைகிழாக, வாதலெனத்தோற்றினுமேயவனிலைப்பொய்யாமென்றறிவதுபோற்காரியந்தோற்றினும்பொய்யாமென்றே. (உச)

கவ்வையறவறிவதுவேபிலையெனப்போனதுவாங் காணுமற்போறதலவத்துவிதவாதிக், கிவ்விதமாயறிதலேபுருடார்த்தமுணர்வாயிந்தயுத்திபோனொருஞ்செகத்தையும்பொய்யென்றே, யெவ்வமறவூன்றிப்பார்த்தறிந்திடுவாயென்றேயெங்கேயாகினுஞ்சொல்லியிருக்குதோவென்னி, னெவ்வுமண்பொன்னிரும்பாகுமூன்றுதிட்டாந்தத்தினுறுகாரியங்களெலாம்பொய்யாமென்றறிதல். (உரு)

சந்தமுறுசாமவேதஞ்சொல்லுகறிவாய் சாருகடங்கத்திநகையெனப்பரிணமித்தல், சிந்தைசெயின்விவர்த்தபட்சந்தனக்குமேபெங்ஙன்றிட்டாந்தமாமென்னிற்பாறபிராவதுபோற், பந்தமுறப்பரிபாகப்படாதுமண்ணாதிகளின்பகருவிகாரங்கெடினக்காரணரூபமதா, யந்தமுறவமருவதால்விவர்த்தபட்சந்தனக்கேயறையலாந்திட்டாந்தமாமெனவேயறிவாய். (உசு)

சாருமிந்தப்படிசெகத்தையேதாகக்காணத்தக்கதெனிற் காரியங்களியாவுங்காரணமாய், நேரும்வணங்காணவேண்டியதெனவேயறிவாய்நிகழுஞ்சத்தியத்தையறிகின்றவிடமதனி, லேரிலசத்தியமென்னுமறிவெங்ஙன் வருவதெனின்மண்ணென்றறிந்தவுடன்விகாரமசத்தியமாய்ச், சீருறவேயறிகின்றாற்போலவெனவறிவாய்திகழ்மண்ணென்றேதுக்காயறியவேண்டுவதாம். ()

சிதையும்விகாரத்தையேன்மறுக்கவேண்டுவதாஞ் செப்பெனினுள்ளதையுள்ளபடிபார்ப்பதகுதே, புதையமுறுபுருடார்த்தமில்லதையுண்டாமென்றேருருவதேயனர்த்தமெனவறியானலந்த, விதையிலாப்பிரவஞ்சமெலாஞ்சோதித்திடவே வேண்டுமெனி னேருகடத்தை மண்ணெனப்பார்த்தறியின், வதையுமிலோகத்தினுளபாண்டமெலாமிருத்தாய்வகுப்பறல்போலொருவிடயந்தனையூன்றிப்பார்த்தே. (உஅ)

சீரானபிரமமேயெனவறியிற்சகலசெகத்துமே பிரமமெனவகுப்பறுமென்றறிவா, யேரானபிரமத்தினிலக்கணமேதுலகவிலக்கணமேதெனிற்சச்சிதானந்தமூன்று, நேரானபிரமவிலக்கணநாமவுருவாய்நிகழிரண்டுஞ் செகத்தினிலக்கணமாமென்றறிவாய், பேராதகடதிட்டாந்தந்தனைப்போலிங்கும்பிறங்குசத்தியாதுசத்திக்காதாரமியாது. (உகூ)

சுழ்லுசக்திகாரியவிகாரமதுயாது சொல்லுகின்றவிம்மூன்றும்பகுத்துக்கா
ட்டென்னிற், பழுதிலாதின்னபடியென்றுநிருபவிக்கப்படாததாமாயையதே
சத்திபிரமந்தான், கழலுமந்தச்சத்திக்காதாரமதாநிருவிகாரமாம்பிரமத்திற்
கற்பிக்கப்பட்டே, யெழலானநாமரூபந்தானேசத்தியின்னுடையகாரியவிகா
ரமெனவறிவாய். (௩௰)

சூழுமிந்தமாயையெந்தவடைவின்விகாரத்தைச் சூழ்ந்ததெனிற்சிருட்டிக்
குமுன்னின்னதென்று, கேழுறக்காணுதவ்வியாகிருதமாகக்கிளருமிந்தமா
யைமுந்தியாகாயமென்னும், காழுடையவிகாரத்தையடைந்ததெனவறிவா
ய்கடவிகாரத்துக்குமண்சொருபம்போல, வாளுறுமாகாயவிகாரத்துக்குப்
பிரமம்வடிவமாமென்பதையும்பகுத்துக்காட்டென்னில். (௩௧)

செவ்வியதாஞ்சச்சிதானந்தமதைத்தவிரத்திகழுமவகாசமெனுமுருவமான
தம்கு, நவ்வியதாமாகாயமெனுநாமந்தனக்குநவிலுருவிலாமையினுனுமரு
பங்கள், கவ்வுசிருட்டியினுண்டாய்ப்பிரளயத்திலழியுங்காரணத்தாலுடைய
முமேமித்தையென்றுமண்போல், வவ்வுசச்சிதானந்தமெப்போதுநிலையாய்
மருவுவதாற்பிரமமதேயுளதென்றுமறிவாய். (௩௨)

சேருமாகாயத்தின்பின்புவருகின்றதிகழ்விகாரங்களேததிற்சத்தாதியையு
நேருறவேகாண்பதெவ்வாறெனின்மருத்துவனனீர்நிகழ்பூமியோஷதிகழன்
னமொடுபுருட, ஞருமிருகாதியெலாம்விகாரமென்ப திவ்வாறனேகவிதமு
றுநாமரூபங்களெல்லாஞ், சாருகின்றசத்தாதிவிடவிலதாலியாவுஞ்சச்சிதா
னந்தமென்பதையமிலையுணர்வாய். (௩௩)

சையமெனுஞ்சச்சிதானந்தமதையகலாத் தன்மையாலுருநாமநித்தியமாமெ
ன்னின், னுய்பவுற்றுப்பார்க்கிலிலாநாமரூபங்களுளதாயிராமலந்தப்பிரமமதி
ற்றோற்றி, யையமறவழிந்திடுவதாமதைவிவேகமதுபண்ணியனுபவமாயறி
ந்துகொளென்றோதச், செய்யவிவேகம்பண்ணிப்பார்ப்பதெவ்வாறென்னிற்
றிணாநுணாகள்சமுத்திரத்தின்வந்தவையினின்றே. (௩௪)

சொல்லுமதிலயமாதல்போலவெனவறிவாய்சொன்னதெங்ஙன்பார்த்தாலுநா
மரூபங்க, ளல்லலுறமுன்னிற்குததுவறவுபாயமறையுமேனின்வழித்துரும்
புபோனுமரூப, மெல்லையறவருமதனைக்கூர்மையாய்ப்பாராதெப்போதுமவ
மதிபண்ணிப்போட்டுப்பார்க்கு, மல்லலுறுதிசையெல்லாஞ்சச்சிதானந்த
வடிவமாயாதரவோடனுட்டிக்கும்போதே. (௩௫)

சோகமதாமுருநாமமின்னவிடமென்றுதோன்றுதுபோயத்துவிதநிலையேதி
டமா, யேகமுறுசீவன்முத்தனுவனெனவுணர்வாயெழுநாமரூபம்பொய்யெ
ன்னுமுறைப்பெகனுன், மோகமறத் திடப்படுவதெனினுமரூபமுழுதையு
மேகண்டவுடன்மண்ணிலுறுஞ்சத்தி, பாகமுறவளவில்பொய்யைச் சிருட்
டித்தாற்போலும்பரவுநித்திராசத்திகூடாததென்னும். (௫௬)

சௌரியமாஞ்சொற்பனத்தைச்சிருட்டித்தாற்போலுந் தயங்குபிரமத்திடத்
தின்மாயைசிருட்டித்த, பௌரிசமாம்பொய்யல்லோவித்தனையுமென்றுபக
ரெங்நேரமும்பார்த்தேயதிசயமுறுமற், கௌநாம ரூபம்பொய்யென்றுதிட
மாகுங்காண்பாய்நித்திராசத்தியெப்படிக்கூடாத, தௌவுசொற்பனத்தை
யுமேசிருட்டிக்குமென்னிற்சார்கனவிற்றுன்வானமதிற்பறக்கமேலும். (௫௭

தன்முடியைவெட்டித்தன்கைதனிலேதூக்கித்தான்போகவொருகடிகைக்கு
ள்ளளவில்வருடம், வன்மையுறவந்துமேபோகவிறந்தொழியுமருவுபுத்திரா
திகடான்றிரும்பியும்வந்திருக்க,வின்மையுறக்காண்பதெலாங்கூடாததொழி
ல்களில்லையோவெனவறிவாயிதனுலேயந்த, நன்மையுறுபிரமவிசாரங்களே
தாச்சுநவிலுமெனினித்திரைக்கித்தனைசத்தியிருந்தால். (௫௮)

தாவுமாயாசத்திநிருவிகாரமதாய்ச்சாருகின்றபிரமத்தினிடத்திலேசெடமு,
மேவுசிதாபாசனெனும்விகாரமதுதனையும்விளங்கவேகற்பிப்பததிசயமன்றறி
வா, யேவுமிந்தவிகாரமதும்பிரமமுமேகலந்திங்கெப்போதுந்தோற்றுகின்ற
ததிலொன்றுமெய்யும், பாவுமொன்றுபொய்யுமாய்ப்பார்ப்பதெவ்வாறென்
னிற்பரவுமெங்குஞ்சரியானபிடவையுண்மையெனவும். (௫௯)

திகழுமதின்வேறுவேறுகவேதோற்றுஞ்சித்திரங்கள்பொய்யெனவுமறிகின்
றுப்போலத், தகமையுறவெங்குமேசரியாகத்தோற்றுஞ்சச்சிதானந்தமேயு
ண்மையென்றுமதிலே, மிகவுமேதனித்தனியாய்காணுமரூபமித்தையெ
ன்றுங்கண்டுபேட்சிப்பதெனவறிவாய், சுகமிலாத்தொழிலுடன்பட்டவனே
தானகத்தோற்றுகையாற்றனையசங்கனெனவறிவதெங்ஙன். (௬௰)

நிதாகக்கூபமதின்றலைகீழாய்த் தோற்றித்திகழுவதைத்தானல்லவெனத்தள்
ளிக்கணாமே, லாதமுறவிருக்கின்றதன்னைத்தானெனவேயையமறவிருப்ப
துபோன்மூன்றவத்தைதனிலுஞ், சாதமுறுகருத்தாவாயோடியலைகின்றத
ன்னைத்தானல்லவெனவுபேட்சையடைந்திதற்குக், கோதறுசாட்சியதானசி
த்தைத்தானென்றேகுற்றமறக்கண்டிருக்கவேண்டுமெனவறிவாய். (௬௧)

துக்கமுறமனதிலே யாவசியமாகத்தோன்றுலகந்தன்னையுமேபுபேட்சிப்ப
தெங்ஙன், மிக்ககணத்துக்கொருக்கால்வெவ்வேருய்வருகுமேவுமனோராச
சியத்தைச்சகலருமம்மட்டி, னிக்கறவுபேட்சித்தல்போலவாலிபத்தினெவ்
வனம்வேண்டினும்வாராதவையில்வார்த்தீக, நெக்காகவேண்டுமென்ருலு
ம்வாராமனேற்றிறந்தோனின்றைக்கிவரவெனில்வாராமல். (௪௨)

தூரணமாய்முன்போனதினமதனைக்தானேசூழுமின்றுவேண்டுமெனின்வா
ராமலதுதா; ஞருமனோராச்சியம்போலங்ஙனேகண்டதங்ஙனைபறிவதனு
ணமரூபங்கள், விரியமாய்த்தோற்றுகினும்பொய்யெனநீக்கிடவேவேண்
டுமெனவறியிங்ஙன்சருவாத்மனுகச், சாருலகந்தன்னைபுபேட்சிக்கவேசொ
ன்னற்சரீரநிருவாகமெந்தவிதநடக்குமென்னில். (௪௩)

தெரிகின்றகூத் தாடிபோலவாசனையாற்பினமுமேநிருவாகநடக்குமெனவறி
வாய், புரிகின்றவொருகாலம்வாலனென்றுமொருகாற்புகல்கிழவனென்று
மேயனந்தவிதமாகப், பிரிகின்றதேதானுய்க்காண்பதனுற்ருனும்பிறங்கேகசீ
தியாஞ்சைதன்யமென்று, விரிகின்றமனதிலெங்ஙன்றிடப்படுவதென்னில்
வெவ்வேறுசெலப்பிரவாகங்களெடுத்தாலும். ௪௪

தேற்றமுறநடுவிலேயசையாமலிருந்து திகழ்கின்றபருங்கற்போனுமரூபங்க
ளேத்திடவேவெவ்வேறுபரிபாகப்படினு மேகமுறுசின்மாத்திரநாமெனவே
யறிவாய், சாற்றுமிப்பாவனைமுதிர்ந்தானிலையெவ்வாறிருக்குஞ் சாற்றுமெ
னிலாடியிலேதோன்றுநகர்போல, வாற்றுசச்சிதானந்தமதிற்செகத்துத்தோ
ற்றுமறிநாமரூபமதேமுந்தித்தோற்றுவதால். (௪௫)

தைத்ததனையெங்ஙனுபேட்சிக்கின்றதென்னிற்றருமாடிதோன்ருமல்விம்பங்
தோன்ருபோற், சுத்தசச்சிதானந்தந்தோன்ருமல்விம்பந்தோன்ருதான்மு
ன்றேன்றுஞ்சத்தாதிதனையும், பொய்த்தலறபார்த்துமேநாமரூபத்திற்போ
காதுமனநிறுத்திற்றேய்தமதுந்தொலைந்திங், கெய்த்தலறுமத்துவிதநிலைதா
னய்மிஞ்சுமிந்நிலையிலியாவருநின்றிளேப்பாறக்கடவார். (௪௬)

பதின்மூன்ருவது வத்துவிதானந்தவிலக்கணமுனாத்த

வத்தியாயம்முற்றிற்று.

ஆகவத்தியாயம் ௰௩. க்கு திருவிருத்தம் ௫௱௮௩.

முத்துராமலிங்கசுவாமிகள்திருவடிவாழ்க.

---

## பதிநான்காவது

# வித்தையானந்தவிலக்கணமுரைத்த

## வத்தியாயம்.

பொன்னிறதிபோலவொளிர்புகழுமதுநதிசேர் *
வன்னிவனமதனினொருபரசொருபமாயை *
யின்னலறவத்துவிதம்யார்க்குமருள்செய்ய *
மன்னுமொருகுருவடிவின்மலரடியைநினைவாம். (க)

வேறு.

வரமானயோகமான்மானந்தமுடனே மருவுதொய்தமித்தையென்னுஞ் சிந்தையிம்மூன்றுலு, முரமானபிரமவானந்தமதுகண்டோனுடையவித்தையானந்தமதுசொல்வோமதுதான், றிரமாகவேததுதானெத்தனையாயிருக்குஞ் செப்புமெனின்விடயவானந்தமதுபோல, விரவலுறுவித்தையானந்தமந்தக் கரணவிருத்திரு பமதாகவேயிருக்குமென்றும். (உ)

துக்கவொழிவென்றுங்காமியலாபமென்றுஞ் சொல்கின்றகிருத கிருத்தியமென்றுமடையத், தக்கதெலாமடைந்திடுசந்தோடமென்றுநான்காய்ச்சாருமறிதுக்கமுமெத்தனைவிதமாமதுதா, னெக்குஞானத்திலெந்தவிதம்போருங்காமியமோருமிடத்தெத்தனையாமதுஞானத்தாலே, யக்கமுறவடைந்ததெங்ஙன்கிருத்தியமெத்தனையாமதுஞானத்தாலெங்ஙன்செய்துமுடிந்ததுவாம்

முடிவிலாதடைகின்றபுருடார்த்தமேது மொழியுமவைஞானத்தா லடைந்ததெங்ஙனென்னி, லிடமானவிகலோகபரலோகதுக்க மென்றுவிருவிதமாகவிருக்குமான்மாவே, படருநாமென்றறிந்தாற்பொசிக்கிறவனில்லாப் பண்பாலுமுருநாமம்பொய்யெனவேயறிந்தாற், றடமுறுபோக்கியமிலதாற்போகபோக்கியத்தைச்சார்ந்துவருமிகலோகதுக்கமதுபோகும். (ச)

அவிருறுதாமரையிலையிற்றண்ணீரொட்டாபோ லறிஞரைக்காமியகருமம்பற்றுததாலுந், தவனமுறக்கினியிலிட்டபஞ்சுபோன்ஞானி தனக்குளசஞ்சிதகருமம்வெந்தொழிந்ததாலும், பவமுறுபுண்ணியபாவசிந்தனையால்வருகும்பரலோகதுக்கம்போமெனத்துக்கநிவிர்த்தி, நவிலுவதுகாமியமும்பதினென்றுமவையுநாடுமிடத்தழகிளமையுடையவனுயனந்தம். (ரு)

திடமுடையகாத்திரமாய்ப்பஞ்சாசட்கோடி செகமெல்லாமொருகுடைக்கீ
மூண்டுபொசித்திடுதெ, லடவுடையவொருமனுடானந்தமிந்தக்கற்பமதிற்செ
ய்யும்புண்ணியத்தாற்கெந்தருவனுவன், றடமுடையவவன்மனுடகெந்தரு
வனவன்மூன்றழுவுமானந்தமனுடானந்தமதிலே, கடவுடையநூறுபங்கிங்க
திகமாம்பூர்வகற்பமுளபுண்ணியத்தாற்கெந்தருவபதத்தை. (௬)

அடைதலுறுமவன்றேவகந்தருவனவன்ற னனந்தமவனிலுமேநூறுபங்கின்
கதிக, மிடைதலுறுமிதினூறுபங்கதிகம்பிதிர்க்கண் மேவுலோகத்தொருவ
னனந்தமிதிலே, யுடைதலறநூறுகொண்டதாங்கற்பாதியிலே யொருதேவ
னுய்ப்பிறந்தவாதிதேவன்று, னடைதலுறுமானந்தமிந்தக்கற்பத்தினயமேத
முதலானயாகமியற்றியுமே. (௭)

அரிதானபதத்தையடைந்தவன்கருமதேவனவனடைந்தசுகநூறுபங்கதிகமி
திலே, யுரியவொருதேவனதுசுகநூறுபங்கங்குயர்ந்ததிதினூறுபங்கங்கதிக
மிந்திரானந்தம், பரிவானவிதினூறுபங்கதியம்வியாழபகவனதுசுகமிதிலே
நூறுபங்கங்கதிக, மூரியவிராட்புருடசுகமிதினூறுகொண்ட தொருகுத்தி
ரான்மாவினதுசுகமாமிங்ஙன். (௮)

மனவாக்குக்கெட்டினதாஞ்சுகமேகாதசமாம் வாக்குமனதுக்கெட்டாவான்
மானந்தத்தைத், தினமுமுறுஞானிராகத்துவேசாதி சேர்ந்திருக்குமேகதச
வானந்தந்தனையுங், கனமிலாஞானி கக்குமனம்போலத்தோடங்கண்டுவெறு
த்ததனுலுமிந்திரசாலமதாய், வனமானவித்தனையுங்காண்கின்றதாலும்வரு
கின்றயாவருமாயிருந்துபொசிக்கிறதும். (௯)

நாமொருவனென்னுமனுசந்தானத்தாலு நவிலுமவர்போற்கிரம மன்றியின்
ஞானிக்குக், காமுறுவதாம்போகமுழுதுமொருமிக்கக்கலந்ததிகலோகபர
லோகமதைக்குறித்துந், தாமுறுவதாமோட்சமதைக்குறித்துந்தொழிகடா
மூன்றுவிதமிதுகளியாவுஞானிக்கி, யேமுறவேதீர்ந்தமுறியெனப்பண்ணி
முடிந்ததென்றுமடையப்போறபுருடார்த்தமதுதான். (௰)

பிரமமென்றுமதுவுமபரோட்சஞானத்தாற் பெற்றுவகுப்பற்றுதென்றுமிந்
நான்குவகையுந், திரமாகத்திர்ப்திதீபத்திலேவெளியாய்ச்செப்பியிருக்கின்
றததையிவ்விடத்திற்காண்பாய், பரமாகவிவ்வாறுவித்தையானந்தம்பகரப்ப
ட்டனவிந்தவிலையடையுமளவு, முரமுறவேபிரமாப்பியாசமதைநாளுமுருற்
றவேண்டிடுவதினிவிடயசுகஞ்சொல்வாம். (௰௧)

வித்தையானந்தவிலக்கணமுணாத்தவத்தியாயமுற்றிற்று

ஆக வத்தியாயம்-௰௪-க்குத் திருவிருத்தம்—௫௱௬௰௪

## பதினைந்தாவது

# விடயானந்தவிலக்கணமுரைத்த

## வத்தியாயம்

ஆரணத்தின்முடிவானதெய்வந்தானே யாரணமாறங்கமதன்பொருளையெல்லாம், பூரணமாய்ச்சித்தபரிபாகமான பொருவிலடியார்க்கருளாற்போதித்தற்குத், தாரணமாம்வன்னிவனச்சேத்திரத்திற்றயங்குமுத்துராமலிங்கசாமியாகும், பூரணமாமவ்வடிவைத்தியானஞ்செய்துபோக்கிடுவாஞ்செனனநிபெந்தந்தன்னை. (௧)

வேறு.

பிரமவானந்தமதிலேகதேசமதாய்ப்பிரமவானந்தமதனையடையும்வழியாக விரவுவதாம்விடயவானந்தமதைச்சொல்வாம் விடயானந்தமதேதாமருதெந்தவிதத்திற், றிரமுறவேகாணலாமெனின்விருத்திதனிலேநிகழ்பிருதிவிம்பசுகம்விடயசுகமதையும், பாவும்விவேகத்தினாற்காணலாமறிவாய்பகருமெலாவிருத்தியினுமச்சுகமென்னத்தால். (௨)

பிரதிவிம்பித்திடவில்லையெனிற்செலத்திற்றோன்றும்பிரதிவிம்பசந்திரனுமலமானசெலத்திற், றெரிதல்சாமானியமுநிருமலமாஞ்செலத்திற் றெளிவாயுந்தோற்றுதல்போற்சிறிதுவிருத்தியிலே, விரிவானசுகந்தோற்றுந்தோற்றாதுசிறிதுவிருத்தியிலென்றறியானுலுட்காரணந்தனக்கே, யுரியதங்கெத்தனைவிருத்தியந்தவிருத்திகளுக் கோதுமிலக்கணமேதா மென்னிலவைமொழிவாம். (௩)

முன்னுமந்தக்கரணத்திற்சாந்தமொடுகோர மூடமெனவிருத்திகண்மூன்றுளவாகுமதுதான், பன்னுவயிராகமொடுபொறுமையுதாராதிபகர்சாந்தவிருத்தியதாங்காமமொடுகுரோத, மன்னுலோபாதியுமேகோரவிருத்தியதாமயக்கமொடுகலக்கமுடன்பயமுதலானதுவு, முன்னுகின்றமூடவிருத்தியதாகுமறிவாயுறுபிரமம்விருத்திகளிற்றோன்றலெவ்வாறென்னின். (௪)

கருதுகின்றகோரமொடுமூடவிருத்திகடான் கலங்கினதாற்சித்துமாத்திரந்தோன்றுமல்லா, லருமையதாமானந்தந்தோன்றாதுசாந்தமானதுவுநிருமலத்தாற்சித்துடன்கூடத்தா, னுரியவானந்தமதுந்தோற்றுமெனவுணர்வாயோதுமிதிற்பிரமாணமாவதேதென்னிற், பருமையுறுகோரமொடுமூடவிருத்தியிலேபரவுமானந்தானுபவமதுதோற்றாதே. (௫)

சாந்தமதாய்விளங்குகின்றவிருத்தியிற்சுகாதிசயமொன்றுகாண்குதறிகோர மூடத்திற், போந்தசுகவனுபோகமில்லையெனலேனென்னிற்புகல்கிரகச்சேத் திராதிவிடயத்திலாசை, வாய்ந்திடவேமூளும்போதிதுநமக்குவருமோவா ராதோவெனுந்துக்கங்கூடவரலாலும், பாந்தமுறக்கிட்டாதேற்றுக்கமதிகம தாய்ப்பற்றுகின்றதாலும்விக்கினஞ்செய்தோன்பேரில். (சு)

வயிரம்வளர்த்தலினுலுமவனையுமேசெயிக்க வாராத போதமூகையாய்முடி கையாலுந், துயரமுறுகோரமொடுமூடவிருத்தியிலேதுக்கமேயன்றியொ ருசுகமில்லையென்றறிவாய், வியனுனசாந்தமெனும்விருத்தியிலேசுகமுபேவ லெவ்வாறென்னிற்காமியம்லகித்தவுடனே, யயர்விலாச்சாந்தவிருத்தியிற்சு கத்தின்பானமதிகமாய்ப்போகத்நின்விருத்திசாந்தமதால். (எ)

சுகமதுதான்றேற்றிடுதிங்கிவ்வாறுவிடயந்துடர்பாகக்கிடைத்ததற்குத்தகு ந்தவானந்த, மிகவுமேதோற்றிடுதாகையினுலேசாந்தவிருத்தியுளவிடமெல் லாஞ்சுகந்தோற்றுமதிலே, யகலுவதாஞ்சந்தேகந்தேவையில்லை யறிவாயவ் வாறுபிரிதிவிம்பஞ்செய்பிரமந்தனக்கே, யுகமறுசுபாபமுமெத்தனைவிதமா மெந்தவுபாதியிலெந்தச்சுபாபங்காண்பிவிக்குமென்னில். (அ)

சச்சிதானந்தமெனமூன்றுசுபாவங்க டானுண்டுமண்கல்லுமுதலானசெடத் திற், றுச்சமறுசத்துமாத்திரந்தோன்றுமல்லாற்றுலங்குகின்றசிதானந்தந் தோற்றுதுகோர, மச்சமுறுமூட மதின்மூன்னிரண்டுந்தோன்றுமானந்தந் தோன்றுதுசாந்தவிருத்தியிலே, யுச்சமுறுசச்சிதானந்தங்கூடோன்றுமுண ர்குவாய்மாயைக்கெத்தனைசுபாவமுண்டாம். (கூ)

திகழெந்தச்சுபாவமெதிற்றேற்றுமெனிலசத்து ச்செடந்துக்கமெனமாயா சொருபமூன்றசத்து, நிகழ்மனுட க்சொம்புமுயற் கொம்பிற்காண்பிவிக்கு நேருகின்றமண்கல்லாதியிற்செடங்காண்பிவிக்கு, முகள்கோரமூடமதிற்று க்கங்காண்பிவிக்குமோர்சாந்தவிருத்தியிலேசெடமும்போதமுமே, புகலு மிடத்திருக்கையினுன்மாயைபிரமத்திற் பொருந்தியேகலந்துகாண்பிவிக்கு மெனவறிவாய். (ய)

இவ்வாறுதோற்றுகிறமாயாரூபத்தை யெவ்வாறுபிரமமாய்க்காண்கிறதாமென்னி, னெவ்வாதவசத்தைமு யன்மனுடக்கொம்பெனவேயுபேட்சிக்கச்செடங்களையுநாமரூபத்தை, யவ்வியமாமெனநீக்கிச்சத்துமாத்திரமாயறிகமேற்கோரமொடுமூடவிருத்திகளைத், தெவ்வுடையதுக்கத்தைத்தள்ளியுமேசத்துஞ்சித்துமாய்ப்பார்த்திடச்சத்துவவிருத்திகளையும். (௰௧)

மேவுசச்சிதானந்தமாய்க்காணவிங்ஙன்விடயானந்தத்தின்வழியேமூடர்களுக்கும், வாவுபிரமானந்தமடையலாமறிவாப்மாயாரூபங்களையிவ்வாறுபகுத்தறிந்தாற், றுவுபிரமானந்தமெவ்வாறுகிடைக்குஞ்சாற்றுமெனினிந்தவிசாரத்தினாற்சித்தம், வீவிலேகாக்கிரத்தையடையுமதாற்பிரமவித்தைதிடப்படுமிந்தப்பிரமவித்தையதனால். (௰௨)

பேதவுபாதிகணீங்கிச்சச்சிதானந்தம்பிறங்குமகண்டாகாயமாய்த்தோற்றுமறிவா,. யோதுபெந்தமதற்கு பாதிகளேதாமந்தவுபாதியெதாற்போம்பிரமநிரூபாதியாக, வேதினாற்றேற்றுதெனிற்சாந்தமொடுகோரமூடமெனும்விருத்திமுதலானசெடமெல்லாந், தீதுறுபெந்தங்களுக்குபாதியோகமதாற்றிகழ்விவேகத்தாலிவ்வுபாதியெலாநீங்கும். (௰௩)

பின்னையொன்றுந்திரிபுடிகளில்லாதபடியாற்பிறங்குநிரூபாதியாய்ச்சுயம்பிரகாசமதாய், மன்னுபிரமத்துவமுமகண்டானந்தமதாய்மருவுகின்றதானாகவிளங்குமெனவறிவா, யின்னவணம்பிரமசுகமதற்குவழியாக விலங்கும்விடயானந்தமதனையுமேயுரைத்தோஞ், சொன்னவிதுவேவழியாயாவர்கண்மோட்சத்தைத்தொடருவரோலதையடைவரொன்றுமிதேயுண்மை. (௰௪)

நிகரிலாவேதசாத்திரவருத்தமியாவுநிகழ்வுறவே யாவருக்குந்திரட்டியுரைத்திருக்கும், புகரிலாவிந்நூலைச்சிரவணஞ்செய்பவரும்புகழ்குருவாலதினருத்தந்தனையாராய்பவருந், தகைமையொடுபடிப்பதனையன்புடன்கேட்போருஞ்சகலபலன்களுமுதவுந்தத்துவஞானத்தோ, டிகழ்விலாச்சீவன்முத்தியடைந்துமிகலோகத்திணையிலாத்தர்மார்த்தகாமமதுமடைவர். (௰௫)

சச்சிதானந்தவுருவானசங்கராசான்சரணமலர்வாழிவித்தியாரண்யவீச, னு
ச்சமுறுபதம்வாழியவர்மரபின்வந்த வோங்குறுசுப்பிரமணியதலைவனடிவா
ழி, பட்சமுறுநயினுத்தனழகையன்வீர பத்ரபதிமுத்தய்யதேசிகரும்வாழி,
யச்சமறவருளுகந்தகுருவாழியெனையுமாண்டமுத்துராமலிங்கவிறைவனடி
வாழி. (௰௬)

பூமீதினெழிலியெனஞானமதுதருமோர் புகழ்மடவாலயம்விளங்குஞ்செல்
வவிநாயகனுங், காமேவுகோவில்வளர்செல்வநாயகியுங்கருதினதையாவர்க
ளுமடையும்விதமாக, பாமேவுதேவநகரதனினுயர்வுறவேவருஞானக்கரை
கண்டநல்லூரிலொளிருந், தூமேவுமீனலோசனியோடுவாழுஞ்சுந்தரேசுர
ருமவரடியர்களும்வாழி. (௰௭)

பதினைந்தாவது விடயானந்த விலக்கணமுரைத்த

வத்தியாயம் முற்றிற்று.

ஆக வத்தியாயம் பதினைந்துக்குப் பாயிரமுள்படத்

திருவிருத்தம் ௯௱௰௧.

பஞ்சதசப்பிரகரணமுற்றும்.

முத்துராமலிங்கசுவாமிகள்திருவடிவாழ்க

திருச்சிற்றம்பலம்.